Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 19 செவ்வாய்க்கிழமை (04.12.2012) பக்கங்கள் 20 ஓசை – 065



















# கிளிநொச்சியில் சமுர்த்தி திட்டம் அடுத்த ஆண்டில் பூரணமாக அமுல்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் 2013 ஆம் ஆண்டு சமுர்த்தித் திட்டம் பூரணமாக அமுல்படுத்தப்படுமென ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா உறுதிமொழி வழங்கினார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி மீளாய்வு தொடர்பான சிறப்புக் கலந்துரையாடலின் போதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

இதன்போது இந்திய வீட்டுத்திட்ட கட்டுமானப் பணிகளை அரச அதிகாரி ஒருவர் கண்காணிப்பதுடன், அதற்கேற்ப வழிகாட்டுதலாக இருக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். இந்திய வீட்டுத் திட்டம் கிளிநொச்சி மாவட்டத்தில் 3 பிரதேச செயலர் பிரிவுகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதன் விபரங்கள் தொடர்பிலும் துறை சார்ந்தோரிடம் அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் மீள்குடியேற்றத்தை மேலும் அர்த்தமுள்ளதாக்கும் வகையில் தாம் செயற்திட்டங்களில் கவனம் செலுத்தி வருவதாகவும், தற்போது படைத்தரப்பினர் வசமுள்ள தனியார், அரச மற்றும் திணைக்களங்களுக்குச் சொந்தமான காணிகள் தொடர்பிலும் அமைச்சர்கவனம் செலுத்தினார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## மாணவியின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய்ப் பகுதியில் தூக்குமாட்டி இறந்ததாகக் கருதப்படும் மாணவி ஒருவரது சடலம் நேற்றுக் காலை யாழ்.போதனா வைத்தியசாலையில் பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாயைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை தமிழினி (வயது-16) என்ற மாணவியே இவ்வாறு தூக்கு மாட்டி இறந்ததாகத் தெரியவருகின்றது.

நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் இறந்த மாணவின் சடலம் விசாரணை

19 ஆம் பக்கம் பார்க்க

## பல்கலைக்கழகச் சூழலில் பதட்டத்தை தணிக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகச் சூழலில் பதட்ட நிலையைத் தணிப்பதற்கு வேண்டிய முயற்சிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியர்கள் சிலர் யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபருடன் இவ்விடயம் குறித்து பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

அத்துடன் படை அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டு நிலைமையை சுமூகமாக்குவதற்கும், கல்வி நடவடிக்கைகளைத் தொடர்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதேவேளை பல்கலைக்கழக மாணவர் விடுதிக்குள் இராணுவத்தினர் பிரவேசித்தமையும், 4 மாணவர்கள் கைது செய்யப்பட்டமை குறித்தும் இன்று யாழ். பஸ்நிலையத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் சாத்வீக ஜனநாயக

19 ஆம் பக்கம் பார்க்க

## வாகன இறக்குமதி வீழ்ச்சி

வாகனங்களுக்கான இறக்குமதி வரி அதிகரிக்கப்பட்டதனை அடுத்து, இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் எண்ணிக்கையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய சுங்கத் திணைக்களத்தின் தலைவர நொவில் குணவர்த்தன இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இறக்குமதி மூலம் 57 ஆயிரம் கோடி ரூபா இலக்கினை சுங்கத் திணைக்களம் கொண்டிருந்த போதிலும் அந்த இலக்கினை தற்போது எட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.முதல் அரையாண்டு காலப்பகுதியினுள் 38 சதவீதத்தையும் இரண்டாவது ஆண்டு காலப்பகுதியினுள் 62 சதவீதத்தையும் கொண்ட வரி பொதுவாக அறவிடப்படுவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இந்தநிலையில், சிமெந்து, மட்பாண்டம் மற்றும் உருக்கு போன்ற கட்டட பொருட்களின் இறக்குமதி கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

## யாழில் புதிய பொலிஸ் அத்தியட்சகர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக முகமட் ஜெப்றி நேற்று முதல் நியமிக்கப்பட்டுள்ளார். நீண்டகாலமாக கொழும்பு சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் கடமையாற்றிய இவர் தனது பொறுப்புக்களை

19 ஆம் பக்கம் பார்க்க

## ஷிராணிக்கு ஆதரவான சட்டத்தரணிகளின் மனு ஏற்பு

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப்பிரேரணைக்கு எதிராக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தாக்கல் செய்துள்ள அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உயர்நீதிமன்றம் நேற்று தீர்மானித்துள்ளது. உயர் நீதிமன்ற நீதியரசர் நிமல் காமினி அமரதுங்க தலைமையிலான நீதியரசர்கள் குழு முன்னிலையில் குறித்த மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி குற்றப்பிரேரணைக்கு எதிராக அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்வதற்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திற்கு உரிமை உள்ளது என நீதிமன்

19 ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பு எம்.பி. வைத்தியசாலையில்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வினோநோகராதலிங்கம் திடீரென சுகயீனமடைந்த நிலையில் கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வினோநோகராதலிங்கம் கடந்த சனிக்கிழமை இரவு திடீரென சுகயீனமடைந்ததாக எம்.பி.யின் செயலாளர் தெரிவித்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## நாவற்குழியில் விபத்து; பயணிகள் பலர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் இருந்து நேற்று அதிகாலை பயணிகளுடன் முல்லைத்தீவு நோக்கிப் பயணித்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டி நாவற்குழிப் பாலத்திற்கு அப்பால் உள்ள வீதியின் வளைந்த பகுதியில் யாழ்.நகர் நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் பஸ் வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்தனர். மேலும் சிலர் காயங்களுக்குள்ளாகினர். அந்த பஸ் வண்டியிலிருந்த ஏனையவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பினர். பஸ் வண்டிகளும் பலத்த சேதமடைந்துள்ளன.

நேற்றுக்காலை 6.15 மணியளவில் நடைபெற்ற இவ்விபத்தின்போது காயமடைந்த இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியரான அக்கரைப்பற்றைச்

19 ஆம் பக்கம் பார்க்க



# பிரதேச சபையின் அசண்டையீனம் வட்டு தெற்கில் குழம்பியது அமைதி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை தெற்கில் சனசமூக நிலைய நிர்வாகத் தெரிவு தொடர்பான விவகாரம் விஸ்வரூபம் எடுத்து கிராமத்தின் அமைதிக்கும் சட்டம் ஒழுங்கிற்கும் குந்தகம் ஏற்படுத்தியிருக்கிறது.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் கூட்டமைப்பு உறுப்பினரான த.சசிதரனும் அவரின் கூட்டாளிகளும் இணைந்து வட்டு தெற்கு கிராமத்தில் கலவரத்தை ஏற்படுத்துவதிலும் பொது அமைதிக்கு பங்கம் விளைவிப்பதிலும் ஈடுபட்டிருக்கின்றனர்.

நேற்று முன்தினம் சனசமூக நிலைய நிர்வாகத் தெரிவுக்காக கூட்டப்பட்ட கூட்டம் குழப்பத்தில் முடிவடைந்தது. இதனைத் தொடர்ந்து கிராமத்தில் அமைதியின்மை தலை தூக்கியது. வேண்டும் என்றே கலவரம் தூண்டப்பட்டது.

கூட்டமைப்புப் பிரதேச சபை உறுப்பினரின் அடாவடித்தனம் அரங்கேறியது. பொது மக்கள் செய்வதறியாது திண்டாடுகின்றனர். இந்த அமைதியின்மைக்குப் பிரதேச சபை பொறுப்பேற்குமா என்று பொதுமக்கள் ஏங்குகின்றனர்.


## வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : பி.நிவேதிகா

முகவரி : வற்றாப்பளை, முள்ளியவளை.



அகவை 1 இல் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்


# சூது விளையாடியவர்களுக்கு ஐயாயிரம் ரூபா தண்டம்

(வடமராட்சி)

புலோலி தென்மேற்கு தும்பளை கிழக்குப் பகுதியில் சூது விளையாடிய ஐந்து பேருக்குப் பருத்தித்துறை நீதிமன்றத்தால் தலா ஐயாயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இப்பகுதியில் உள்ள ஆலய வீதி ஒன்றில் சூது விளையாட்டில் ஈடுபட்ட ஐவரையும் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் கைது செய்திருந்தனர். இவர்கள் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டபோது ஒவ்வொருவருக்கும் தலா ஐயாயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறு தீர்ப்பளிக்கப்பட்டது. (116)

# பேருந்து நிலைய மலசலகூடத்தில் மதுப்பிரியர்கள் அடாவடி

(யாழ்ப்பாணம்)

யாழ். பேருந்து நிலையத்திற்குப் பின்னால் அமைந்துள்ள மலசல கூடத்தில் மதுப்பிரியர்களின் அடாவடித்தனத்தால் மலசலம் கழிப்பதற்குச் செல்வோர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.


தொடர்ச்சியாக இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றது. இந்தச் செயற்பாட்டுக்கு அங்கு கடமையாற்றும் ஊழியர்களும் உடந்தையாகச் செயற்பட்டு வருகின்றனர்.

நேற்றைய தினம் சிறுநீர் கழிப்பதற்காக குறித்த இடத்திற்கு சென்றபோது ஆண்கள் பகுதியில் 5 இற்கும் மேற்பட்டவர்கள் அங்கிருந்து மது அருந்திக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் குறித்த மலசல கூடத்தில் கடமையாற்றும் ஊழியர் அங்கு வரும் ஆண்களை பெண்கள் பாவிக்கும் மலசல கூடத்தை பாவிக்குமாறு கூறியுள்ளார்.

இது தொடர்பாக யாழ். மாநகர சபையின் முதல்வரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு மாநகர சபையின் உத்தியோகத்தர்கள் குறித்த இடத்திற்கு வந்து அவ்வாறான சம்பவங்களில் ஈடுபட்டவர்களை அங்கிருந்து வெளியேற்றியதுடன், இவ்வாறான சம்பவங்கள் இனிவரும் நாட்களில் நடைபெறக்கூடாது என்று கடமையாற்றிய ஊழியர் எச்சரிக்கப்பட்டதுடன் அவ்வாறான செயல்களில் ஈடுபடுபவர்கள் பற்றி மாநகர சபைக்கு உடனடியாகத் தெரியப்படுத்தினால் பொலிஸார் ஊடாக நடவடிக்கை மேற்கொள்வதாகவும் மாநகர சபை உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் அப்பகுதியில் பழுதடைந்துள்ள மலசல கூடங்களையும் திருத்துவதற்கான நடவடிக்கையினையும் மேற்கொள்வதாக மாநகர சபை உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

# எரிகாயங்களுக்குள்ளானவர் சிகிச்சை பயனின்றி மரணம்



(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் எரிகாயங்களுக்கு இலக்காகிய நிலையில் சிகிச்சை பெற்று வந்த வயோதிப் பெண் நேற்றுக் காலை சிகிச்சை பயனின்றி உயிரிழந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசடி லேன், திருநெல்வேலியில் வசித்துவந்த கணபதிப்பிள்ளை சின்னம்மா (வயது-84) என்ற வயோதிபப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்ததாகத் தெரியவருகின்றது.

இவர் தீக்காயங்களுக்குள்ளாகிய நிலையில் நேற்று முன்தினமே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்ததாகவும் மேலும் தெரியவருகின்றது. (பா)

# ஊடகக் கருத்தரங்கு

இலங்கை வாழ் முஸ்லிம்கள் அண்மையில் பல்வேறு பிரச்சினைகளையும், அச்சுறுத்தல்களையும் அனுபவித்து வருகின்றனர்.

இவற்றை முறியடிக்கும் முகமாக முஸ்லிம் ஊடகவியலாளர்களுக்கு ஊடகத்துறை ஆளுமையை உருவாக்க இலங்கை முஸ்லிம் மீடியா போரம் தீர்மானித்துள்ளது.

இதன் பிரகாரம் மாதா மாதம் மாவட்டம் தோறும் ஊடகக் கருத்தரங்கு நடைபெறும். சென்ற 30 ஆம் திகதி முஸ்லிம் மீடியா போரம் நடத்திய செயற்குழு, மாவட்ட அமைப்பாளர்களுக்கான விசேட கூட்டம் தலைவர் என்.எம். அமீன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட அமைப்பாளர் எம்.எஸ்.லாபிர் கலந்துகொண்டு யாழ்ப்பாணத்திலும் ஊடகக் கருத்தரங்கு நடைபெற வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்றுக்கொண்டார். (105)

# முஸ்லிம்களின் மீள்குடியேற்றம்; கொழும்பில் கலந்துரையாடல்

வடமாகாணத்தில் மீள்குடியேறியுள்ள முஸ்லிம்களின் பிரச்சினைகள் சீரமைக்கப்படவில்லை. மீள்குடியேறவுள்ள மக்களின் மனோநிலை மாற்றமடைந்துள்ள.

இதனைக் கருத்திற்கொண்டு வடமாகாண மீள்குடியேற்றச் செயலணி வடமாகாணத்தில் மீண்டும் மீள்குடியேறுவதற்கான இறுதியான செயற்திட்டங்களை வகுக்கவுள்ளது.


இந்நிலையில் கொழும்பு மாளிகாவத்தையிலுள்ள இஸ்லாமிய நிலையத்தில் கடந்த 27 ஆம் திகதி யாழ், கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்துடன், வடமாகாண மீள்குடியேற்றச் செயலணி கலந்துரையாடியது.

சம்மேளனத்தின் உப தலைவர் எம்.எஸ்.லாபிர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் சம்மேளனத்தின் செயலாளர் பிரதி மேயர் எம்.ரமீஸ், அஷ்சேவுக் அஸ்மின் ஐயூப் ஆகியோர் மீள்குடியேற்றத்திலுள்ள பிரச்சினைகள் பற்றி உரையாற்றினர்.

சம்மேளனத்தின் அங்கத்தவர்களுடன் யாழ்., கொழும்பு புத்திஜீவிகள் கலந்துகொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்கள்.

இறுதியாக சம்மேளனத்தின் பிரதிநிதிகள், செயலணியுடன் இணைந்து செயற்படுவதாகத் தீர்மானிக்கப்பட்டது. மீள்குடியேற்ற நடவடிக்கைகளில் செயலணி சம்மேளனத்தின் வழிகாட்டலில் செயற்படுவதென ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. (105)

# வாள்வெட்டுக்கு இலக்காகிய நபர் வைத்தியசாலையில்



திருநெல்வேலி பால் பண்ணை பகுதியில் வாள் வெட்டிற்கு இலக்காகிய ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் இரவு 8.30 மணிக்கு நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சசற்குணம் (வயது -45) என்ற குடும்பஸ்தரே வாள் வெட்டிற்கு இலக்காகிய நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவரது வீட்டில் பிரவேசித்த பத்துப்பேர் சம்பந்தப்பட்ட நபரை வாளால் வெட்டியதாகத் தெரிய வருகின்றது. இதன்போது தலையில் வெட்டுக்காயங்கள் ஏற்பட்ட நிலையில் அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (பா)

# கரையொதுங்கிய இராட்சத மீனை அழிப்பதற்கு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை ஊரிக்கடற்பரப்பில் கரையொதுங்கியுள்ள இறந்த நிலையில் உள்ள இராட்சத மீனைக் கடற்படையினரது உதவியுடன் அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும், குறித்த மீனின் புகைப்படம் ஆராய்ச்சிக்காக கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் யாழ். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறை நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் நேற்றுக் காலை ஊர்காவற்றுறைக்கு விஜயம் செய்த யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஸ்தலத்திற்கு பொலிஸாருடன் படகில் சென்று கரையில் இறந்து சுமார் 150 மீற்றர் தூரத்தில் கரையொதுங்கியுள்ள இந்த இராட்சத மீனைப் பார்வையிட்டதுடன் ஊர்காவற்றுறை நீதிமன்றம் வழங்கிய உத்தரவின் பேரில் கடற்படையினரின் உதவியுடன் அந்த மீனை அழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

அத்துடன் குறித்த மீன் பற்றிய ஆய்வுகளுக்காக அந்த மீனின் புகைப்படம் எடுக்கப்பட்டு அவை கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

சில நாட்களுக்கு முன்னர் இறந்த நிலையிலேயே இந்த மீன் கடலில் அடித்துவரப்பட்டுக் கரையொதுங்கியுள்ளதாகவும் ந.கணேசமூர்த்தி மேலும் தெரிவித்தார்.

இந்த மீன் 39 அடி நீளமும் 15 அடி அகலமும் கொண்டதாகவும் மேலும் தெரியவருகின்றது. (பா)

## முன்னாள் அமைச்சர் காலமானார்

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபையின் எதிர்க்கட்சித் தலைவரும் ஐ.தே.க.வின் முன்னாள் அமைச்சருமான முஹமட் மஹ்ரூப் நேற்று திங்கட்கிழமை காலை காலமானார். கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் இவர் சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே காலமானார்.

# பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்புப் பேரணி

(முல்லைத்தீவு)

பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு விழிப்புணர்வுப் பேரணி ஒன்று இன்று முல்லைத்தீவு நகரத்தில் இடம்பெறவுள்ளது. முல்லை மாவட்ட செயலகத்துடன் இணைந்து டி.ஆர்.சி. மற்றும் யு.என்.எச்.சி.ஆர். என்பன இப்பேரணியை நடத்துகின்றன. காலை 9.30 மணி க்கு நீதிமன்றம் முன்பாக ஆரம்பமாகி சுனாமி நினைவாலயம் அருகில் பேரணி முடிவடையும்.

பாடசாலை மாணவர்கள், மருத்துவமனைப் பணியாளர்கள், பெண்கள் அமைப்புப் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (04)

## சர்வதேச மனித உரிமைகள் தினம் - 2012

**உறுப்புரை 4**

எவரும் அடிமையாக வைத்திருக்கப்படுதலோ அல்லது அடிமைப்பட்ட நிலையில் வைத்திருக்கப்படுதலோ ஆகாது. அடிமை நிலையும் அடிமை வியாபாரமும் அவற்றின் எல்லா வகைகளிலும் தடை செய்யப்படுதல் வேண்டும்.



**காரைநகர் மடத்துக்கரை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய சூழலிலுள்ள ஆலமரத்தில் ஐந்து தலைகளை உடைய நாகபாம்பு போன்ற உருவம் தோன்றி அடியவர்களுக்கு காட்சி கொடுத்து வருகின்றது. இவ் அற்புதத்தை அப்பகுதி மக்கள் பார்வையிட்டு வணங்கி வருகின்றனர்.**

# வெளிச்ச வீடு இல்லாமையால் ஆழ்கடல் மீன்பிடி பாதிப்பு

## முல்லை மீனவர்கள் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீன்பிடியை தமது ஜீவனோபாய தொழிலாக மேற்கொண்டுவரும் கடற்தொழிலாளர்கள் வெளிச்சவீடு இல்லாமையால் மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

இம்மாவட்டத்தில் கடந்த யுத்த அனர்த்தத்திற்கு முன்னர் 6 ஆயிரம் கடற்தொழிலாளர்கள் மீன்பிடித் தொழிலை சிரமமின்றி மேற்கொண்டு வந்த நிலையில் போருக்கு பின்னர் தற்போது 800 குடும்பங்கள் வரை மீள்குடியேறி கடற்தொழிலை மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில் ஆழ்கடல் மீன்பிடியை மேற்கொள்வதற்கு இம்மாவட்டத்தில் வெளிச்ச வீடு இன்மையால் அதனை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும் முக்கியமாக வெளிச்ச வீடு அவசிய தேவைப்பாடாக இருப்பதாக கடற்தொழிலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஏனைய மாவட்டங்களில் வெளிச்ச வீடுகள் அமைக்கப்பட்டுள்ளதால் ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைகள் சிரமமின்றி நடைபெற்று வரும் நிலையில் இம்மாவட்டத்திலும் வெளிச்ச வீடு அமைக்கப்படுமிடத்து மீன்பிடித் தொழிலை மேற்கொள்வோர் ஆழ்கடல் மீன்பிடியின் மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும் எனத் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கடற்தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு வெளிச்ச வீடு அமைக்க உரியவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

# கூட்டுறவாளர் வீரசிங்கத்தின் 48 ஆவது நினைவு தின விழா

யாழ்.மாவட்ட கூட்டுறவு சபையின் ஏற்பாட்டில் கூட்டுறவுப் பெரியார் அமரர் வி.வீரசிங்கத்தின் 48 ஆவது நினைவு தினநிகழ்வு நாளை புதன்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்.மாவட்ட கூட்டுறவு சபைத் தலைவர் இ.இராஜாராம் தலைமையில் நடைபெறவுள்ளது.

கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையரும், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருமான திருமதி மதுமதி வசந்தகுமார் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன், யாழ்.மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன வடபிராந்திய முகாமையாளர் வி.சண்முகநாதன், யாழ் மதுவரித் திணைக்கள ஆணையாளர் பி.கிறிஸ்ரி ஜோசெவ், யாழ்.கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி, யாழ்.கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள உதவி பணிப்பாளர் திருமதி வக்சலா அமிர்தலிங்கம், யாழ்.மக்கள் வங்கி பிரதான வீதிக்கிளை முகாமையாளர் அ.பிரான்சிஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நினைவுப் பேருரையை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா வழங்கவுள்ளார்.

# தென்மராட்சி பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு தீவிரம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரியிலுள்ள மட்டுவில் சந்திரபுரம் பகுதியில் இருவர் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளமை இனங்காணப்பட்டுள்ளதால் அப்பகுதியில் டெங்கு நோய் ஒழிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் சாவகச்சேரி பிரதேச சபையினால் இப்பகுதிகளில் புகையூட்டும் பணிகள் இடம்பெற்று வருவதுடன் வீடுகளில் டெங்கு நோய் பரவுவதற்கான சூழல் ஏற்படுமாயின், அவற்றை முற்றாக ஒழிப்பதற்கான அதாவது கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்கான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை இப்பகுதியிலுள்ள குடியிருப்பாளர்களுக்கும் டெங்கு குறித்து விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டு வருகிறது. தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த 10 மாதங்களில் 51 பேர் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளமை இனங்காணப்பட்டுள்ளதாகவும், இவர்களில் ஒக்ரோபர் மாதம் மட்டும் 23 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து சுகாதார திணைக்களத்தினால் டெங்கு நோய் என இனங்காணப்பட்ட பகுதிகளில் டெங்கு ஒழிப்பு செயற்பாடு மிகவும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் இப்பகுதியில் உள்ளூராட்சி சபையின் பங்களிப்புடன் புகையூட்டல் நடவடிக்கைகளும் தீவிர பரிசோதனை நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகிறன. (11)

# குண்டும் குழியுமான மாலுசந்தி வீதி

(பருத்தித்துறை)

அல்வாய் மாலுசந்தியிலிருந்து வியாபாரி மூலை சந்தி வரையான வீதி மிக மோசமாக சேதமடைந்துள்ளதால் இவ்வீதியூடாக பயணம் செய்யும் மக்கள் சிரமங்களுக்குள்ளாவதாக தெரிவிக்கின்றனர்.

இவ்வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையில் குண்டும் குழியுமாக சேதமடைந்துள்ளதால் மழை காலங்களின் போது வெள்ளநீர் தேங்கி நிற்பதால் வாகனங்கள் செல்லும் போது வெள்ள நீர் அடித்துச் செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இவ்வீதியூடாக நாளாந்தம் அதிகளவான மக்கள் தமது பயணங்களை மேற்கொண்டு வருகின்ற நிலையில் சேதமடைந்துள்ள இவ்வீதியை புனரமைக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (109)

# உலர் உணவு நிவாரணத்தில் சமையலுக்கு உதவாத பருப்பு

## மக்கள் விசனம் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசத்தில் உலக உணவுத்திட்டத்தின் கீழ் பல.நோக்கு கூட்டுறவுச்சங்கங்களினூடாக மக்களுக்கு உலர் உணவு நிவாரணத்தில் வழங்கப்படும் கடலைப்பருப்பு உணவுக்கு பயன்படுத்த முடியாது உள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடலைப்பருப்பு சமைத்த பின் உணவுக்காக எடுக்கும் போது கைப்புத் தன்மையாக இருப்பதாகவும், வறுத்து அரைத்த பின்னர் உணவுக்காக எடுக்கும் போது அதே கைப்புத் தன்மையாகக் காணப்படுவதாகவும் இவற்றை சமையலுக்கு பயன்படுத்த முடியாது இருப்பதாக மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இப்பிரதேசத்தில் மீள் குடியேறி வாழ்வாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையில் வாழும் நிலையில் இவ் உலர் உணவு நிவாரணத்தின் மூலம் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதாகவும், மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக உரியவர்கள் கவனம் செலுத்தி சமையலுக்கு உகந்த கடலைப் பருப்பை வழங்க ஆவண செய்யுமாறு மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (77)





**ஊர்காவற்றுறை பிரதேசசபையால் நிர்மாணம் செய்யப்பட்ட ஊர்காவற்றுறை பேருந்து தரிப்பிட நிலையம், புறநெகும திட்டத்தில் புனரமைப்புச் செய்யப்பட்ட வீதிகள் திறப்பும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஈ.பி.டி.பி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலெண்ரீன் புனரமைப்புச் செய்யப்பட்ட நாரந்தனை செட்டியாந்தோட்ட வீதியை திறந்து வைப்பதையும், உறுப்பினருடன் பிரதேச சபை தவிசாளர் ம.ஜெயகாந்தன் இணைந்து புதிய பேருந்து நிலையத்தை திறந்து வைப்பதையும், சனசமூக நிலையம் ஒன்றுக்கு சமையல் உபகரணங்கள் வழங்குவதையும் காணலாம்.**

அரைகுறையாக எதையும் செய்யாதீர். நல்லவை என்றால் துணிந்து நிறைவேற்றுங்கள். கெட்டது என்றால் அதைச் செய்யாமல் அறவே தவிர்த்து விடுங்கள்.

*- கில்ப்பின்.*

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## தீர்வு வேண்டாம்; தேர்தல் வெற்றிகள் போதும்!

பல்கலைக்கழக மாணவர்களின் விடுதலையாகட்டும், இங்கே பயமற்ற சூழல் உருவாகுவதாகட்டும் அல்லது தமிழ் மக்களுக்குத் தேவையான அரசியல் தீர்வாகவே இருக்கட்டும் சம்பந்தப்பட்டவர்களுடன் சரியானபடி பேசுகின்ற கலையைத் தெரிந்துகொள்ளாவிட்டால் எதையும் சாதிக்க முடியாது என்பதே மறுபடி மறுபடி நிரூபணமாகி வருகிறது.

இன்றைய காலகட்டத்திற்குரிய வழிமுறையாக பல இடங்களிலும் பல பிரச்சினைகளின் முடிவிலும் நிரூபிக்கப்பட்டிருப்பது சரியானபடி பேரம்பேசும் கலையைத் தெரிந்துகொண்டவர்கள் வெற்றிகாண்கிறார்கள் என்பதே. நமது கோரிக்கைகளைச் சரியாக வைக்கத் தெரிந்தவர்கள், அதை நேரம் காலமறிந்து விவேகமுடன் எடுத்துரைக்கத் தெரிந்தவர்கள் தங்கள் இலக்கை எளிதாகச் சாதித்துக் கொள்கிறார்கள்.

மிக அண்மைய உதாரணம், பலஸ்தீனம் ஐ.நா.வின் உறுப்பு நாடாக தன்னை அங்கீகரிக்க வைத்த செயற்பாடு. ஆனானப்பட்ட அமெரிக்காவின் எதிர்ப்பை மீறியும் இதனைச் சாதிக்க அதனால் முடிந்திருக்கிறது. முதலில் வாக்களிப்புடன் கூடிய முழு உறுப்புரிமையைப் பெற்றுக் கொள்வதற்காகத்தான் 2011–ல் கோரிக்கையை வைத்தது பலஸ்தீனம். ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அந்தத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது.

அந்த முயற்சி பலனளிக்கவில்லை என்றவுடன், ஐ.நா.விடம் நமக்குத் தீர்வே கிடைக்காது என்று மூக்கால் அழுதுகொண்டு வானத்தை அண்ணாந்து காத்திருக்கவில்லை பலஸ்தீனம். முழு உரிமை வேண்டாம்; வாக்களிக்கும் உறுப்புரிமை அல்லாத அங்கத்து நாடாக அங்கீகாரம் தரும்படி மறு விண்ணப்பத்தை வைத்தார் பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ். 138 நாடுகளின் ஆதரவுடன் அவரது அந்தக் கோரிக்கை கடந்த வாரம் நிறைவேறியிருக்கிறது.

இஸ்ரேலின் அடாவடித் தாக்குதல்கள் உட்பட்ட பல்வேறு பிரச்சினைகளையும் இனி பலஸ்தீனம் ஐ.நா.வுக்கு எடுத்துவர முடியும். ஒரு இறையாண்மை உள்ள நாடாக நீதி கேட்க முடியும். சர்வதேச சமூகத்தின் அபிப்பிராயத்தைத் திரட்ட முடியும். இது முதல் வெற்றி. அடுத்த கட்டமாக நாங்கள் ஐ.நா.வில் முழு உறுப்புரிமையையும் விரைவில் அடைந்துவிடுவோம் என நம்பிக்கையோடு தெரிவித்திருக்கிறார் மஹ்மூத் அப்பாஸ்.

இதுதான் கோரிக்கைகளை வெல்லும் முறை. எங்களுக்கு என்ன தீர்வு தேவை என்பதைச் சொல்லிக் கேட்காமலே அரசாங்கம் தீர்வைத் தர மறுக்கிறது; தரவே தராது என்று அழுகுணிப்பாட்டுப் பாடுகிறவர்களே இங்கே தமிழ் மக்களின் தலைவர்களாகச் சொல்லிக்கொண்டு உலாவருகிறார்கள்.

இன்றைய நம் நாட்டின் சூழ்நிலையில், முதலில் என்ன தீர்வை எடுத்துக்கொள்வது நடைமுறைச் சாத்தியமானதோ அதை எடுத்துக்கொண்டு அடுத்தகட்டம் செல்லும் எந்த முயற்சியையும் இவர்கள் யோசிப்பதாகக் கூட இல்லை. மக்களுக்கு இவர்கள் ஊட்டிவரும் பொய்யான நம்பிக்கைகளால், யதார்த்த தீர்வொன்றை எடுத்தால் தேர்தல் வாக்குகள் போய்விடுமென்ற பயத்திலேயே விலகி ஓடுகிறார்கள்.

தவிரவும், எந்தத் தீர்வை எடுப்பதற்கும் அவர்களுக்குள்ளே ஒற்றுமையான கருத்துக் கிடையாது; மக்கள்நலன் கருதி அதை உருவாக்கவும் முயல்வது கிடையாது. தீர்வெதுவும் தான் இவர்களுக்குத் தேவையே இல்லையே. மக்களுக்கல்லவா அது தேவை! எனவே, நாங்கள் எதிர்பார்க்கும் தனிநாட்டுக்குச் சமமான தீர்வை சிங்கள அரசாங்கங்கள் தரவே தராது என்று சொல்லிக்கொண்டு, தேர்தல் வெற்றிகள் மட்டும் போதும் என்று காலத்தை ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

- ஆசிரியர்

# சர்வதேச சூழ்ச்சிகளின் மூலம் அரசை அசைக்க முடியாது

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

மக்கள் எம்மோடு இருக்கும் வரை சர்வதேச மட்டத்திலான எத்தகைய சூழ்ச்சிகள் மூலமும் அரசாங்கத்தை ஒருபோதும் அசைக்க முடியாதென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். என்னையும், பாதுகாப்பு அமைச்சு செயலாளர் கோத்தாபயவையும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு வெளிநாடுகளில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. சில அரசசார்பற்ற நிறுவனங்களும், புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புக்களும், தேசிய ரீதியில் சில சக்திகளும் டொலருக்கு சோரம்போய் இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன என்றும் ஜனாதிபதி கூறினார்.

நேற்றுமுன்தினம் கண்டி - குண்டசாலையில், நெடுஞ்சாலை அபிவிருத்திக்கான இயந்திர பராமரிப்புக் கட்டடத்தை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொடர்ந்து உரையாற்றுகையில், நாம் மக்களுக்காகவும், நாட்டுக்காகவும் எம்மை அர்ப்பணித்து செயற்படுகின்றோம். அதை சகல மக்களும் நன்கு அறிவர். மக்கள் எங்களோடு இருக்குவரை எவரும் எம்மை வீழ்த்த முடியாது. அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காக சதி முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும், மக்கள் ஒருபோதும் அதை அனுமதிக்க மாட்டார்கள்.

நாம் நாட்டை அபிவிருத்தியில் கட்டியெழுப்பி வருகின்றோம். நாட்டின் அபிவிருத்திக்கு நெடுஞ்சாலைகளே உந்துசக்தியாக இருக்கின்றன. அதனாலேயே நாட்டில் முக்கிய நெடுஞ்சாலைகளை நாம் புனரமைத்து வருகின்றோம்.

யாழ்ப்பாணத்துக்குச் செல்வதற்கு நான்கு நெடுஞ்சாலைகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. கண்டிக்கான அதிவேகப் பாதையின் நிர்மாணப் பணிகளை நாங்கள் அடுத்த வருடத்தில் ஆரம்பிக்கவுள்ளோம். பாதைகளின் அபிவிருத்தி மூலமே நாட்டில் அபிவிருத்திப் புரட்சியை எம்மால் வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும் என்பதே எனது நம்பிக்கை என்றார்.

அடுத்த ஆறு வருடங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் ரணில் விக்ரமசிங்கவுக்கும் ஜனாதிபதி இங்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தார்.

# நாட்டின் பலபாகங்களிலும் குளிரான காலநிலை நீடிக்கும்

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து உலர்ந்த குளிர்காற்று வீசுவதன் காரணமாக இலங்கையில் வெப்பநிலை குறைவடைந்துள்ளது. ஆகையால் வெப்பவலயங்கள் உள்ளிட்ட நாட்டின் பல பாகங்களிலும் குளிரான காலநிலை நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது நிலவுகின்ற குளிரான காலநிலை இன்னும் சில நாட்களுக்கு நீடிக்கும் என்றும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து வீசுகின்ற குளிர் காற்றும் நாட்டின் வான் பரப்பில் முகில்கள் குறைவாக இருந்தமையுமே வெப்பநிலை குறைவுக்கு காரணங்களாக அமைந்துள்ளன என வளிமண்டலவியல் திணைக்களத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதனால், நுவரெலியா மாவட்டத்தில் ஆகக்குறைந்த வெப்பநிலையாக 7.9 பாகை பதிவாகியுள்ளது. அத்துடன், கொழும்பில் 26 பாகை வெப்பநிலையும் யாழ்ப்பாணம், அநுராதபுரம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் 26 பாகை வெப்பநிலையும் பதிவாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தியாவின் பல பகுதிகளிலும் வெப்பநிலை குறைவடைந்துள்ளதாக இந்திய வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. புதுடில்லியில் ஆகக்குறைந்த வெப்பநிலையாக 7 பாகை பதிவாகியுள்ளது.

தமிழ் நாட்டில் 21 பாகை வெப்பநிலை பதிவாகியுள்ளதாக இந்திய வளிமண்டலவியல் திணைக்கள இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரச மருந்தகங்களில் டி.என்.டி.யை பெறலாம்

(கொழும்பு)

நாட்டில் தட்டுப்பாடு நிலவுகின்ற இதய நோயாளர்கள் பயன்படுத்தும் டி.என்.டி. எனப்படும் மருந்து வகையை அரச மருந்தகங்களின் ஊடாக வழங்குவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நாட்டில் கடந்த சில வாரங்களாக தனியார் மருந்தகங்களில் இந்த மருந்துக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சின் திட்டமிடல் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர்' கமல் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான விடயங்களை சுகாதார அமைச்சுக்கு தெரிவித்ததை அடுத்து, அரச மருந்தகங்களின் ஊடாக இந்த மருந்தினை உடனடியாக விநியோகிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்படி எந்தவொரு அரச மருந்தகங்களின் ஊடாகவும் இந்த மருந்தினை இதய நோயாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும் என வைத்தியர் கமல் ஜயசிங்க கூறினர்.

## றிஷானாவிற்கு பொதுமன்னிப்பு?

(கொழும்பு)

சவூதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இலங்கைப் பணிப் பெண் றிஷானா நபீக்கிற்கு அரச பொது மன்னிப்பு வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சவூதி அரேபியாவின் இளவரசர் மரண தண்டனை கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கத் தீர்மானித்துள்ளார்.

மன்னருக்கு இறைவனின் ஆசிவேண்டி இவ்வாறு மரண தண்டனை கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட உள்ளதாக இளவரசர் சல்பின் பின் அப்துல் அசீஸ் தெரிவித்துள்ளார். இந்த பொதுமன்னிப்பு பெறுவோர் பட்டியலில் றிஷானாவும் உள்ளடங்கியிருக்கலாம் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. றிஷானாவை விடுதலை செய்யும் முனைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக இலங்கை அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

## வீதிப்புனரமைப்பு

வடமராட்சி - புலோலி தென்மேற்கு கதிரவேற்பிள்ளை வீதி காபற் வீதியாக புனரமைப்பதற்கான ஆரம்பக்கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முன்னர் இவ்வீதி புனரமைப்புக்களுக்கு உட்படுத்தப்படாமல் இருந்ததால், இவ்வீதியூடாக பயணத்தை மேற்கொள்ளும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கிவந்தனர்.

இந்நிலையில் தற்போது இவ்வீதி காபற் வீதியாக புனரமைக்கப்படுவதால், போக்குவரத்துக்கள் இலகுபடுத்தப்படும் என நகர சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (109)

## விபத்தில் காயம்

(மண்கும்பான்)

மண்குடபான் பகுதியில் மோட்டார் சைகசிள் ஒன்று விபத்தில் சிக்கியதில் அதில் பயணித்த இரண்டு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில், யாழ்.போதனாவைத்தியசாலையின் விபத்துப் பிரிவில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 5.00 மணிக்கு நடைபெற்ற இந்த விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஏ.வசிகரன் (வயது - 23), ஜி.சிறிதரன் (வயது - 27) ஆகியோரே படுகாயமடைந்த நிலையில் இவ் வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். (பா)

# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள்

## 10

**வே.அர்ச்சுணன்**

அன்ரன் பாலசிங்கத்துடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டதும் அன்ரன் பாலசிங்கம் உடனடியாகவே விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுடன் தொடர்புகொண்டு நிலைமையை விளங்கப்படுத்தியதுடன் குறித்த வித்தியாசமான பத்திரிகையாளருடைய தேவைப்பாடு அவரை தொடர்ந்து எவ்வாறு பயன் படுத்தலாம் என்ற விடயங்களை பிரபாகரனிற்கு விளங்கப்படுத்தினார். அன்ரன் பாலசிங்கத்தின் நீண்ட விளக்கங்களை கேட்ட பிரபாகரன் இந்த விளக்கங்களை ஒரு கருத்தாகவே பொருட்படுத்தாமல் இது தவறுதலாக நடந்திருக்கலாம் இது தொடர்பில் நான் விசாரித்து சொல்கிறேன் எனக் கூறிவிட்டு பாலசிங்கத்தினுடனான தொடர்புகளைத் துண்டித்து விட்டு,உடனடியாக பொட்டம்மானுடன் தொடர்பு கொண்டு நிலைமையைக் கேட்கமுற்பட்டார்.

இதன்போது நான் நேரடியாக வந்து நிலைமையை விளங்கப்படுத்துகிறேன் எனக் கூறிய பொட்டம்மான், தலைவரிடம் நேரடியாகச் சென்று நிலைமையை விளங்கப்படுத்தியதுடன்,குறித்த யாழ்ப்பாண பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தொடர்பான குற்றவியல் கோப்பு ஒன்றை எடுத்து தலைவரிடம் நேரடியாகக் கொடுத்தார். இதனைப் பார்த்த பிரபாகரன் உடனடியாக அதிர்ச்சி அடைந்தவராகக் காணப்பட்டதுடன், இவர் தொடர்பில் ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை என பொட்டம்மானைப் பார்த்துக் கேட்டார். இதற்கு கொடுப்புக்குள் சிரித்தவாறு பொட்டம்மான் அளித்த பதில் தலைவரை திருப்தியடைய வைத்தது.

குறித்த பத்திரிகையாளரைப் போடுவதற்குரிய காலம் இன்னும் கனியவில்லை. இவரை இன்னும் சில தேவைகளுக்காக பயன்படுத்த வேண்டியுள்ளது. இவரை எமது தேவைகளுக்குப் பயன்படுத்திய பின்னர் இவர் இழைத்த துரோகத்திற்கு எமது இயக்கத்தால் வழங்கப்படுகின்ற உயர்ந்த தண்டனையை வழங்க தயாராக இருக்கிறோம். இது தொடர்பில் கபிலம்மான் கடுமையான குழப்பத்தில் இருக்கிறார். குறித்த ஊடகவியலாளரை உடனடியாக போடவேண்டுமென கபிலம்மான் என்னுடன் குழம்பிக் கொண்டிருக்கின்றார். நான் ஒருவாறு சமாளித்துவிட்டு வருகிறேன். நீங்களும் ஒருதடவை கபிலம்மானிடம் அவசரப்பட வேண்டாம் என நிலைமையை விளங்கப்படுத்துங்கள் என தலைவரிடம் பொட்டம்மான் கேட்டுக்கொண்டார்.

பின்னர் இயக்க விடயங்கள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் இருவரும் கலந்துரையாடிய பிறகு பொட்டம்மான் அங்கிருந்து வெளியேறி விட்டார். இதன் பின்னர் பிரபாகரன் இவ்விடயத்தை தனது நேரடிக் கவனத்திற்கு உட்படுத்த விரும்பினார். உடனடியாகவே குறித்த பத்திரிகை உட்பட யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற பத்திரிகைகள் மற்றும் ஊடகவியலாளர்கள் தொடர்பிலான ஒரு விபரக் கோவையையும் அவர்களது செயற்பாடுகள் தொடர்பிலான விளக்கங்களையும் தனக்கு ஒரு மாதத்துக்குள் தரவேண்டுமென தமிழ்ச்செல்வனை அழைத்து பிரபாகரன் பணித்திருந்தார்.

இதனை அடுத்து தமிழ்ச்செல்வன் இவ்விடயத்தை கையாளும் பொறுப்பை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைக்கு பொறுப்பாக இருந்த கண்ணன் என்பவரிடம் ஒப்படைத்தார். கண்ணன் என்பவர் ஒரு பல்கலைக்கழக மாணவன் போன்று பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றவாறு முழுமையாக தனது நடவடிக்கைகளை இயக்கத்தின் தேவைக்கேற்ப முன்னெடுத்து வந்தார். இவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் துறையைச் சேர்ந்த ஒரு முக்கிய பிரமுகராக இருந்தது சமாதான காலத்தின் பின்னரே இவருடன் கூடப்பழகிய பல்கலைக் கழக மாணவர்கள் உட்பட பலருக்கு தாமதமாக தெரியவந்தது. இருந்தாலும், ஊடகங்கள் தொடர்பான விடயங்களைக் கையாளும் பொறுப்பு மிக இரகசியமாகவே இருந்து வந்தது.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை பேரளவில் யாழ். மாவட்ட அரசியல் துறையின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பது போன்று வெளியில் தெரிந்த போதிலும் அல்லது யாழ்.மாவட்ட அரசியல்துறையினர் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தமக்குக் கீழேயே இயங்குவதாக எண்ணிய போதிலும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைக்கு பொறுப்பாக இருந்த கண்ணன் என்பவர் தலைவரின் ஒரு நேரடி விசுவாசமான போராளியாகவே இருந்தார். இவரது செயற்பாடுகள் குறிப்பாக ஊடகங்களை கையாளும் செயற்பாடு உட்பட ஊடகங்கள் தொடர்பிலான தகவல்களைச் சேகரிக்கின்ற செயற்பாடுகள் முற்று முழுதாக இரகசியம் பேணப்பட்ட ஒரு செயற்பாடாகவே இருந்து வந்தது. கண்ணன் தனது செயற்பாடுகள் தொடர்பில் தன்னுடன் கூட இருந்த போராளிகளுக்கோ அல்லது யாழ்.மாவட்ட அரசியல்துறையினருக்கோ எதனையும் தெரியப்படுத்துவதில்லை.

இவரது செயற்பாடுகள் நேரடியாக தமிழ்ச்செல்வனையே சென்றடைந்தது. தமிழ்ச்செல்வன் நேரடியாக கண்ணனிடம் பெறுகின்ற தகவல்களை உடனுக்குடன் தலைவரிடம் தெரியப்படுத்தி வந்தார். விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பிரபாகரனுக்கு கிளிநொச்சியில் இடம்பெற்ற குண்டுவீச்சில் சாவைத் தழுவும் வரைக்கும் தமிழ்ச்செல்வன் கடுமையான விசுவாசியாகவே செயற்பட்டு வந்தார். குறிப்பாக விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்த பல தளபதிகள் பல விடயங்களை பிரபாகரனுக்கு மறைத்திருந்த போதிலும் ஒரு சிறிய விடயத்தைக் கூட பிரபாகரனுக்கு மறைக்காமல் உடனுக்குடன் தகவல்களை தமிழ்ச்செல்வன் தெரிவித்து வந்தமையால் பிரபாகரனுக்கும் தமிழ்ச்செல்வன் மீது கூடுதலான அன்பும் பாசமும் இருந்தது.


பிரபாகரன், தான் எங்கு செல்வதாக இருந்தாலும் பொட்டம்மானுடன் தமிழ்ச்செல்வனையும் கூடுதலாக அழைத்துக்கொண்டே செல்வார். அரசியல்துறை சார்ந்த பல்வேறு குற்றச்சாட்டுக்களை ஏனைய தளபதிகள் பிரபாகரனிடம் முன்வைக்கின்ற பொழுதும், தமிழ்ச்செல்வன் தொடர்பில் யார் முறையிட்டாலும் பிரபாகரன் அதனைப் பெரியளவில் கணக்கில் எடுப்பதில்லை. அந்தளவிற்கு தமிழ்ச்செல்வன் மீது பிரபாகரனுக்கு நம்பிக்கை இருந்தது. இதனால்தான் பொட்டம்மான் யாழ்ப்பாணத்திலுள்ள ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் தொடர்பில் திரட்டும் தகவல்களில் உள்ள சரி பிழையை ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக தமிழ்ச்செல்வன் ஊடாக மேலதிக தகவல்களைப்பெறும் முயற்சியில் பிரபாகரன் களம் இறங்கி இருந்தார்.

இருந்தபோதிலும், யாழ்ப்பாணத்திலுள்ள ஏனைய ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகங்கள் தொடர்பில் முழுமையான தகவல்களை கண்ணனால் திரட்ட முடிந்த போதிலும் யாழ்ப்பாணத்திலுள்ள பிரபலமான பத்திரிகையெனவும் முன்னணிப் பத்திரிகை எனவும் தங்களை பிரசாரப்படுத்தி வரும் குறித்த பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தொடர்பிலான தகவல்களை கண்ணனால் திரட்ட முடியாமல் போய்விட்டது. இதற்குப் பிரதான காரணம் கண்ணன் வைத்திருந்த கூடுதலான தொடர்பாளர்கள், குறித்த பத்திரிகைக்கு சார்பான போக்கையே பின்பற்றினர். அல்லது குறித்த பத்திரிகையின் கபடத் தனத்தை புரியாதவர்களாக இருந்தனர் எனலாம்.

கண்ணனால் தமிழ்ச்செல்வனிற்கு வழங்கப்பட்ட யாழ். ஊடகங்கள் தொடர்பிலான நிலைவர அறிக்கையில் யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் வலம்புரி பத்திரிகையானது ஒரு கட்சிப் பத்திரிகை என்ற விடயமே பிரதான இடத்தை பிடித்திருந்ததுடன் பிரபாகரன் எதிர்பார்த்த குறித்த ஊடகவியலாளர் தொடர்பிலான விபரங்கள் எதுவும் அதில் குறிப்பிடப்படாமல் குறித்த பத்திரிகையும் அதன் பிரதம ஆசிரியர் தொடர்பிலும் நல்ல அபிப்பிராயங்களுடனான தகவல்கள் மட்டுமே அதில் காணப்பட்டது. இந்த அறிக்கையைப் பார்வையிட்ட தமிழ்ச்செல்வன் தனது வழமையான புன்னகையுடன் கண்ணனை அனுப்பிவிட்டு நேரடியாக தலைவரிடம் சென்று அறிக்கையை சிரித்தவாறு கையளித்தார். இதன்போது தலைவர் தமிழ்ச்செல்வனை நீர் விபரம் அறியாத ஒருவரை அனுப்பியிருக்கிறீர். அதுதான் சரியான விபரங்கள் வரவில்லையென சற்று கடும் தொனியில் கூறிய பொழுது வழமையான சிரிப்புடன் ஓம் நானும் பார்த்தேன், சரியான விபரங்கள் வரவில்லைத்தான் அண்ணை என தமிழ்ச்செல்வன் தலைவரிடம் கூற, சரி இன்னும் ஒரு சந்தர்ப்பம் தருகிறேன் முயன்று பாரும் என்று கூறி தலைவர் தமிழ்ச்செல்வனிடம் இருந்து விடைபெற்றுக் கொண்டார்.

தமிழ்ச்செல்வன் புதிதாக நியமித்த அந்த ஊடகங்களை ஆராய்ந்த பொறுப்பாளர் யார்?அவரால் முழுமையான தகவல்களைப் பெற முடிந்ததா? அல்லது தமிழ் ஊடகங்கள் தொடர்ந்தும் விடுதலைப் புலிகளை அழிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டனவா? எவ்வாறு ஈடுபட்டன? என்பவற்றை மேலும் பார்ப்போம்.


**(தொடரும்.)**



**அரசியல்துறைச் சார்ந்த பல்வேறு குற்றச்சாட்டுக்களை ஏனைய தளபதிகள் பிரபாகரனிடம் முன்வைக்கின்ற பொழுதும், தமிழ்ச்செல்வன் தொடர்பில் யார் முறையிட்டாலும் பிரபாகரன் அதனைப் பெரியளவில் கணக்கில் எடுப்பதில்லை. அந்தளவிற்கு தமிழ்ச்செல்வன் மீது பிரபாகரனுக்கு நம்பிக்கை இருந்தது. இதனால்தான் பொட்டம்மான் யாழ்ப்பாணத்திலுள்ள ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் தொடர்பில் திரட்டும் தகவல்களில் உள்ள சரி பிழையை ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக தமிழ்ச் செல்வன் ஊடாக மேலதிக தகவல்களைப் பெறும் முயற்சியில் பிரபாகரன் களம் இறங்கி இருந்தார்.**

# மக்கள் ஆதரவை கொண்ட ஜனாதிபதி இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும்

## இந்துவின் முன்னாள் ஆசிரியர் ராம் தெரிவிப்பு



(சென்னை)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தைப் போன்று எதிர்காலத்தில் மக்கள் ஆதரவுமிக்க அரசாங்கம் உருவாகப்போவதில்லை. எனவே இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஜனாதிபதி சிறந்த அரசியல் தீர்வை ஏற்படுத்தவேண்டுமென இந்து பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் என். ராம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கைப்படையினருக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான யுத்தம் நடந்து கொண்டிருந்த போது இந்திய அரசாங்கம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் யுத்த நிறுத்தம் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்கவில்லை தமிழ்நாட்டிலும் இந்தியாவிலும் விடுதலைப் புலிகளுக்கு இருந்து வந்த ஆதரவு அவ்வியக்கம் எடுத்த இரண்டு தவறான முடிவுகளினால் சீர்குலைந்து போனது. 1987இல் இந்திய அமைதி காக்கும் படைக்கு எதிராக புலிகள் யுத்தத்தை ஆரம்பித்தது முதலாவது தவறாகும். அதையடுத்து, 1991ஆம் ஆண்டு இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை படுகொலை செய்தது அவர்கள் இழைத்த இரண்டாவது குற்றமாகும்.

இவ்விரண்டு காரணங்களினால் இந்திய மக்கள் குறிப்பாக தமிழ்நாட்டு மக்கள் புலிகளை வெறுக்க ஆரம்பித்து அவ்வியக்கத்திற்கு எவ்வித ஆதரவையும் கொடுக்க மறுக்கிறார்கள்.

தமிழ்நாட்டு மக்கள் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று ஏற்படுவது அவசியமென்று கருதுகிறார்கள். பொல்பொட் போன்ற சர்வாதிகாரியின் போக்கில் புலிகள் இயக்கம் ம்னிதர்களை ஈவிரக்கமற்ற முறையில் படுகொலை செய்தது.

அன்று புலிகளுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தக்கூடாதென்று அடங்கிப் போன தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர்களுக்கு இப்போது பூரண சுதந்திரம் இருப்பதனால் அவர்கள் போலியானசாக்கு போக் குகளைக் காட்டி பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு முட்டுக்கட்டைகளை விதிக்காமல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு தங்களது பூரண ஒத்துழைப்பை வழங்குவது அவசியமாகும்.

தமிழ்நாட்டில் டெசோ மாநாட்டுக்கு தலைமை தாங்கிய கலைஞர் கருணாநிதி தமிழர் பிரச்சினைக்கு தீர்வொன்றை ஏற்படுத்துவதற்கு மக்களின் அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்த வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருப்பது செயல்படுத்தப்பட மாட்டாது.வெறுமனே மேடைப பேச்சுகளை செய்து மக்களை கவர்வதற்காகவே இத்தகைய கருத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வெளியிட்டுள்ளார்கள்.

சமீபத்தில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் படி, தமிழர்களுக்கான சுதந்திரத்தை வென்றெடுக்கும் நோக்கத்துடன் ஆயுதப் போராட்டத்தில் இறங்கிய புலிகள் சிங்கள மக்களை கொன்ற எண்ணிக்கையை விட அவர்கள் கையில் ஈவிரக்கமின்றி சுட் டுக் கொல்லப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை அதிகமாகும்.

இலங்கைத் தமிழ் மக்களின் நிம்மதியான வாழ்க்கைக்கு முட்டுக்கட்டை போடும மிகப் பெரிய சாபக்கேடாக புலம் பெயர்ந்த தமிழர் அமைப்புகள் இருந்து வருகின்றன சர்வதேச ஊடகங்கள் ஒரு தலைப்பட்சமாக செயற்படுவதாகவும் அவற்றில் பல புலிகளை நேரடியாக ஆதரிக்கின்றன என்றும் கூறினார்.

## ஆயுதங்கள் ஒப்படைப்பு

சிறைச்சாலைகளில் காணப்பட்ட ரி-56ரக ஆயுதங்கள், பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஆயுதங்களை பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்குமாறு சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் பி.டபிள்யு. கொடிபபிலி, சிறைச்சாலை பொறுப்பதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

ரி-56 ரக துப்பாக்கிகளுக்கு பதிலாக ரிப்பீட்டர் ரக ஆயுதங்கள் வழங்கப்பட உள்ளன. அண்மையில் வெலிக்கடைச் சிறையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் கைதிகள் ஆயுதக் களஞ்சியத்தை உடைத்து ரி-56 ரக ஆயுதங்களைப் பயன்படுத்தி அதிகாரிகளை தாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அதிபர்களின்றி இயங்கும் தேசிய பாடசாலைகள்

நாட்டிலுள்ள பெருமளவு தேசிய பாடசாலைகள் அதிபர்கள் இன்றியே இயங்கிவருவதாக கல்வியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்படி நாட்டிலுள்ள 103 தேசிய பாடசாலைகள் அதிபர்கள் இன்றி இயங்கி வருவதாகவும், இவ்வாறு அதிபர்கள் வெற்றிடமாவதற்கு பெருமளவான அதிபா. கள் சேவையிலிருந்து ஓய்வு பெற்றதே காரணமெனவும் கல்வியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாறு அதிபர்கள் இன்றி இயங்கி வரும் தேசிய பாடசாலைக்கு அதிபர்களை நியமிக்குமாறு கல்வியமைச்சு பல்வேறு முன்மொழிவுகளை பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு வழங்கியுள்ளது. இதன்படி வெற்றிடமாகவுள்ள அதிபர்களின் இடத்தை நிரப்புவதற்கு நேர்முகத்தேர்வை நடாத்துவதற்கான அனுமதியை ஆணைக்குழு வழங்கியுள்ளது. இதன்படி கல்வியமைச்சு நேர்முகத் தேர்வாளர்களுடன் தொடர்பு கொண்டு, அவர்கள் தொடர்பான சிபார்சுகளை பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு வழங்கியுள்ளது.

## புகலிடதாரிகளை நாடுதிரும்ப அழைப்பு



(கொழும்பு)

புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு திரும்ப முடியும் என ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான ஜெனிவா பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார். இலங்கையில் எந்தவிதமான ஆபத்துக்களும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சர்வதேச குடிப்பெயர்வாளர் பேரவையின் 101ஆம் அமர்வுகளில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். யுத்தம் இடம்பெற்ற காலத்தில் வெளிநாடுகளில் புகலிடம் பெற்றுக்கொண்டவர்கள் நாடு திரும்ப வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை, சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்கள் பாரியளவில் மக்களை ஏமாற்றி வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தி யுள்ளார்.

அண்மைக்காலமாக வெளிநாடுகளில் புகலிடம் கோரும் இலங்கையர்கள் பொருளாதார நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டவர்கள் என்பதனை சில நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளின் ஆபத்துக்கள் குறித்து உலக நாடுகள் போதியளவு விளக்க மளிக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்காவின் புதிய அறிக்கை பாரதூரமானதாக அமையும்

### – எச்சரிக்கிறார் அமைச்சர் விமல்



(கொழும்பு)

ஐ. நா. கொழும்பு அலுவலகத்தின் மீது குற்றம் சுமத்தி இலங்கைக்கு எதிரான மற்றுமொரு மனுவை அமெரிக்கா தயாரித்து வருகிறது. மார்ச் மாதத்தில் ஜெனிவாவில் நடைபெறும் மனித உரிமைகள் ஆணைக்குழு கூட்டத்தில் இம்மனு சமர்ப்பிக்கப்பட உள்ளதாக அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இது தருஸ்மன் அறிக்கையைப் பார்க்கிலும் பாரதூரமாக அமையுமென்றும் அமைச்சர் தெரிவித்தார். அமெரிக்கா உள்ளிட்ட பல ஏகாதிபத்திய நாடுகள் இலங்கைக்கு எதிர்ப்புத்தெரிவித்து தவறான கருத்துக்களை சேகரித்து வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

இறுதிக்கட்டப் போரில் புலிகள் தலைவர் உட்பட முன்னணி உறுப்பினர்களைக் காப்பாற்ற செயற்படாமை, அக்காலகட்டத்தில் பான் கீ மூனை இலங்கைக்கு தருவிக்க செயற்படாமை. ஐ. நா. அமைதிப் படையின் சேவையைப் பெறாமை போன்றவை ஐ.நா. கொழும்பு அலுவலகத்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்களாகும். இது தொடர்பாக சர்வதேச விசாரணை ஒன்றையும் கோருவதற்கும் புதிய யோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தருஸ்மன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தவறான காரணங்களை உறுதிப்படுத்துவதற்கும் புதிய பிரேரணையில் முயற்சி மேற்கொள்ளப்படுவதாக தகவல் வெளியாகி உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## 13ஆவது திருத்தச்சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டும்

### சீலரட்ன தேரர் கோரிக்கை

(கொழும்பு)

13ஆவது திருத்தச் சட்டம் இரத்துச்செய்யப்பட வேண்டுமென ஜனசெத்த முன்னணியின் தலைவர் சீலரட்ன தேரர் தெரிவித்துள்ளார்.

13ஆம் திருத்தச் சட்டத்தை இரத்துச்செய்து மாகாணசபைகளின் ஆட்சி அதிகாரங்களையும் மத்திய அரசாங்கத்திடம் வழங்க வேண்டும். 1978ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியலமைப்பில் ஏற்படுத்தப்பட்ட 13ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம் எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்கவில்லை.

மாகாணசபை முறைமையின் மூலம் தேசிய கொள்கைகளை அமுல்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

மாகாணசபை முறைமையினால் இனங்களுக்கு இடையில் முரண்பாட்டு நிலைமை ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுகின்றது.. எனவே 13ஆம் திருத்தச் சட்டத்தை இரத்துச்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என சீலரட்ன தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## இலங்கை குறித்த உண்மைநிலை தெளிவுபடுத்துவதற்கு நடவழக்கை

(கொர்ழும்பு)

இலங்கையின் உண்மை நிலைமையை எடுத்துரைக்க தயங்கப் போவதில்லை என அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்ற நிகழ்வு ஒ ்றில் கலந்து கொண்டு உரையா றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.



இலங்கை தொடர்பில் பிரசாரம் செய்யப்பட்டு வரும் பிழையான கருத்துக்கள் முறியடிக்கப்படும். சில நாடுகள் இலங்கை தொடர்பில் தப்பான அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளன.

குறித்த நாடுகளுக்கு போதியளவு விளக்கம் அளிக்கப்பட வேண்டும். இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து பல நாடுகளில் சாதகமான நிலைப்பாடு காணப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அதிகாரிகளெனத் தெரிவித்து கப்பம் பெற்ற இருவர் சிக்கினர்

நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகள் எனக் கூறி வர்த்தக நிலையங்களில் கப்பம் பெற்ற இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். நாவுல பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு சென்ற இவ்விருவரும் பொருட்களின் விலைகளை விசாரித்துள்ளனர்.

நுகர்வோர் அதிகாரசபை நிர்ணயித்த விலையில் அந்தப் பொருட்களின் விலைகள் இல்லை எனத் தெரிவித்ததுடன் தாங்கள் இருவரும் நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகள் எனக் கூறிவர்த்தக நிலையங்களுக்கு அபராதமும் விதித்துள்ளனர்.

அதுமட்டுமன்றி கடைகளில் விற்கப்படும் பொருட்களுக்கான விலைப்பட்டியல் நுகர்வோருக்கு காட்சிப்படுத்தப்படவில்லை என்றும் சுட்டிகாட்டி அதற்கும் அபராதம் விதித்துள்ளனர்.

இவ்விருவரும் ஒவ்வொரு வர்த்தக நிலையங்களுக்கும் ஆயிரம் ரூபா முதல் 5,000 ரூபாவரை அபராதம் விதித்துள்ளனர். இவ்விருவர் தொடர்பிலும் சந்தேகம் கொண்ட வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்தே இவ்விருவரையும் சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்தனர்.

# நீர் வழிந்தோடும் பகுதி மக்களால் புனரமைப்பு



(கரணவாய்)

கரணவாய் ஜே/350 கிராம சேவையாளர் பிரிவிலுள்ள காவில் வீதியில் நீர் வழிந்தோடும் பகுதி அக்கிராம மக்களால் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

உலக உணவுத்திட்டத்தின் கீழ் இக்கிராம மக்களால் இவ் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப்பகுதி கிராம அலுவலர் ரி.புவனேந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ்வேலைத்திட்டத்தில் 3 மைல் தூரம் வெள்ளம் வழிந்தோடும் வகையில் வீதிப்பகுதி திருத்தியமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (18)

# முரசின் இன்றைய பலன்

**(04.12.2012 - செவ்வாய்க்கிழமை)**

நந்தன வருஷம் கார்த்திகை மாதம் 19 ஆம் திகதி. நட்சத்திரம் ஆயிலியம் பின்னிரவு 3.08 வரை. திதி ஷஷ்டி பின்னிரவு 4.57 வரை.
இராகுகாலம் 3.16 - 4.46 வரை. சுபநேரம் 10.46 - 12.16 வரை.


**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | மனதில் பதற்றம். அன்பானவர்கள் ஆலோசனை. தொழில் ஏறுமுகம். குறைந்த பணவரவு. சமூகத்தில் மதிப்பு உயரும். இல்லறத்துணை ஆதரவு. |
| ரிஷபம் | உங்கள் பேச்சில் பிறர்மனம் புண்ணாகும். சினம் தணிக. தொழிலில் அனுகூலம். பணவரவில் திருப்தி. சொத்து சேர்க்கை. பதவி உயர்வு |
| மிதுனம் | குடும்பத்தினர் பாசம். தடைகள் தகர்ப்பீர்கள். தொழில சாதனை. பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். உடல் நலம் பலம். |
| கடகம் | எதிர்காலத்துக்கு முன்னேற்பாடுகள். தொழில் போட்டி. அளவான பணவரவு. உறவினர் வகையில் செலவு. பாதுகாப்பு கவனம். குடும்பத்தில் பிரச்சினை. |
| சிம்மம் | சூழ்நிலை அறிந்து செயல்படுக. அவசர பணி ஒன்று குறுக்கிடும். தொழிலில் புதிய யுக்திக்கு வெற்றி. அளவான பணவரவு. வாகன பயணத்தில் கவனம். |
| கன்னி | தேவை அதிகரிக்கும். அடுத்தவரிடம் நம்பிக்கை. கூடுதல் பணிபுரிவீர்கள். எதிர்பார்த்த பணவரவு. புத்திரரை கண்டிப்பு. உறவினர், நண்பர் உதவுவர். |
| துலாம் | எவரிடமும் நிதானித்து பேசுக. பகை வெல்லப் பொறுமை. உடல்நலத்தில் கவனம். தொழில் மந்தம். இரவல் கொடுக்க வாங்க வேண்டாம். |
| விருச்சிகம் | கலை உணர்வு. செயலில் சுறுசுறுப்பு. தொழில் வளர்ச்சி. பணவரவும் நன்மையும். வீட்டுபயோகப் பொருள் வாங்குதல். நண்பருடன் விருந்து. |
| தனுசு | செயலில் மதி நுட்பத்திறன். நல்ல நண்பர் தொடர்பு. தொழில், பலம் பெறும். உபரி வருமானம். வெகுநாள் நினைத்த பொருள் வாங்குவீர்கள். வழக்கு சாதகம். |
| மகரம் | செயல்களில் நியாய, தர்மம். உறவினர், நண்பர்கள் புகழ்வர். தொழிலில் புதிய வழிமுறை. பணவரவு அதிகரிக்கும். சமூக அந்தஸ்து. |
| கும்பம் | செயல்களில் நேர்த்தியும், திறமையும். தாமதமான பணி நிறைவேறும். தொழில் சிறந்து உற்சாகம். சராசரி பணவரவு. சுபமங்கல நிகழ்ச்சி. தொல்லை. |
| மீனம் | சொந்த நலனில் அக்கறை. சிலரது அதிருப்தியும் எதிர்ப்பும். பேச்சில் கவனம். அதிக உழைப்பு. எதிர்பார்த்த பணவரவு. உடல் நலத்திற்கு உணவில் கவனம். |

# எதிர்காலத்திற்கு நன்மையளிக்கும் திட்டங்களே தற்போது தேவையாகும்

(கிளிநொச்சி)

மக்களின் எதிர்காலத்திற்கு நன்மை பயக்கும் தீர்மானங்களே இக்காலத்தின் தேவையாகும். எமது மக்கள் மீண்டும் ஒரு இருண்ட யுகத்திற்கு செல்ல முடியாது எனவே எதிர்காலத்திற்கு நன்மை பயக்கும் தீர்மானங்களை மேற்கொள்வதில் மக்கள் மிகவும் தெளிவாக இருக்க வேண்டும் என ஈ.பி.டி.பி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்



நேற்று முன்தினம் கிளிநொச்சி - பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள தம்பகாமம் கிராமத்திற்கு 150 இலட்சம் ரூபா செலவில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மக்களை எவரும் தங்களின் அரசியல் இலாபங்களுக்காக ஏமாற்றிவிட முடியாது. அபிவிருத்தியின் முக்கியத்துவத்தை மக்கள் உணர்ந்துள்ளனர். அந்த வகையில் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதில் நாம் பல்வேறு வழிகளில் அதிக கவனம் செலுத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். அதிலும் கடந்த காலங்களில் அபிவிருத்தியில் புறக்கணிக்கப்பட்ட பிரதேசங்களிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகின்றோம்.

பளைப் பிரதேசத்தில் எழுபத்தைந்து வீதமான மக்களின் வீட்டுப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. அதே போன்று வீதி உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்கு நிதி ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக தம்பகாமம் வீதிக்கு 80 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதோடு ஐம்பது இலட்சம் ரூபா செலவில் இயக்கச்சியில் நூல் நிலையம் அமைக்கவும் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இயக்கச்சி, சின்னத்தாளையடி, பேராளை போன்ற பிரதேசங்களுக்கும் விரைவில் மின்சாரம் வழங்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவிட்டன எனவும் தெரிவித்தார்.

கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் சிவாஜி தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் சத்தியசீலன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உறுப்பினர்களான அன்ரன் அன்பழகன், தியாகராஜா, இலங்கை மின்சார சபையின் வடக்கின் வசந்த திட்ட முகாமையாளர் குணசீலன் உள்ளிட்டபலர் கலந்துகொண்டனர்.

# தொலைக்காட்சி அன்பளிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் 6 ஆம் இலக்க ஆண்கள் விடுதிக்கு உசன் மிருசுவிலைச் சேர்ந்த குலராஜசிங்கம் சிவனேஸ்வரன் என்பவர் தனது தாயின் நினைவாக தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் டி.வி.டி பிளேயர் ஆகியவற்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இவ் உபகரணங்களை குலராஜசிங்கம் சிவனேஸ்வரன் வைத்தியசாலை பொறுப்பதிகாரியிடம் அண்மையில் கையளித்தார்.

ஏற்கனவே இவ்விடுதிக்கு இங்கு தங்கி நின்று சிகிச்சை பெற்று வெளியேறிச் சென்றவர்களால் மீன் தொட்டி சுவர்க் கடிகாரங்கள் என்பன அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (11)

# பரிசளிப்பு விழா

(பருத்தித்துறை)

தேசியபாடசாலையான நெல்லியடி மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரியின் கேட்போர் கூடத்தில் கல்லூரி அதிபர் செ.சேதுராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் ச.சத்தியசீலன் கலந்து கொள்வதுடன், பரிசில்களை இராஜகேஸ்வரி சத்தியசீலன் வழங்கி கௌரவிக்கவுள்ளார். (109)

# குடும்பஸ்தர்மீது தாக்குதல்; இருவர் பொலிஸாரால் கைது

வட்டுக்கோட்டைப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவரை வெற்று பியர் போத்தலினால் தலையில் அடித்துப் படுகாயப் படுத்திய இரண்டு இளைஞர்களை வட்டுக்கோட்டைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். நேற்று முன்தினம் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச்சேர்ந்த தேவராஜா ஜீவராஜா என்பவர் தலையில் படுகாயமடைந்த நிலையில், சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வாசிகசால்லை ஒன்றின் பிணக்குக்காரணமாக அந்தப்பகுதியைச் சேர்ந்த இளைஞர் குழுவினர் மது அருந்திவிட்டு, வீதியால் சென்று கொண்டிருந்த குறித்த நபர் மீது வெற்றுப் பியர்ப் போத்தலால் தலையில் அடித்து படுகாயப்படுத்தியதாகத் தெரியவருகின்றது.

இந்தச் சம்பவத்தை அடுத்து, வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்கு குறித்த நபர் தகவல் வழங்கியதை அடுத்து இரு இளைஞர்கள் இந்தச்சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது. (பா)

# அச்சுவேலி பிரதேச சபையால் புதிய பேருந்து நிலையம் நிர்மாணிப்பு

(யாழ்ப்பாணம்)

புதிய பேருந்து நிலையம் ஒன்று அச்சுவேலி மத்திய பகுதியில் அமைக்கப்பட்டு வருகின்றது. 40 வருடங்கள் பழமையான பேருந்து நிலையத்தினை இடித்து அகற்றி இப் புதிய பேருந்து நிலையம் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இதற்கு முன்னர் இருந்த பழைய பேருந்து நிலையம் பயணிகளுக்கு போதிய வசதியற்று காணப்பட்டதுடன் மிகச்சிறிய விசாலத் தன்மையை கொண்டதாகவும் காணப்பட்டது.

இதனால் மழைகாலத்தில் பயணிகள் தங்கி நின்று பல சிரமங்களை எதிர்கொண்டே தமது பயணங்களை மேற்கொள்ளவேண்டி இருந்தது.

இப் புதிய பேருந்து நிலையம், பிரதேசங்களை அபிவிருத்தி செய்து உட்கட்டமைப்புக்களை ஏற்படுத்தல் என்ற தொனிப்பொருளில் அச்சுவேலிபிரதேச சபையினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்காக 35 இலட்சம் ரூபா பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி புதிய பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் பயணிகள் தமது பயணங்களை இலகுவாக மேற்கொள்வதற்காக புதிய பேருந்து நிலையத்தில் போக்குவரத்து சபை பேருந்துகளுக்கு ஒரு பகுதியும், அச்சுவேலி தனியார் சிற்றூர்திகளுக்கு இன்னொரு பகுதியும் ஒதுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எம்.ஆர்)



# விடைபெற்றார் பொண்டிங்

அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் கப்டன் ரிக்கி பொண்டிங்கின் கிரிக்கெட் வாழ்க்கை நேற்று நிறைவுக்கு வந்தது. தென்னாபிரிக்க அணியுடனான இரண்டாவது இனிங்ஸில் அதிக ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக்கொள்வார் என எதிர்பார்க்கப்பட்டபோதும், தனது கிரிக்கெட் வாழ்க்கையில் கடைசி இனிங்ஸில் வெறும் எட்டு ஓட்டங்களைப் பெற்று ரொபின் பீற்றர்சன் பந்தில் கலிஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து பெரும் ஏமாற்றமளித்தார். இதுவரை 168 டெஸ்ட் போட்டிகளில், 285 இனிங்ஸில் 13374 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இதில் அதிக பட்சமாக 257 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். 41 சதங்களையும், 65 அசைச் சதங்களையும் அடித்துள்ளார். நேற்றைய தினம் தனது குடும்பத்துடன் பேர்த் மைதானத்தினை வலம் வந்ததையும், துடுப்பெடுத்தாட வந்த வேளை, தென்னாபிரிக்க அணி வீரர்கள் மரியாதை செலுத்துவதையும், ஆட்டமிழந்து செல்லும்போது இரசிகர்கள் மரியாதை செலுத்துவதையும் காணலாம்.

## உலக மகளிர் சதுரங்கம் உக்ரைன் வசம் கிண்ணம்

(கான்ட்டி மன்சியாக்)

உலக மகளிர் சதுரங்க சம்பியன்ஷிப் போட்டியில், பல்கேரிய வீராங்கனை அன்டோவானெடாவை வீழ்த்தி, உக்ரைனின் அன்னா உசேனினா பட்டத்தை வென்றார்.

ரஷ்யாவின் கான்ட்டி மன்சியாக் நகரில் உலக மகளிர் சதுரங்க சம்பியன்ஷிப் போட்டி நடந்தது.

இறுதிப்போட்டியில், அன்டோவானெடாவும், அன்னா உசேனினாவும் மோதினர்.


இதில்,முதற்கட்டப் போட்டிகளில் . 2-2 என்ற நிலையில் இருந்ததால், இறுதிப்போட்டி விறுவிறுப்பானது. விரைவு நேர பிரிவில் முதல் ஆட்டம் சமநிலையில் முடிந்த நிலையில் அடுத்த 2 ஆட்டத்தை உசேனினா கைப்பற்றினார். இதன் மூலம் அவருக்கு 33 இலட்சம் பரிசு கிடைத்தது.

இந்த வெற்றி சிறப்பானது. இதில் பங்குகொண்ட வீரர்களுக்கு எமது பாராட்டுக்கள். நாட்டுக்குப் பெருமை சேர்ந்த வீரர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்படும் என உக்ரைன் சதுரங்க சம்மேளனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## தொடரை வென்றது தென்னாபிரிக்கா

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான பேர்த் டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 309 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் மூன்று போட்டிகளைக்கொண்ட டெஸ்ட் தொடரை 1-0 என்ற கணக்கில் தென்னாபிரிக்க அணி கைப்பற்றிக் கொண்டது.தென்னாபிரிக்க, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக்கொண்டடெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி பேர்த்தில் நேற்று நிறைவடைந்தது. இதில் 632 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய அவுஸ்ரேலிய அணி ஸ்டெயின், ரொபின் பீற்றர்சன் ஆகியோரின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் திணறியதுடன் விக்கெட்டுக்களையும் விரைவாக இழந்தது. எனினும் பத்தாவது விக்கெட்டுக்காக இணைந்த லம்ப், ஸ்ராக் இணை அதிரடியாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையைச் சடுதியாக உயர்த்தியது. பத்தாவது விக்கெட்டுக்காக இந்த ஜோடி 87 ஓட்டங்களைப் பெற்றவேளை பிரிக்கப் பட்டது. இறுதியில் நான்காம் நாள் ஆட்டத்தின் தேநீர் இடைவேளைக்குப் பின்னர் அவுஸ்ரேலிய அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 322 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வி அடைந்தது. இதில் ஸ்ராக் 43 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர், ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 68 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார். மற்றும் லம்ப் 43 பந்துகளில் ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 31 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். மற்றும் கௌவான் 58, கிளார்க் 44 ஓட்டங் களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரொபின் பீற்றர்சன், ஸ்டெயின் தலா மூன்று, மோர்கல் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இதன் மூலம் தென்னாபிரிக்க அணி 309 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது. அத்துடன் மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை 1-0 என்ற கணக்கில் கைப்பற்றிக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயகனாக அம்லா, தொடர் நாயனாக மைக்கல் கிளார்க் தெரிவானார்கள்.



## விருந்தில் பங்கேற்கத் தடை

(புதுடில்லி)

இந்திய அணியுடனான போட்டிகளில் கலந்து கொள்ளும், பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் தனியார் விருந்தில் கலந்துகொள்ள, அந்நாட்டு கிரிக்கெட் சபை தடை விதித்துள்ளது. மும்பை தொடர் தாக்குதல் சம்பவத்துக்குப் பின்னர் முதல் முறையாக, பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் ருவென்ரி-20 போட்டி வரும் 25ஆம் திகதி பெங்களூரில் நடைபெறவுள்ளது.


இந்தியாவில், பாகிஸ்தான் அணி 12 நாட்கள் தங்க உள்ளது. இதற்கான ஏற்பாடுகள் வேகமாக நடந்துவருகின்றன. இந்நிலையில், பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் செய்தித் தொடர்பாளர் நதீம் சர்வார் கூறியதாவது: சில பாதுகாப்பு விதிகளை பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் பின்பற்ற வேண்டியது அவசியமாக உள்ளது.இதனால் நண்பர்கள், இரசிகர்கள் என யாருடைய வேண்டுகோளையும் ஏற்று தனியார்விருந்துகளில் பாகிஸ்தான் வீரர்கள் கலந்து கொள்ளக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மேலும், தாங்கள் தங்கியுள்ள விடுதி அறைக்கு, விருந்தாளிகளை அழைத்துச் செல்லக்கூடாது என்றும் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.எனினும்,இந்திய அரசு அல்லது பாக்.தூதரகம் சார்பில் நடக்கும் விருந்துகளில் கலந்து கொள்ளலாம் என்றார்.

## அவுஸ்ரேலியாவுடனான தொடர் பயணமானது இலங்கை அணி

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவுடனான கிரிக்கெட் தொடர் போட்டிகளில் பங்கேற்கும் வகையில் இலங்கை அணி நேற்று அதிகாலை அவுஸ்ரேலியா பயணமாகியுள்ளது.

மூன்று டெஸ்ட் போட்டிகள், ஐந்து ஒருநாள் போட்டிகள், ருவென்ரி-20 போட்டிகளில் இரண்டு அணிகளும் களமிறங்கவுள்ளன. இதன்போது இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 14ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இதன்படி, எதிர்வரும் வருடம் ஜனவரி மாதம் 28ஆம் திகதி இடம்பெறும் ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டியுடன் இந்த கிரிக்கெட் சுற்றுலா நிறைவடையவுள்ளது.



## தலைமைப் பதவி குறித்து பரிசீலிக்கவுள்ள மஹேல

(கொழும்பு)

அவுஸ்ரேலிய அணியுடனான கிரிக்கெட் தொடரின் பின்னர் தலைமைப் பதவி குறித்துப் பரிசீலிக்கப் போவதாக இலங்கை அணிக் கப்டன் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

அணித்தலைமைப் பதவியேற்று எதிர்வரும் அவுஸ்ரேலியத் தொடரோடு ஒரு வருடகாலம் நிறைவடைகின்றது. அதன் பின்னர் எனது நிலை குறித்து சிந்திக்க வேண்டிய தேவையுள்ளது. இளம் வீரர்கள் தலைமைப் பதவியை ஏற்பதுதான் என்னைப் பொறுத்த வரை அணிக்கு சிறந்ததாகும். அத்துடன் எதிர்வரும் உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடும் போது போதிய அனுபவம் அவருக்குக் கிடைக்கும். அதை உணர்ந்தே நான் செயற்படுவேன் எனத் தெரிவித்தார்.

## எனது ஹீரோ சச்சின்



(கொல்கத்தா)

சச்சின் டெண்டுல்கர்தான் தனது ஹீரோ என இந்திய அணியின் அதிரடி வீரர்களில் ஒருவரான யுவராஜ்சிங் தெரிவித்துள்ளார்.

டெண்டுல்கர் பற்றிய 'தி பீக்' என்ற புத்தகம் வெளியீட்டு விழா கொல்கத்தாவில் நடந்தது.

இந்தப் புத்தகத்தை வெளியிட்டு வைத்த யுவராஜ்சிங், இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறு வயதில் இருந்தே டெண்டுல்கரின் ஆட்டம் எனக்கு மிகவும் பிடிக்கும். தற்போது வரை அது தொடர்கிறது. அவர்தான் எனது ஹீரோ. அத்தோடு தேசத்தின் ஹீரோவும் அவர்தான்.

டெண்டுல்கருடன் இணைந்து ஆடுவது சிறு வயதில் கனவாக இருந்தது. அந்தக் கனவு நனவாகி அவருடன் இணைந்து பயணத்தை தொடர்வது அற்புதமானது என்றார்.

# தேசிய மட்ட மேசைப்பந்தாட்டம்

## 2ஆம் இடம் வவு. சுந்தரபுரம் அ.த.க.



(கொழும்பு)

தேசிய மட்ட மேசைப்பந்தட்டப் போட்டியில் வவுனியா சுந்தரபுரம் அ.த.க. பாடசாலை அணி இரண்டாமிடத்தைப் பிடித்துக்கொண்டது.

தேசிய மட்ட மேசைப்பந்தாட்டப் போட்டி அண்மையில் கொழும்பு சென். தோமஸ் உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இதில் 16 வயதுப் பிரிவில் பங்குபற்றிய வவுனியா சுந்தரபுரம் அ.த.க. பாடசாலை அணி இரண்டாமிடத்தைப் பிடித்துச் சாதனை படைத்துள்ளது.

இப்போட்டியில் வவுனியா சுந்தரபுரம் அ.த.க. பாடசாலை அணி சார்பாக அ. சன்லி, சி. கீர்த்தீபன், சி. சஜீபன் ஆகியோர் பங்குபற்றினர். இவர்களின் பயிற்றுநராக வில்லியம் ஜெபநேசன் கடமையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. இரண்டாமிடத்தைப் பிடித்துக்கொண்ட வவுனியா சுந்தரபும் அ.த.க. பாடசால்லை அணிக்கு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த விளையாட்டு ஆர்வலர்கள், கல்வி அதிகாரிகள், நலன்விரும்பிகள் எனப் பல தரப்பினரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (93)

## மகாஜனா, ஹென்றியரசர்

## தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி

(கொழும்பு)

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்டும் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான தேசிய மட்ட கால்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 14,15,16ஆம் திகதிகளில் அம்பாறை, கல்முனையில் நடைபெறவுள்ளதாக இலங்கை கால்பந்தாட்ட வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆண்கள், பெண்கள் என இரு பிரிவுகளாக இடம்பெறவுள்ள இப்போட்டித் தொடரில் யாழ். மாவட்டம் சார்பாக இரு அணிகள் பங்குபற்றுகின்றன. ஆண்கள் பிரிவில் இளவாலை ஹென்றியசரர் கல்லூரி அணியும், பெண்கள் பிரிவில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணியும் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வணிகள் எதிர்வரும் முதல் வீார முற்பகுதியில் கல்முனை பயணமாகும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (எஸ்.பி.).

## மத்தியஸ்தர் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை கால்புந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் கால்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான தமிழ் மொழி மூலமான பரீட்சை எதிர்வரும் 22, 23 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்ஸையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோண்மலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தோர் பரீட்சையில் தோற்றவுள்ளனர்.

தரம் I, தரம் II, தரம் III மத்தியஸ்தர்களைத் தெரிவு செய்வதற்காக மேற்படி பரீட்சைகள் நடைபெறவுள்ளன. இப்பரீட்சைகளுக்கான பயிற்சி வகுப்புக்கள் தற்போது நாவாந்துறை சென்.நீக்கிலஸ் மைதான மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது என யாழ்ப்பாண கால்பந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கச் செயலாளர் அ.அஜித்குமார் தெரிவித்தார்.

# பிறிமா வெற்றிக்கிண்ணா கிரிக்கெட்

## கிளிநொச்சி, மாங்குளத்தில் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பிறிமா வெற்றிக் கிண்ண கிரிக்கெட் தொடர் இன்றைய தினம் கிளிநொச்சி மத்திய கல்லூரி மற்றும் மாங்குளம் மகாவித்தியாலயம் ஆகிய மைதானங்களில் இடம்பெறவுள்ளன.

இலங்கை கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணையுடன், பிறிமா வெற்றிக்கிண்ண கிரிக்கெட் தொடர் அகில இலங்கை ரீதியாக் வருடாவருடம் நடத்தப்பட்டு வருகின்றது. இப்போட்டித் தொடரின் முதல் சுற்று ஆட்டங்கள் மாகாணத்திலுள்ள மாவட்ட தெரிவு பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டித் தொர்டர் இன்று தொடக்கம் வரும் 6ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.இதில் யாழ். மாவட்ட பாடசாலை தெ்ரிவு அணி குழுவில், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட பாடசாலை தெரிவு அணிகள் இடம்பிடித்துள்ளன.

இப்போட்டித் தொடரில் சம்பியனாகும் அணி இரண்டாவது சுற்றுப் போட்டிக்குத் தகுதிபெறும். யாழ். மாவட்ட பாடசாலைகள் தெரிவு அணியில், யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஜெனவர்ஸ்த சர்மா, உதயன், கஜணன், துவாரகன், வாதுகோபன், சிவலக்ஸன் ஆகியோரும், சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த நிலோஜன், பிளமிங், புகழினியன் ஆகியோரும், சென். பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த கிருசாந்தன், அகிபன், அல்பில் ஆகியோரும்; யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த சோமிதரன், சுபன்ராஜ் ஆகியோரும் இடம்பிடித்துள்ளனர்.

(எஸ்.பி.)



சண்டிலிப்பாய் கோட்ட மட்ட கால்பந்துப் போட்டியில் 18 வயதுப் பிரிவில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியினரைக் காணலாம். அண்மையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி முதலிடத்தைப் பிடித்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (93)

## யூனியன் அணி வெற்றி



(யாழ்ப்பாணம்)

யாழில் நடைபெற்று வரும் விலகல் முறையிலான கால்பந்தாட்ட சுற்றுப்போட்டி ஒன்றில் ஆனைக்கோட்டை யூனியன் அணி வெற்றிபெற்றுள்ளது.

குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில் பொற்பதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகம் மோதியது.

முதல்பாதி ஆட்டத்தில் யூனியன் விளையாட்டுக் கழகம் 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலைபெற்றது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் யூனியன் அணி வீரர் நிரோஜன் 70 ஆவது நிமிடத்தில் ஒரு கோல் போட்டார். மேலும் இரண்டு நிமிடங்களில் அவ்வணி வீரர் ஸ்ரீபன்ராஜ் மேலும் ஒரு கோல் போட்டார்.

இறுதியில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகம் 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# யாழ் தமிழ் சமுதாயமும், சமூக தலைமைகளும் அந்த மாணவர்களை சரியாக வழிநடத்தினார்களா?

இனப்போர் முடிவுக்கு வந்த காலகட்டம் வரை, "மாவீரர் தினம்" விடுதலைப் புலிகள் இயக்கத்தால் மட்டுமே அனுஷ்டிக்கப்பட்டு வந்தது. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிடியில் இருந்த இலங்கையின் பகுதிகளிலும் சரி அல்லது புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழும் நாடு - நகரங்களிலும் சரி, அந்த இயக்கத்தின் ஆதரவாளர்களே அதில் பங்கு பெற்று வந்தனர்.

இனப்போர் முடிந்த பின்னரே, "மாவீரர் தினம்" விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு அப்பாற்பட்டு, இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளில் அனுஷ்டிக்கப்படுகிறது. அந்த விதத்தில், அதனை விடுதலைப் புலிகளுடன் மட்டுமே ஆட்சியாளர்கள் அடையாளம் கண்டு கொண்டால், அது அவர்களது தவறு என்று மட்டும் கொள்ள முடியாது.

இறந்துபட்ட தமிழ் மக்களின் நினைவைப் போற்றுவதற்கு பதிலாக, ஒரு சாரார் அதனையும் அரசியலாக்க கடந்த மூன்று ஆண்டுகளாக முயன்று வருகிறார்கள் என்பதும் உண்மை. அந்த உண்மை கசக்கிறது. அந்த விதத்தில் இறந்தவர்களின் நினைவை கொச்சைப்படுத்துவது நினைத்தும் பார்க்கக் கூடாத விஷயம். அதனைச் செய்பவர்கள், அரசு அதிகாரிகளாக இருந் தாலும், சிங்கள பேரினவாதிகளாக இருந்தாலும், அல்லது தமிழர்களாகவே இருந்தாலும் அது போன்ற முயற்சிகள் கண்டிக்கப்பட வேண்டியது. இதனை, தமிழ் சமூகம் அவரவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

அந்த விதத்தில், யாழ் பல்கலை வளாகத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் மட்டுமே அடையாளம் காணப்பட்ட "மாவீரர் தினம்" அனுஷ்டிக்கப்படுவதை ஆட்சியாளர்கள் சந்தேக கண்களுடனேயே பார்ப்பார்கள் என்பது எதிர்பார்க்கப்பட வேண்டிய விஷயமே.

அதற்கு "முறிவு மருந்தாக" மாணவர்களோ, அல்லது அவர்களில் சிலராவது சார்ந்திருக்கும் தமிழ் அரசியல் கட்சிகளோ அல்லது பிற இயக்கங்களோ ஏதாவது முன் முயற்சி எடுத்ததாகத் தெரியவில்லை. அது போன்றே, யாழ் தமிழ் சமுதாயமும், சமூக தலைமைகளும் கூட அந்த மாணவர்களை சரியாக வழி நடத்தினார்களா என்பதும் புலப்படாத ஒன்று.

ஆனால், பிரச்சினை பெரிதாகி மாணவர்கள் தாக்கப்பட்ட பிறகு, அவர்களில் ஒவ்வொருவராக யாழ்ப்பாண விஜயம் மேற்கொள்வதும், அரசு குறித்தும் தமிழர்களின் பிரதிநிதிகளாக அரசில் பங்கு பெறும் சிலரை தாக்கி அறிக்கை விடுவதும் வாடிக்கையாகி போய்விட்ட விஷயம். இதனால், அந்த மாணவர்களோ, தமிழ் மக்களோ எந்த வித பயனை-யும் அடையப் போவதில்லை. மாறாக, அவர்களிடையே பத்து - பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக குறைந்து வந்திருந்த அரசும் காவல் துறையும் குறித்த பயமும், அதனால் அவர்கள் எதிர்கொள்ள வேண்டிய அபாயங்களும் தான் கூடியுள்ளன.

இன்று வடக்கில் வாழும் தமிழ் மக்களின் அவலமே, அங்குள்ள சமூக தலைமைகளும் தங்களை மக்களோடு மட்டும் அடையாளம் காட்டிக் கொள்ளாமல், அவர்களது அரசியல் தலைமையுடனும் தோள் மேல் தோள் போட்டு பணியாற்றுவதே ஆகும். மற்றவை அனைத்துமே பேசி தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள்தான். ஆனால். அரசும், சிங்கள பேரினவாதிகளும் கடந்த 30 - 40 ஆண்டுகளாக தமிழ் அரசியல் தலைமைகளை



– என். சத்தியமூர்த்தி கட்டுரையிலிருந்து.

நம்பாததும், அது போன்றே தமிழர்களும் பிறரை நம்ப வைக்க முடியாததும் ஒரு சாபக்கேடாக மாறிவிட்டது.

குறிப்பாக சிங்கள அரசியல் தலைமைகளுக்கு பேரினவாதிகளின் வாக்கு வங்கியை இழப்பது என்பது சாத்தியமில்லாமலே போய்விட்டது. இனப் போருக்கு பின்னாலான தற்போதைய காலகட்டத்தில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு போன்ற தமிழ் அரசியல் தலைமைகளும் இது போன்ற சூழ்நிலையில் தங்களை ஐக்கியப்படுத்திக் கொண்டுள்ளன.


இனப்பிரச்சினை பேசித் தீர்க்கப்பட வேண்டிய விஷயம். அவ்வாறு நடைபெறாத காரணத்தினாலேயே, இனப்போராக முடிந்தது. இன்று, தமிழர்களுக்கு பேச்சும் பயனளிக்கவில்லை, போரும் பயன் தரவில்லை. இந்த பின்னணியில், மீண்டும் அடுத்த தலைமுறை தமிழ் இளைஞர்களுக்கு கொம்பு சீவி விடுவதால் மட்டும், பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிட முடியாது. மாறாக, அரசியல் தீர்வு அல்லது நீதிமன்றத்தின் துணையுடன் செய்யப்படும் முயற்சிகளே பயன் அளிக்கும் வாய்ப்பாவது உள்ளது.

இனப்பிரச்சினை துளிர்விடத் துவங்கிய காலகட்டத்தில், போர் அனுபவமே இல்லாத 15,000 பேர் மட்டுமே பங்கு பெற்றிருந்த இலங்கை இராணுவத்தில், இன்று பத்து பங்கிற்கும் அதிகமானோர்கள் செயற்படுகிறார்கள். தமிழர் தரப்பில் அன்று இருந்த மக்கள் தொகையில் முடிந்தவர்கள் எல்லாம் வெளிநாடுவாழ்-தமிழர்களாக தங்களை பிரகடனப்படுத்தக் கொள்வதில் பெருமைப்படுகிறார்கள்.

இந்த காரணத்தினாலும், இனப்போரில் இழந்த உயிர்களின் காரணமாகவும் இலங்கையில் குறைந்துபட்ட தமிழ் சிறார் பிறப்புகளாலும், அறப்போராட்டமோ, அமைதிப் போராட்டமோ, அதற்குக் கூட நாட்டில் தமிழர் எண்ணிக்கை இல்லாமலே போய்விடும் வாய்ப்புகள் உள்ளன.

ஆனால், உணர்வுகளை மட்டுமே வைத்துக் கொண்டு இனப்பிரச்சினையை பலஸ்தீனம் போன்ற பிற சர்வதேச பிரச்சினைகளோடு ஒப்பிட்டுப் பேசி குழப்பம் அடைந்தால், அதனால் சாதிக்கப் போவது எதுவுமில்லை. ஆனால். தற்போதைய யாழ். பல்கலை சம்பவம் போன்ற நிகழ்வுகளே மறந்துபட வேண்டிய நாட்களை மீண்டும் நினைவிற்கும் நிகழ்விற்கும் கொண்டு வந்தால், அடுத்த தலைமுறை தமிழ் இனமும் புலம்பெயர் தமிழ் சமூகத்தின் பகுதியா-கவே மாறிவிடும். பின்னர், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஏற்பட்டாலும், அதன் பலனை அனுபவிக்க தமிழ் இனமே இலங்கையில் இல்லாமல் போய் விட்டிருக்கலாம். பேரினவாதிகள் விரும்புவதும் அதைத் தானே!

# இரத்தக் கொதிப்பைக் குறைக்க...



இன்றைய பரபரப்பான வாழ்க்கைச் சூழலில் உயர் இரத்த அழுத்தம் எனப்படும் "ஹைபர் டென்ஷன்" பலரின் வாழ்க்கையில் குடிகொண்டுள்ளது. இந்த உயர் இரத்த அழுத்தம் "சைலன்ட் கில்லர்" என்று அழைக்கப்படுகிறது.

ஏனென்றால் உடலில் அமைதியாகக் குடிகொண்டு உயிரையே பறித்துவிடும் தன்மை உடையது. நாடிகளில் உள்ள இரத்தத்தில் ஏற்படும் அழுத்தமே உயர் இரத்த அழுத்தமாகும். இரத்த அழுத்தத்திற்கு மருத்துவம் பார்க்காவிட்டால் மாரடைப்பு, இதயநோய், பக்கவாதம், சிறுநீரக செயலிழப்பு, இதயம், கண்கள் செயலிழத்தல் போன்றவை ஏற்படும்.

*உயர் இரத்த அழுத்தத்திற்கான முக்கிய காரணங்கள்*

உடல் பருமன்
வாழ்க்கை முறை மாற்றம்
மரபணு காரணிகள்
அதிக அளவில் மது அருந்துதல்
வலி நீக்கும் மருந்துகளை அதிக அளவில் உட்கொள்ளுதல்
கருத்தடை மாத்திரைகள் உட்கொள்ளுதல்

*பொதுவான காரணங்கள்*

சிறுநீரக வியாதிகள்
அசாதாரணமாக இயங்கும் இரத்த நாளங்கள்
கர்ப்ப காலத்தில் வரும் வலிப்பு நோய்
தைரோய்ட் பிரச்சினைகள்

*வீட்டில் இருந்தே இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்துவது எப்படி?*

100 கிராம் முலாம்பழ விதைகளுடன், 100 கிராம் கசகசாவை சேர்த்துத் தூளாக்கி வைத்துக்கொள்ள வேண்டும். தினமும் காலை, மாலை வேளைகளில் 1 தேக்கரண்டி தூளை சாப்பிட்டு தண்ணீர் குடிக்க வேண்டும்.

தினமும் காலையில் வெறும் வயிற்றில் ஒரு கிராம்பை மென்று தின்று, வாயைக் கழுவ வேண்டும். மென்று தின்ன முடியாதவர்கள் தண்ணீர் சேர்த்து விழுங்கலாம்.

25 - 30 கறிவேப்பிலையுடன் 1 டம்ளர் தண்ணீர் சேர்த்து அரைத்து, சாறெடுத்து, வடிகட்டி காலையில் எழுந்தவுடன் குடிக்கலாம். சுவை பிடிக்காதவர்கள் சிறிது எலுமிச்சை சாறையும் அதனுடன் சேர்த்துக் கொள்ளலாம்.

கொத்தமல்லி அல்லது வெந்தய இலைகளையும் சாறெடுத்துப் பருகலாம். ஒருவர் தன் உடலுக்கு எது ஏற்றது என்று பரிசோதித்துப் பார்த்துப் பருக வேண்டும்.

1 தேக்கரண்டி தேனுடன், 1 தேக்கரண்டி இஞ்சிச் சாறு, 1 தேக்கரண்டி சீரகப்பொடி ஆகியவற்றைக் கலந்து, காலை, மாலை இருவேளைகளில் அருந்தலாம்.

# பூமி

- ஆயிரம் ஏரிகளின் பூமி - பின்லாந்து.
- வெள்ளை யானைகளின் பூமி - தாய்லாந்து.
- புனித பூமி - பலஸ்தீனம்.
- கங்காரு பூமி - அவுஸ்ரேலியா.
- பளிங்கு பூமி - இத்தாலி.
- ஐந்து நதிகளின் பூமி - பஞ்சாப்.
- இடி, மின்னல் பூமி - பூட்டான்.
- அல்லிகளின் பூமி - கனடா.

# இஞ்சி



☆ "இஞ்சிக்கு எரிப்பு கொண்… புளிப்பு கொண்டாட்டம்" என்பது …

☆ இதன் மருத்… குழாய்களில் நேரிடும்… மாக வரும் மாரடைப்… கண்டுபிடித்துள்ளனர்.


☆ கடினமான ப… செய்யும்.

☆ பித்த வாயுவை … சுரக்கும் உமிழ்நீரைப் பெருக்…

☆ இஞ்சி, வெள்ளை வெ… சாறையும் ஒரு "அவுன்ஸ்" அளவா… ஓயாத வாந்தி, குமட்டல், பித்தமயக்க… வெங்காயத்திற்குப் பதில் மாதுளம் பழ… இருமல், இரைப்பை நோய் குணமாகும்.

☆ இஞ்சியை சுத்தம் செய்து மேல் தோல் சீவி சிறு சிறு துண்… எடுத்து, ஒரு வாயகன்ற சாடியில் போட்டு சுத்தமான தேன் 100 கிரா… தினமும் காலையில் வெறும் வயிற்றில் ஓரிரண்டு துண்டுகள் என செ… வேண்டும். இதனால் பித்தம் அறவே நீங்கும்.

('மருத்துவம் அறிவோ…



# ஞானதீர்த்தம்!

ஒரு இரகசியம் சொல்கிறேன்... நான் காபி சாப்பிடுவதில்லை. காபியின் சுவையை அடியோடு அறியாதவன் அல்ல. இளமையில் சாப்பிட்டேன். பிறகு விட்டுவிட்டேன். என்னுடைய ஆசிரியப் பிரானாகிய டாக்டர் ஐயரவர்கள் (உ.வே.சா.) காபி சாப்பிடுவதுண்டு. பிற்பகல் நேரத்தில் அவர்கள் காபி சாப்பிடும் போது, நான் அருகில் இருப்பேன். "உனக்கு கொடுக்காமல் நான் சாப்பிடுகிறேன்!" என்று வருந்துவார். அவர் உள்ளம் வேதனைப்படுவதை அறிந்து, அவர்கள் கொடுக்கும் காபியை உண்டேன். பின் இருவேளையும் காபி சாப்பிடத் தொடங்கினேன். அவர் அமரரான பின், மறுபடியும் காபியை விட்டுவிட்டேன்.

ஐயரவர்களால் நான் மீண்டும் காபி சாப்பிடத் துவங்கிய போது, என்னுடைய அன்னையார் இருந்தார். நான் காபி சாப்பிடுவதைக் கண்டு அவருக்கு பெருமகிழ்ச்சி. அப்போது ஒரு விசித்திரத்தைக் கவனித்தேன். காபி தாய்ப்பாசத்தையும் மாற்றி விடுகிறது என்பதை உணர்ந்தேன். நான் பகலுணவு உண்ண நேரமானால், என் அன்னையார் உண்ணாமல் காத்திருப்பார். எத்தனை நேரமானாலும் சரி, உண்ணாமல் இருப்பார். ஆனால், காபி விஷயத்தில் அப்படியில்லை, எனக்கு கொடுக்காமலே சாப்பிட்டு விடுவார். அப்போது தான் காபியின் வலிமையை உணர்ந்தேன். தாயன்பையும் மாற்றும் கொடிய பானம் அது. இப்படிச் சொல்லாமல் பற்று - பாசத்தை மறக்கச் செய்யும் ஞானதீர்த்தம் அது என்றும் சொல்லலாம் அல்லவா...

**- கி.வா.ஜ. ஒரு கட்டுரையில்.**

# வெடிகுண்டைக் கண்டுபிடித்தது யார்?



வெடிகுண்டுகளை முதன் முதலில் கண்டுபிடித்தது சீனர்கள் என்ற கருத்து பரவலாக இருந்து வருகிறது, ஆனால், உண்மை வேறு.

வரலாற்றைப் பார்க்கும்போது, போரையே தொழிலாகக் கொண்டவர்களின் கவனத்தில், அவர்கள் காலகட்டத்திலேயே கண்டுபிடிக்கப்பட்ட வெடிகுண்டு, ஏனோ அவர்கள் கவனத்திற்கு வராமல் போயிருந்தது தெரிய வருகிறது.

வெடிமருந்தை ஒரு குழாயினுள் கொட்டி, போரில் அதை யார், எப்படி, முதலில் பயன்படுத்தினர் என்பதெல்லாம் உறுதியாகத் தெரியவில்லை.

வெடி மருந்து செய்யும் முறையை முதன் முதலில் கூறியவர் ரோஜர் பேக்கன் (1216-1292) என்பவர். இவர் பிரான்சிஸ்சன் என்ற சபையைச் சேர்ந்த துறவி. எதையும் சோதித்து அறிவதன் முக்கியத்துவத்தை உணர்த்தியவர்.

ஒரு பொருள் எரிவதற்கு, காற்று (ஒட்சிசன்) தேவை என்று கண்டு சொன்னவரும் இவர் தான். கண் பார்வையை சரி செய்ய, கண்ணாடியை முதன் முதலில் கண்டுபிடித்தவரும் ரோஜர் பேக்கனே! அவர், தன் காலத்து அறிவியல்துறை அனைத்தின் வினைப் பயன்களை எல்லாம், 1266இல், ஒரு நூலாக தொகுத்துள்ளார். அந்த நூலில் வெடிமருந்து செய்யும் முறையை எழுதியிருக்கிறார்.

அது - ஏழு பங்கு வெடி உப்பும், ஐந்து பங்கு கரித்தூளும், அதற்கு சமமாக கந்தகமும் சேர்த்தால், அக்கலவையைக் கொண்டு, பெரிய மின்னலையும், இடி முழக்கத்தையும் உண்டாக்கலாம் என்று எழுதியுள்ளார்.

ஆனால், இப்படி நேரடியாக எழுதவில்லை. கொடியவர் எவரும் இக்கண்டுபிடிப்பை தவறாக பயன்படுத்தி விடுவரோ என அஞ்சி, எழுத்துக்களை மாற்றி மாற்றி அமைத்து, புதிர் போல எழுதி வைத்து விட்டார். அது, பல காலம் அறியப்படாமலே இருந்து பின்னர்தான் கண்டுபிடிக்கப்பட்டது.

ஆச்சரியம். ஆனால் உண்மை. ஒரு வழியாக அது நடந்து விட்டது. ஆடல், பாடல், வில்லன், சண்டை, ரத்தம், குத்து வசனங்கள், நகைச்சுவைக்கு தனி நடிகர், அம்மா - தங்கச்சி சென்ட்டிமென்ட், லூசுத்தனமான கதாநாயகி, பழி வாங்குதல், தியாகம் செய்தல், தர்மத்தைக் காத்தல், அநியாயத்தை அழித்தல், மெஸ்சேஜ் வரும், நாயகனின் அத்தை மகன் சதீஷாக வருபவரும் ஒரே ஒரு காட்சியில் தோன்றி அசத்துகிறார்கள். ஃப்ரேமில் சில நொடிகள் தோன்றும் துணை பாத்திரங்களை என்ன செய்ய வைப்பது என்று தெரியாமல் கோட்டை விட்டுள்ளனர். ஆனால் எதுவும் படத்தின் மீதான கவனத்திலிருந்து விலக்கும் அளவு இல்லை. படத்தின் பலம்

# நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம்



மற்றும் மாறுபட்ட கோணத்தில் காதலை சொல்தல் என்று எதுவுமில்லாத ஒரு படம். அதுவும் தமிழ்ப்படம்.

அடுத்த நாள் தனக்கு திருமணம் என்பதை மறந்து விடுகிறான் ப்ரேம். ஏன் மறந்தான்.. திருமணம் நடந்ததா.. என்பதற்கு எல்லாம் பதில் திரையில்.

தற்காலிகமாக நினைவிழக்கும் ப்ரேமாக விஜய் சேதுபதி நடித்துள்ளார். செப்டம்பரில் சுந்தர பாண்டியன், அக்டோபரில் பீட்சா, நவம்பரில் நடுவில் கொஞ்சம் பக்கத்த காணோம் என இந்த வருடத்தின் முடிவு அவருக்கு நிறைவாய் அமைந்துள்ளது. இரண்டு தேசிய விருதுகள் பெற்ற "தென்மேற்கு பருவக் காற்று" என்னும் படத்தில் நாயகனாக நடித்துள்ளார் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். மிக சிலருக்கு தான் இப்படிப் படங்கள் சொல்லிக் கொள்ளும்படி அமையும். அந்த மிக சிலரில் இவரும் ஒருவர். ராசியான நடிகர் என முத்திரை குத்தப்பட்டு, கன்னாபின்னா படங்களில் நடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படாமல் இருக்கணுமே என்ற கவலை எழுகிறது.

நண்பர்கள் நால்வரின் குணாதிசயங்களையும், தலைப்பைத் தொடர்ந்து பெயர் போடும் பொழுதே மிக சுவாரசியமாக காட்சிப்படுத்தி உள்ளனர். பிரதான பாத்திரங்களான இவர்களை தவிர்த்து, மற்ற பாத்திரங்கள் அனைவரும் எந்தவித பாதிப்பும் ஏற்படுத்தாமல் ஏனோ தானோ என வந்து செல்கின்றனர். உதாரணத்திற்கு மருத்துவமனையில் பணி புரியும் நர்ஸ், மணமக்களின் பெற்றோர். அப்படியும் சலூன் கடையில் பணி புரிபவரும், நாயகனின் அத்தை மகன் சதீஷாக வருபவரும் ஒரே ஒரு காட்சியில் தோன்றி அசத்துகிறார்கள்.

ஜாலியான வசனங்கள். விஜய் சேதுபதி அடுத்து என்ன வசனம் பேசப் போகிறார் என படம் பார்ப்பவர் அனைவருக்கும் அத்துபடியாக தெரிகிறது. ஆனால் பார்வையாளர்கள் படத்துடன் ஒன்றி விடுவதால் அவர்களும் சேர்ந்து சொல்லத் தொடங்குகின்றனர். ஒரே வசனங்கள் மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டாலும், நண்பர்கள் மூவரின் முக மாறுதல்களைக் கொண்டு இயக்குனர் அழகாக சமாளித்து பார்வையாளர்களுக்கு சலிப்பு ஏற்படுத்தாமல் பார்த்துக் கொள்கிறார் இயக்குநர் பாலாஜி. உண்மைச் சம்பவத்தின் அடிப்படையாக கொண்டது என டிஸ்கியை தொடக்கத்தில் பேடாமல், ஜாலியாக படம் முடிந்ததும் புகைப்படங்கள் மூலம் சொல்கின்றனர். அந்த உண்மை சம்பவத்து நிஜ ப்ரேம் தான் இந்தப் படத்தின் ஒளிப்பதிவாளர் என்பது படத்தின் கூடுதல் சிறப்பு. "மதுபான கடை" பட இசையமைப்பாளரான வேத்ஷங்கர்தான் இப்படத்திற்கு ஒலிப்பதிவு. படத்துடன் முழுவதும் ஒன்ற முடிவதற்கு இவரது இசை மிக முக்கிய காரணி.

2007இல், "சென்னை 600028" வெளிவந்த பொழுது ஏற்படுத்திய வியப்பையும், ஆச்சரியத்தையும் ரசிகர்களுக்கு இப்படமும் அளிக்கும். இந்தப் படமும் கிரிக்கெட் விளையாட்டு ஒன்றினில் இருந்தே தொடங்குகிறது. ஆனால் சென்னை 600028 தொட்டு செல்லும் காதல், பாடல்கள் என்ற பாரம் பரிய திரைப்பட சங்கதிகளையும் துறந்து... "நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம்" தமிழ்த் திரைப்படங்களில் இருந்து முற்றிலும் தனித்து நிற்கிறது.

...கொண்டாட்டம், எலுமிச்சம்பழத்துக்கு
...ன்பது காவடிச் சிந்து .பாடல்.

... மருத்துவத் தன்மைகள், இரத்தக்
... நேரிடும் இரத்த உறைவு காரண-
...ாரடைப்பை தடுப்பதாகக்
...ள்ளனர்.

...ான பண்டங்களை எளிதில் சமிக்கச்

...புவை கண்டிக்கும், வாயில்
... பெருக்கிப் பசியைத் தூண்டும்.

...ள வெங்காயம் இரண்டின்
... அளவாக கலந்து குடித்தால்
...தமயக்கம் நீங்கும். வெள்ளை
...ம் பழரசம் சேர்த்து கொடுத்து வர

... துண்டுகளாக நறுக்கி 100 கிராம்
...0 கிராம் விட்டு 4 நாட்கள் கழித்து
...ான தொடர்ந்து 48 நாட்கள் சாப்பிட

**...றிவோம்' எனும் நூலிலிருந்து...)**




பொழுது விடியும் நேரம். தங்களுக்காக இரை தேடச் சென்ற தாய்ப் புலியை எதிர் பார்த்து இரு குட்டிப் புலிகள் குகையின் வாசலில் வழி மேல் விழி வைத்துப் பார்த்துக் கொண்டே நின்றிருந்தன. இரண்டுக்கும் பயங்கரப் பசி. வெளியே சென்று தாங்களே ஏதாவது இரை தேடலாம் என்றால் அம்மாப் புலி, தான் திரும்பி வரும் வரை அங்கே இங்கே குகையை விட்டு அசையக்கூடாது என்று படு கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறது!

இன்னும் சிறிது நேரம் சென்றது. சற்றுத் தொலைவில் உறுமலுடன் தாய்ப்புலி வந்து கொண்டிருக்கிறது. அதன் வாயைப் பார்த்த குட்டிப் புலிக்கு பெரும் ஏமாற்றம். ஆமாம். தாய்ப் புலியின் வாயில் இரை ஒன்றும் தென்படவில்லை. குட்டிப் புலிகள் தாவி அம்மாவிடம் வந்தன.

"ஏன் அம்மா...இரை ஒன்றும் அகப்படவில்லையா?"

"கிடைத்தது. ஆனால் அதற்குள் இன்னொரு புலி வந்து..."

"என்ன கிடைத்தது?"

"கொழுத்த காட்டுப் பன்றி. மரத்தடியில் பழங்களைப் பொறுக்கித் தின்று கொண்டிருந்தது. நான் அதன் மேல் பாயத் தயாரானபோது இன்னொரு புலி சடாலென்று குறுக்கே புகுந்து தாவி அதைக் கவ்விக்கொண்டு போய்விட்டது"

"அதை நீ சும்மாவா விட்டாய்?"

"நீ ஏன் அதை அடித்துக் கொன்றிருக்கக்கூடாது?" குட்டிகள் மாற்றி மாற்றிக் கேட்டன.

"சீ...சீ நாம் கூட மனிதர்களா என்ன? தன் இனத்தைத் தானே அடித்துக் கொல்ல? நாம் மிருகங்கள். அப்படியிருக்கும்போது நமக்கு நாமே எதிரிகளாக முடியுமா? அந்தப் பன்றி போனால் இன்னொரு பன்றி" என்று சொல்லிக் கொண்டே தாய்ப்புலி மீண்டும் இரை தேடச் சென்றது.

குட்டிப் புலிகள் இரண்டும் தங்கள் பசியை மறந்து, "ஹைய்யா! நாம் மிருங்கங்கள். மனிதர்களைவிட உயர்ந்த மிருகங்கள்" என கும்மாளம் கொட்டின!

(விந்தன் எழுதிய "குட்டிக்கதைகள்" என்ற நூலில் "இனப்பற்று" என்ற தலைப்பில் வந்த கதை)

# பாடசாலைகளின் செயற்பாடுகளை கண்டறிவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டிலுள்ள 10,000 பாடசாலைகளின் செயற்பாடுகளை மாதந்தோறும் கண்டறிவதற்கான புதிய வேலைத்திட்டம் ஜனவரி முதல் ஆரம்பமாகவுள்ளதாகவும், கல்வி அமைச்சு இதுபற்றித் தீர்மானித்துள்ளதுடன், பாட சாலைகளின் சீரான நிர்வாகம், சிறந்த கல்விப் போதனை போன்றவையே இத்திட்டத்தின் முக்கிய இலக்கு எனவும் அமைச்சின் செயலாளர் கோத்தாபய ஜனரத்ன தெரிவித்தார்.

பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகள், மனித வ்ள அபிவிருத்தி போன்றவற்றுக்குப் பெருந்தொகை நிதி வருடாந்தம் செலவாகிறது. இச் செலவீனங்களால் இலவசக் கல்வி அர்த்தமயமாக வேண்டும்.

எனவே கல்வி நடவடிக்கைகள் கண்ட றியப்பட வேண்டும். மாதந்தோறும் அமைச்சு மீளாய்வுகளை செய்து முக்கியம் என்றும் செயலர் தொடர்ந்து தெரிவித்தார்.

பாடசாலை அபிவிருத்தியுடன் 41 இலட்சம் மாணவர்களின் கல்வி நிலையும் உயர வேண்டும்.


கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தகவல் தொழில நுட்பம் போன்ற பாடங்களில் சித்தி பெறாதோரின் எண்ணிக்கை குறைய வேண்டும்.

பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களின் யோசனைகள் கருத்துக்களைப் பெற்று வேலைததிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது முக்கியமானது.

இந்த வேலைத் திட்டம் இலக்கு கொள்ளப்பட்டவாறு மேற்கொள்ளப்படுகிறதா? என்பதை அமைச்சு மட்டத்தில் மேற்பார்வை செய்வது இதுவே முதல் முறையாகும் என்றும் செயலர் கூறினார்.

பாடசாலைகளின் மாதாந்த முன்னேற்றம் தொடர்பாக அமைச்சுக்கு அறிக்கை மூலம் அறிவிக்க வேண்டும்.

அந்த அறிக்கைகளைப் பரிசீலித்து குறைபாடுகள், பிரச்சினைகள் இருந்தால் அவற்றுக்கான தீர்வுகளை வழங்க அமைச்சு கடப்பாடுடன் செயற்படுமென்றும் அமைச்சின் செயலர் கோத்தாபய ஜயரத்ன தொடர்ந்து தெரிவித்தார்.



யாழ். - ஊர்காவற்துறை ஊறுண்டி கடற்பரப்பில் கடந்த வெள்ளிக்கிழமை இரட்சத மீன் ஒன்று கரையொதுங்கியுள்ளது. 30 அடி நீளமும் 10 அடி அகலமும் கொண்ட இந்த மீனை பெருமளவான மக்கள் படகுகளில் சென்று பார்வையிட்டுள்ளனர். கப்பல் ஒன்றுடன் மோதி இந்த மீன் உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. (02)

# சிறுவர்களுக்கு அறை வழங்கிய ஐந்து ஹோட்டல்கள் சிக்கின

(கொழும்பு)

வயது குறைந்த சிறுவர்களுக்கு அறைகள் வழங்கிய பல பிரதேசங்களைச் சேர்ந்த ஐந்து ஹோட்டல்கள் சுற்றிவளைக்கப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கடந்த மாதம் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வயது குறைந்த சிறுவர்களிற்கு அறைகளை வாடகைக்கு வழங்க வேண்டாம் எனவும் அவ்வாறு வழங்கப்படுமாயின் அதற்கான முழுப் பொறுப்பும் ஹோட்டல் உரிமையாளர்களே எனவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை முன்னதாக அறிவித்திருந்தது. வயது குறைந்த சிறுவர்களுக்கு அறைகளை வழங்கும் ஹோட்டல்களைச் சுற்றி வளைக்கும் நடவடிக்கைகள் நாடு முழுவதிலும் நடைபெற்று வருகின்றன.

தற்போது வயது குறைந்தவர்களிற்கு அறைகளை வழங்குவது பெருமளவிற்கு குறைவடைந்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எப்படியிருப்பினும் இச்சுற்றி வளைப்பு நடவடிக்கை தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கல்வித்துறையில் பாரிய நெருக்கடி

(கொழும்பு)

இலங்கையின் கல்வித்துறையில் பாரிய நெருக்கடி நிலைமை தோன்றியுள்ளதாக பிரதி நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள 9 ஆயிரத்து 200 பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு தமது எதிர்காலத்திற்கான எந்தவொரு அனுகூலமும் கிடைப்பதில்லை என்று அவர் குற்றம்சுமத்தியுள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்தக் கீருத்தை வெளியிட்டார். அத்துடன். சில பாடசாலைகள் பின்தங்கிய நிலையில் இருப்பதுடன், மேலும் சிலவற்றில் நிர்வாகிகஷ் மாணவர்களின் கல்வி நிலை குறித்து அசமந்தப் போக்குடன் செயற்படுவதாக பிரதி நிதியமைச்சர் தெரிவித்தார்.

# நுளம்பு ஒழிப்பு இயந்திரம் கொள்வனவு குறித்து விசாரணை

(கொழும்பு)

நுளம்பு ஒழிப்பு இயந்திரம் அதிக விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டமை குறித்து விசாரணைகளை மேற்கொள்ள சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.

சுகாதார அமைச்சின் மூன்று பிரதிப் பணிப்பாளர்கள் இந்தக் குழுவை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

நுளம்பு ஒழிப்பு இயந்திரம் கொள்வனவு செய்வதற்கான விலைமனுக் கோரலை உடனடியாக இரத்துச் செய்யுமாறு சுகாதார அமைச்சர் மைதிரிபால சிறிசேன கடந்த சில தினங்களுக்கு முன்னர் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

நுளம்புகளை ஒழிப்பதற்கான புகை விசுறும் நூறு இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

87 ஆயிரத்து 946 ரூபாவிற்கு ஒரு இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கான வாய்ப்புகள் காணப்பட்ட போதிலும், ஒரு இயந்திரத்தை ஒரு இலட்சத்து 48 ஆயிரம் ரூபாவிற்கு கொள்வனவு செய்ய தயாராகியிருந்ததாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# பாலியல் துன்புறுத்தல்கள்; வாராந்தம் 10முறைப்பாடுகள்

(கொழும்பு)


சுகாதார அமைச்சுக்கு பாலியல் துன்புறுத்தல் சம்பவம் பற்றி மேலும் மூன்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் வாராந்தம் சராசரி 10 பாலியல் துன்புறுத்தல் சம்பவங்கள் பற்றி முறைப்பாடுகள் அமைச்சுக்கு கிடைப்பதாகவும் அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். சுகாதார நிறுவனங்களில் கடமையாற்றும் பெண் ஊழியர்கள் மீதே குறிப்பாக சிற்றூழியர் தரத்தினருக்கே இந்த அவலம் நேரிடுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். உயர் பதவி வகிக்கும் பெண்களும் இலக்காகி உள்ளன்ர் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சில் இணைக்கப்பட்டுள்ள தொழிற்சங்கத்தின் தலைவர் ஒருவர் மேற்படி மூன்று சம்பவங்களில் ஒன்றில் சம்பந்தப்பட்டுள்ளார். பாலியல் சலுகை வழங்கினால் இடமாற்றத்தை இரத்துச் செய்து தருவதாக ஒரு பெண் ஊழியரிடம் இத் தலைவர் உறுதியளித்துள்ளதாக அமைச்சுக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. ஏனைய இரண்டு பெண் ஊழியர்களையும் துன்புறுத்திய இரு சந்தேக நபர்களும் வைத்திய விநியோக பிரிவில் கடமையாற்றும் இரண்டு சிற்றூழியர்களாவர்.

மேற்படி இரண்டு பெண்களையும் வேறு பிரிவுகளுக்கு இடமாற்றம் செய்வதற்கும் மூன்று முறைப்பாடுகளையும் விசேட புலனாய்வு பிரிவினரிடம் கையளிப்பதற்கும் அமைச்சு முடிவு செய்துள்ளது. சந்தேக நபர்கள் மீதான புகார் நிரூபிக்கப்பட்டால் அவர்கள் சட்ட நடவடிக்கைக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

இதேவேளை பெண்கள் மற்றும் யுவதிகள் மீதான இத்தகைய பாலியல் துன்புறுத்தல் மற்றும் ஏனைய துஷ்பிரயோகம் சம்பந்தமாக அமைச்சிலும் அமைச்சின் நிறுவனங்களிலும் நடைபெறும் சம்பவங்களை முறையிடுவதற்கு சுகாதார அமைச்சு தொலைபேசி இலக்கம் ஒன்றை அறிமுகம் செய்துள்ளது. 0112 686393 என்னும் தொலைபேசி இலக்கத்துக்கு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை அத்தகைய முறைப்பாடுகளை தெரிவிப்பதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

# கடும்போக்கான கைதிகள் மட்டக்களப்பிற்கு மாற்றம்



(கொழும்பு)

கடும்போக்கான சிறைக்கைதிகளை பலத்த பாதுகாப்புடன் தங்கவைப்பதற்கு சிறந்த இடமொன்றை மட்டக்களப்பு - மாந்தைதீவில் ஏற்படுத்துவதற்கு சிறைச்சாலை அதிகாரிகள் தீர்மானித்துள்ளதாக சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவித்தன.

வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரத்தினை அடுத்தே இந்த முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. செப்பல் வார்ட் மற்றும் "எல்" மண்டபம் ஆகிய கூடங்களில் தங்கவைக்கப்பட்டிருந்த கடும்போக்கான சிறைக்கைதிகளே வெலிக்கடை சிறைச்சாலை கலவரத்தினை தலைமை தாங்கி நடத்தியுள்ளனர் என்பது ஆதாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

செப்பல் வார்டில் பலத்த மேற்பார்வையின் கீழ் கடும்போக்கான சிறைக்கைதிகள் தங்கவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக வைத்தியசாலையொன்று மாந்தைதீவில் அமையப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் இந்த வைத்தியசாலையினை அம்பாந்தோட்டையிலுள்ள சிறியளவான சிறைச்சாலைக்கு மாற்றுவது தொடர்பில் சுகாதார அமைச்சுடன் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு பேச்சு நடத்தி வருகின்றது.

# புகைத்தல் எச்சரிக்கைப் படங்கள் மருத்துவசங்கம் ஆதரவளிப்பு

(கொழும்பு)

சிகரெட் பைக்கெட்டுகளில் புகைத்தலின் ஆபத்தை உணர்த்தும் படங்களுடன் கூடிய எச்சரிக்கையை வெளியிடும் சுகாதார அமைச்சின் நடவடிக்கைக்கு அரச மருத்துவ சங்கம் ஆதரவு அளித்துள்ளது. நாள்தோறும் புதிதாக புகைபிடிப்போர் உருவாகி வருகின்றனர். தினசரி புகையிலை தொடர்பான நோய்களால் மக்கள் பலியானதாகவும் சங்கம் தெரிவித்துள்ளது. இலங்கையில் வருடாந்தம் புகையிலை காரணமாக 12,000 முதல் 20,000 பேர் வரை மரணிக்கின்றனர்.

புகையிலை தொடர்பான நோய்கள் காரணமாகவும் அநேகம் பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்றனர். இவை தடுக்கப் படக் கூடியதாகும். புகையிலைப் பாவனையைக் குறைக்க பல நாடுகள் பலதரப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. புகை சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள புகை உற்பத்திகளில் புகைத்தலின் ஆபத்தை விளக்கி படங்களுடன் கூடிய எச்சரிக்கை முறை முக்கிய நடவடிக்கையாகும். புகைத்தல் சார்ந்த விளம்பரங்களை நிறுத்துதல், இதனை ஊக்குவிக்காமை, புகையிலை வரிகளை அதிகரித்தல், பொது இடங்களில் புகைத்தலை தடுத்தல் போன்றவை ஏனைய நடவடிக்கைகளாகும். இவ்வாறு சங்க அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சாளம்பைக்குளம் முஸ்லிம் வித்தியாலயத்தின் மாடிக்கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டிவைப்பு





(வவுனியா)

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட வவுனியா சாளம்பைக்குளம் கிராமத்தின் முஸ்லிம் வித்தியாலயத்திற்கான மூன்று மாடிகளைக்கொண்டகட்டடத்திற்கு கடந்த சனிக்கிழமை பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் திருமதி சீமா இலாகி பலோச் அடிக்கல்லினை நாட்டி வைத்தார்.

கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக புத்தளம் உட்பட பல இடங்களிலும் இடம்பெயர்ந்திருந்த சாளம்பைக்குளம் முஸ்லிம் மக்கள்,கடந்த வருடம் இக்கிராமத்தில் மீண்டும் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர். இந் நிலையில் கற்றல் செயற்பாட்டுக்கான பாடசாலை கட்டட வசதிகள் போதுமானதாக இல்லாமையினால் இவ் விடயம் வர்த்தக கைத்தொழில் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதையடுத்து பாகிஸ்தான் அரசாங்கத்தின் ஊடாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் மூன்று மாடி கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

இதன்போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, வர்த்த கைத்தொழில் அமைச்சர் றிசாட் பதியுதீன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உனைஸ் பாரூக், வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி உட்பட அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# வெள்ளவாய்க்கால் புனரமைப்பு சாவகச்சேரி மக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசத்தில் வெள்ள வாய்க்கால் புனரமைப்புக்கு தடைஏற்படுத்தப்படுவதால் மழை காலங்களில் குளத்தை அண்டிய பகுதியிலுள்ள குடியிருப்புக்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்திலுள்ளகண்டுவில் குளத்தில் மழைகாலத்தில் சேரும் மேலதிக நீர் அருகிலுள்ள ஆலய வீதியினூடாக கற்குழிக்குளத்துக்குச் சென்று அங்கிருந்து தொடர்வாய்க்கால் மூலமாக வேம்பிராய், மாத்தளாய் வெளிக்கு செல்கின்றது.

இந்நிலையில் மேற்படி தொடர் வாய்க்கால்கள் பல வருடங்களாக புனரமைக்கப்படாமல் இருப்பதால், வெள்ளம் வழிந்தோட முடியாது அருகிலுள்ள குடியிருப்புகளுக்குள் நீண்ட நாட்களாக தேங்கி நிற்கின்றது இதனால் டெங்கு மற்றும் தொற்றுநோய்களுக்கு ஆளாக நேரிடுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இத் தொடர்வாய்க்கால் சாவகச்சேரி நகர சபையினால் வேள்ட்விசன் நிறுவனத்தின் நிதியுதவியுடன் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. எனினும் இப்புனரமைப்புக்கு சிலர் இடையூறுகளை ஏற்படுத்திவந்ததால் தற்போது புனரமைப்பு பணிகள் நடைபெறாது உள்ளன.

மழைகாலம் ஆரம்பமாகியுள்ள நிலையில் இக்குடியிருப்பு மக்கள் வெள்ளப் பாதிப்பை எதிர்கொள்வதைத் தவிர்க்கும் வகையில் இவ் வாய்க்காலை புனரமைக்க உரியவர்கள் உதவுமாறு இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(11)

# வவுனியா மாவட்ட இலக்கிய விழா இன்று கோலாகல ஆரம்பம்


(வவுனியா)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட செயலகம் மாவட்ட கலாசார பேரவையுடன் இணைந்து நடத்தும் வவுனியா மாவட்ட கலை இலக்கிய பெருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் இரு அமர்வுகளாக வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில், ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

கவிஞர் கயல்வண்ணன் அரங்கில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் காலை அமர்வு, கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் இடம்பெறவுள்ளதுடன், இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி க.பேர்ணாட் கலந்து கொள்ளவுள்ளார்.

சித்தாந்த வித்தகர் கவிஞர் கதிர்சரவணபவன் அரங்கில் பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாவது அமர்வு வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பந்துல ஹரிச்சந்திர தலைமையில் நடைபெறவுள்ளதுடன், இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கைத்தொழில் வாணிபத்துறை அமைச்சர் றிசாட் பதியுதீன் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் கலை நிகழ்வுகளான நடனம், நாட்டியம், நாடகம், சொற்பொழிவு, கவியரங்கம் பட்டிமன்றம் போன்றன இடம்பெறவுள்ளன.



கோண்டாவில் சி.சி. த.க. பாடசாலையில் இடைநிலை பாடசாலைகளின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதியின் கீழ். புதிதாக கட்டப்பட்ட மலசல கூடத்தை ஈ.பி.டி.பி. நல்லூர் பிரதேச அமைப்பாளரும் நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான அ.ரவீந்திரதாஸன் மற்றும் நல்லூர் கோட்டக்கல்விப்பணிப்பாளர் மாணிக்கராஜா ஆகியோர் நாடா வெட்டி திறந்து வைப்பதைக் காணலாம்.

# பதிவிறக்கப் பெட்டகம்

உன் நகத்தைக் கண்டு
அயோக்கியர்கள்
அச்சத்தால்
நடுங்குகின்றனர்.
நல்லவர்கள்
பெருமிதமான உன்
அழகைக் கண்டு
வாயடைத்து நிற்கின்றனர்
என் கவிதையைப் பற்றியும்
இப்படிப் பிறர் பேசவேண்டும்
– ப்ரெக்ட்

கவிதை
ஒரு மலர் போன்றதும்
வாள் போன்றதுமாகி
புதிர் நிறைந்தது.
– தேவதேவன்

என் அப்பாவின் உடலில்
உயிர்த்திருந்த காற்றில்
ஒரு கவிதை இருந்தது.
என் நிழலை நான்
துரத்திப் போகிறேன்!
என் நிழல் பூமியை
துரத்திப் போகிறது!
காக்கையின்
கரைதல் சப்தத்தில்
என் உறக்கம் மரிக்கிறது.
தினமும் செடிகளில்
துளிர்க்கும் சிரிப்பில் என்
கனவுகளை துறக்கிறேன்!
என்றாவது ஒருநாள்
கவிதை எழுதிவிட முடியும்
என நம்புகிறேன்.
– ஹரணி

முதற்பக்கம் வரவேண்டும்
என் கவிதை
முக்கியமாய் படம் வேண்டும்
அருகே
ஏதேனும் வண்ணத்தில்
என் பெயரைப் போட்டிருந்தால
மகிழ்வேன்
வெளியான மறுநாளே
வேறாரோ சிலர் பெயரில்
பாராட்டுக் கடிதங்கள்
வரைவேன்
விளம்பரந்தானே
வெற்றி பெறல் கூடும்.
கருத்தை, கவிநயத்தை
கற்பனையைப் பாராட்டி
மதிக்கத் தெரியாத
மண்ணில்.
– அமிழ்தன்

பொருளின் பொலிவும்
சொல்லின் திறமும்
தொடையும் தொடைக்கண்
விகற்பமும் துதைந்தாங்கு
உருவகம் முதலாம்
அலங்காரங்களை
உட்கொண்டோசை
பொலிவுடைத்தாகி
உய்த்துணர்வோர்தம்
உள்ளங்கட்கு
மால்கடலமுதம்போல்
பாடுவது மதுரகவி
– பிங்கலந்தை

விரகர் இருவர் புகழ்ந்திட வேண்டும்
விரல் நிறைய மோதிரங்கள் வேண்டும்
– அரையினிலே
பஞ்சேனும் பட்டேனும் வேண்டும்
அவர் கவிதை
நஞ்சேனும் வேம்பேனும் நன்று.
– ஔவையார்

இந்தக் கவிதை
எப்படி முடியும்
எங்கு முடியும்
என்று தெரியாது
திட்டமிட்டு முடியாது
என்றெனக்குத் தெரியும்
இது முடியும் போது
இருக்கும் [இருந்தால்] நான்
ஆரம்பத்தில் இருந்தவன் தானா
– ஆத்மாநாம்

கவிதையே
என்னை மன்னித்துவிடு
நீ சொற்களால் மட்டும்
ஆனது அல்ல
என்பதை
நீ புரிந்துகொள்ள
நான் உதவியதற்காக.
– ரோக் டால்ட்டன்

சலித்துப் பொறுக்கிய
வார்த்தைகளால்
கோக்கப்பட்ட வாக்கியம்போல்
உறுதியான மெல்லிய
சுள்ளிகள் கொண்டு
வளைத்தும் நெளித்தும்
எழுத ஆரம்பித்தது
சிறு பறவையொன்று
அரவம் ஊர்ந்து வந்தால்கூட
வழுக்கி விழும்படி
கிளையின் நுனியில்
அது எழுதி முடித்த கூடு
மிக மிக
அழகாக இருந்தது
இந்தக் கவிதையைவிட
– ஆர்.சி.மதிராஜ்

கணக்குப் போட்டுப்
பிழைத்து வரும் சமூகம்
கவிதை செய்வதைத்
தொழிலென்று
ஒத்துக்கொள்வதாக இல்லை.
– விக்ரமாதித்யன்

பண் என்பார் பாவம் என்பார்
பண்பு மரபென்றிடுவார்
கண்ணைச் சொருகிக்
கவி என்பார் – அண்ணாந்து
கொட்டாவி விட்டதெல்லாம்
கூறுதமிழ்ப் பாட்டாச்சே
முட்டாளே இன்னமுமா பாட்டு!
– புதுமைப்பித்தன்

மின்னல் இடைகளினை
விண்மீனைக்–கன்னியரின்
பார்வைச் சிறக்கணிப்பைப்
பால்வெண் மணிக்கதிரை
கார் வந்துலவும் ககனத்தை
– சீர்ததும்பும்
சொல்லில் வடித்துச்
சுவைமிக்க பாட்டென்று
வல்லமைகள் பேசிடவும்
வாய்ப்பொன்றும்–இல்லாது
போச்சே! இவையெல்லாம்
எத்தனை பேர் போட்டடித்துக்
காய்ச்சி வறுத்த
கவிப் பொருட்கள்!
– இ.முருகையன்

இன்னவைதாம் கவி எழுத ஏற்ற பொருள் என்று பிறர் சொன்னவற்றை நீர் திருப்பிச் சொல்லாதீர்; சோலை, கடல் மின்னல், முகில், தென்றலினை மறவுங்கள்! மீந்திருக்கும் இன்னல், உழைப்பு, ஏழ்மை, உயர்வு என்பவற்றைப் பாடுங்கள்.
– மஹாகவி

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper

ஆசிரியர் : K.மலர்விழி
உதவிக்கல்விப் பணிப்பாளர் சங்கீதம்
(தீவக வலயம்)

## கர்நாடக சங்கீதம்

**பயிற்சிப் பரீட்சை வினாக்களின் விடைகள் தொடர்ச்சி...**

5)

3) தியாகராஜர்

நாரதர் துறவி வேடத்தில் தியாகராஜர் வீட்டிற்கு வந்து அவர் இசையைக் கேட்டு பின் "ஸ்வரார்ணவம்" "நாரதீயம்" மற்றும் பல கிரந்தங்களை இவரிடம் வைத்து விட்டு மதிய உணவிற்கு திரும்பி வருவதாகக் கூறிச் சென்று விட்டார். இவர் வராது போகவே தியாகராஜர் ஏமாற்றமடைந்தார். அன்று அவர் கனவில் நாரதர் தோன்றிட தானே காலையில் வந்த துறவி என்று கூறி, கிரந்தங்களை பரிசாக ஏற்குமாறும் கூறினார். தியாகராஜர் கிரந்தங்களினால் பயனுற்று விஜய ஸ்ரீ ராகத்தில் "வரநாரத" என்ற க்ருதி, தர்பார் இராகத்தில் நாரத குருஸ்வாமி க்ருதி, கானடா இராகத்தில் 'ஸ்ரீ நாரத நாத ஸரஸீநஹ' என்ற க்ருதி, அடானா இராகத்தில் 'நாரத கான போல' என்ற க்ருதி முதலியவற்றை செய்து தன் நன்றியைத் தெரிவித்தார்.

ஒரு முறை தஞ்சை மஹாராஜா தன் மீது பாடல் இயற்றுமாறும் அதற்கு நிறைய தங்கத்தைத் தருவதாகவும் தியாகராஜரிடம் வேண்டுகோள் விடுத்தார். தியாகராஜர் இதை மறுத்து 'நரஸ்துதி செய்யேன்' என்று கூறி கல்யாணி இராகத்தில் 'நிதி சால ஸுகடள' என்னும் க்ருதி இயற்றினார். இவருடைய சகோதரர்கள் மகாராஜாவின் வேண்டுகோளை தியாகராஜர் ஏற்காததால் கோபமடைந்து தியாகராஜருடைய ஸ்ரீ ராம விக்ரஹத்தை காவிரி ஆற்றில் எறிந்து விட்டார்கள். தியாகராஜர் வருத்தமுற்று 'எந்துதாகி நாடோ' என்று தோடி இராகத்திலும் 'நேறெந்து வெதகுதுரா' என்று கர்நாடக பெஹாக் இராகத்திலும் 'ஏபாபமு ஜெஸிதினோ' என்று அடானா இராகத்திலும் பாடினார். கொண்டு பிலஹரி இராகத்தில் 'கனு கொண்டினி' எனும் க்ருதியையும், ஆஹிரி இராகத்தில் 'சல்லரே' எனும் க்ருதியையம் இயற்றிப் பாடினார்.

இவருக்கு ஸீதாலட்சுமி எனும் மகள் பிறந்தார். இவர் ஒரு முறை திருப்பதிக்கு தரிசனம் செய்ய சென்றபோது திரை மூடியிருந்ததால் 'தெர தியகராதா' எனும் கௌிபந்து இராகக் க்ருதியை இசைக்க திரை விலகியது. பின் 'வேங்கடய நின்னு' என்னும் மத்யமாவதி இராக பாடலை இயற்றி இசைத்தார். ஸ்ரீரங்கத்திற்கு விஜயம் செய்து 'ஓரங்கஸாயி' - 'ராஜீவெடல' ஜீதாமுராரே' எனும் க்ருதிகளை ஸ்ரீரங்கநாதர் மேல் இயற்றினார்.

வாலாஜாபேட்டை, புத்தூர், சோளிங்கர், லால்குடி சென்னை முதலிய ஊர்களுக்குச் சென்று சென்னையில் பந்தர் தெருவில் உள்ள கோவூர் சுந்தரேச முதலியாரின் விருந்தினராகத் தங்கி கௌரவிக்கப்பட்டு அங்கு தேவகாந்தாரி இராகத்தை 8 நாட்கள் இசைத்தார். பின் திருவல்லிக்கேணி பார்த்தஸாரதி கோவிலுக்குச் சென்று காபி இராகத்தில் 'சாரி வெடலின பார்த ஸாரதிட' எனும் க்ருதியை இசைத்தார். பின் தன் சீடரான வீணை குப்பய்யரின் வேணடுகோளுக்கிணங்க திருவொற்றியூர் சென்று அங்கு தங்கி 'திருவொற்றியூர் பஞ்சரத்னம்' என்னும் கிருதிகள் இயற்றினார். பின்னர் கோவூர் சென்று அங்குள்ள ஸுந்தரேஸ்வரர் மீது பஞ்சரத்ன க்ருதிகள் இயற்றினார். கோவூர் பஞ்சரத்ன க்ருதிகள் என அழைக்கப்படும்.

மற்றும் லால்குடி பஞ்சரத்னம், ஸ்ரீரங்க பஞ்சரத்னம் ஆகிய சேஷத்ர கிருதிகளையும் இயற்றினார். உயர்ந்த தாது செறிவும், ஸாகித்ய பாவமும் உள்ள கனராக பஞ்சரத்னம் என்னும் தொகுதி க்ருதியை இயற்றினார். தியாகராஜர் கோவிந்தாச்சார்யரின் 72 மேளகர்த்தா பத்ததியை பின்பற்றி சுமார் 25, 000 உருப்படிகளை இயற்றினார். பல புதிய இராகங்களை ஏற்படுத்தி பல அபூர்வ இராகங்களிலும் க்ருதிகளை இயற்றினார். இவருடைய அங்கித முத்திரை "தியாகராஜ, தியாகராஜனுத, தியாகராஜவினுத" என்பதாகும்.

மேலும் ப்ரகலாத பக்தி விஜயம், ஸீதாராம் விஜயம், நௌகா சரித்திரம் முதலிய இசைநாடகங்களையும், உத்ஸவ சம்பிரதாய கீர்த்தனைகள், திவ்யநாம கீர்த்தனைகள் முதலியவற்றையம் இயற்றியுள்ளார். மேலும் ஸதராகரத்ன மாலிகா என்ற 100 இராகங்களில் அமைந்த 100 பாடல்களின் தொகுப்பை இயற்றியுள்ளார். இவருடைய இசை நாடகங்கள் கீர்த்தனைகள், க்ருதிகள், தருக்கள், கத்யங்கள், பத்யங்கள், உத்பலமாவாக்கள், த்விபதிகள் போன்ற இசை வகைகளையும் தர்ணிகைகள் என்ற இலக்கிய உருவகைகளையும் கொண்டவை ஆகும்.

இவருடைய கிருதிகள் ஸங்கீத பாவம், பக்தி பாவம் நிரம்பியவை. இவருடை க்ருதிகளை திராட்சை ரஸத்திற்கு ஒப்பிடுவர். பின்னர் மனைவி இறந்ததும் சன்யாஸ வாழ்க்கை வாழ்ந்து ஸ்ரீராமரிடம் தன்னை அவருடைய பாதார விந்தங்களில் சேர்த்துக் கொள்ளுமாறு முறையிட்டார். ஒருநாள் ஸ்ரீராமர் கனவில் தோன்றி "இன்னும் பத்து மாதத்தில் என்னை வந்தடைவாய். உனக்கு மறுஜென்மம் உள்ளது" எனக் கூற தியாகராஜர் தனக்கு மறு ஜென்மம் வேண்டாம் என்னை தங்கள் பாதாரவிந்தங்களில் சேர்த்துக் கொள்ளுங்கள் என முறையிட்டு 'ஷீணமை திருக' என்ற முகாரி இராகப்பாடலையும் 'மோஷமு கலதா' என்ற சாரமதி இராகப் பாடலையும் ஸ்ரீராமரைப் பிரார்த்தித்து இசைத்தார்.

பின்னர் 10 மாதத்தால் இறைவனடி சேர்ந்தார். இவருடைய விருப்பப்படி காவேரி நதிக்கரையில் குருஸொண்டி வேங்கடரமணய்யா ஸமாதி அருகே பாவா ஸ்வாமி படித்துறையில் அடக்கம் செய்யப்பட்டது. இதன்பின் 1925 ஆம் ஆண்டு தியாகராஜருக்கு ஒரு கோயில் கட்டப்பட்டது. வருடாவருடம் அங்கு புஷ்யபகுள பஞ்சமியின்போது தியாகராஜ ஆராதனை நடந்து வருகிறது.

இவருடைய சிஷ்யர்கள்...

- வீணை குப்பையய்யர்
- ஸீப்பராம பாகவதர்
- உமையாள்புரம் க்ருஷ்ணபாகவதர்
- தில்லை ஸ்தானம் ராமய்யரங்கர்

இவர் இயற்றிய உருப்படி ...

| | | |
|---|---|---|
| ஸங்கீத ஞானமு | - தன்யாஸீ | - ஆதி |
| நாதஜீதா | - ஆரபி | - ரூபகம் |
| எவரிமாட | - காம்போஜி | - ஆதி |

6) கீதம்

உருப்படிகளில் மிகவும் எளிதானது. அப்பியாச கானத்தைச் சேர்ந்த உருப்படியாகும். ஒரே காலத்தில் அமைந்திருக்கும். பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்க வித்தியாசம் காணப்படமாட்டாது. சங்கதிகள் கடினமான வக்ரப் பிரயோகங்கள் என்பன கீதத்தில் காணப்படமாட்டாது. கீதத்தின் சாகித்தியத்தின் இடையே வரும் அஇய திஇய வஇய என்னும் கீத அலங்காரச் சொற்கள் காணப் படும். இதனை மாத்ருக்கா பதங்கள் என்றும் அழைப்பர். இவ்வுருப்படியை ஆரம்பம் முதல் முடிவு வரை தொடர்ச்சியாகப் பாட வேண்டும். தமிழ், தெலுங்கு, கன்னடம், வடமொழி போன்ற மொழிகளில் இயற்றப்பட்டுள்ளன. இது இரண்டு வகைப்படும்.

1) சஞ்சாரி கீதம்
2) இலட்சண கீதம்

சஞ்சாரி கீதத்தின் சாகித்தியம் பகவத் தோத்திரமாகவும், இயற்கையை வர்ணிப்பதாகவும், வித்வான்களை ஆதரித்துப் பாடுவதாகவும் அமைந்திருக்கும். இலட்சண கீதத்தின் சாகித்தியமானது கீதம் என்ற இராகத்தில் அமைந்திருக் கிறதோ அந்த இராகத்தின் இலட்சணத்தைக் கூறுவதாக இருக்கும். இலட்சண கீதத்தின் வாயிலாக ஆதிகாலத்தில் வழக்கிலிருந்த இராகங்களின் இலட் சணத்தை அறிய முடியும். ஜனக இராகத்தில் அமைந்த இலட்சண கீதங்களை இராகாங்க இலட்சண கீதங்கள் என அழைப்பர்.

சஞ்சாரி கீதம் : உதாரணம் -கணநாதா, மாயாமாளவகௌளை
சிவபெருமானே மத்தியமாவதி

இலட்சண கீதம் : உதாரணம் - ரேவதி இராகம்

இயற்றியவர்கள் :

சஞ்சாரி கீதம் : புரந்தரதாசர்
பொன்னையாபிள்ளை

இலட்சண கீதம் : பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள்
வேங்கடமகி
கோவிந்த தீட்சிதர்

**ஜதீஸ்வரம்**

நாட்டியத்திற்காக அமைக்கப்பட்ட உருப்படியாகும். நாட்டியக் கச்சேரி யில் இரண்டாவது அங்கமாக விளங்குவது. ஜதிக் கோர்வைகள் நிறைந்து காணப்படும். தனி ஸ்வர ரூபமாகவே காணப்படும் உருப்படி. இதனால் ஸ்வர பல்லவி என்ற பெயரும் உண்டு. பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்க விததியாசங்கள் காணப்படும் உருப்படியாகும். இதில் ஒன்றுக்கு மேற்பட்ட சரணங் கள் காணப்படும். இராக மாலிகையாக அமைந்த ஜதீஸ்வரங்களும் உள்ளன. அமைப்பில் ஸ்வரஜதியைப் போன்று காணப்படும். இதற்கு சாகித்யம் காணப்படமாட்டாது.

| | | |
|---|---|---|
| இயற்றியவர்கள் | : ஸ்வாதித் திருநாள் மகாராஜா | |
| | தஞ்சை கே.பொன்னையாபிள்ளை | |
| உதாரணங்கள் | : ஸா, ரி கா பா | பிலகரி |
| | ஸா, நீ தா பா | கல்யாணி |
| | ஸா, ரீ ஸ தா | ஸாவேரி |

**ஸ்வரஜதி**

அப்பியாச கான உருப்படிகளில் இதுவும் ஒன்று. அமைப்பில் ஜதீஸ்வரத்தைப் போன்று காணப்படும் இது சாகித்தியமாக அமைந்திருக்கும். பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்க வித்தியாசங்கள் காணப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட சரங்கள் காணப்படும். சரங்கள் வித்தியாசமான தாதுக்களில் காணப்படும். தெலுங்கு. கன்னடம் போன்ற மொழிகளில் காணப்படுகிறது. தமிழ்மொழியில் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| இயற்றியவர்கள் | : சியாமா சாஸ்திரிகள் | |
| | தஞ்சை கே.பொன்னையாபிள்ளை | |
| | ஸ்வாதித் திருநாள் மகாராஜா சோபனாத்ரி | |
| உதாரணங்கள் | : ராவே மகுவ | ஆனந்த பைரவி |
| | சாம்பசிவாயனவே | கமாஸ் |
| | சம்போ மகாதேவா | கமாஸ் |

7 )

## இந்தியாவின் 17 ஆம் 18 ஆம் நூற்றாண்டின் கர்நாடக இசையின் கலாசார பின்னணி

17 ஆம் நூற்றாண்டின் பின்னணிக்கு முன்னர் 16 ஆம் நூற்றாண்டு இசை வளர்ச்சியை அறிவது அவசியம். 'சங்கீத பிதாமஹர்' என்று அழைக்கப்படும் புரந்தரதாஸர் 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். கர்நாடக இசை வளர்ச்சியில் முக்கிய இடம் வகிக்கும் புரந்தரதாஸர் இசைப் பயிற்சிக்குரிய ஸ்வராவளிகள், அலங்காரங்கள், கீதங்கள் முதலியவற்றை இயற்றினார். அப்பியாசகானத்துக்குரிய வழிமுறைகளையும் வகுத்து 'ஆதிகுரு' என்ற சிறப்புப் பட்டம் பெற்றார். 'புரந்தர விட்டல' என்பது அவரது முத்திரை. கன்னட மொழியில் நூற்றுக்கணக்கான கீர்த்தனைகளையும் இயற்றினார். மாயாமாளவகௌளை இராகத்திலேயே ஸ்வரவளி வரிசைகளைப் பாட வேண்டும் என்னும் முறையை கொண்டு வந்தார். இவரே லக்ஷிய சங்கீதப் பொலிவின் தன்மை முழுமையாக வளர்ச்சியுற அத்திவாரமாக அமைந்த காலம் 15, 16 ஆம் நூற்றாண்டுக் காலம் ஆகும்.

'ஸ்வரமேளகலாநிதி' என்னும் சமஸ்கிருத கிரந்தம். இக்கிரந்தம் அக்கால சங்கீத கலை சம்பந்தப்பட்ட ஐயப்பாடு நீக்கும் வகையில் அமைந்தது. 20 மேளங்களில் மிகச் சிறந்தது மாயமாளவகௌளை என்று இராமாமாத்யரும் குறியிடுகிறார். இது அப்பியாச வரிசைக்கு ஏற்புடையது எனலாம். கி.பி 1635 இல் சங்கீத நிகழ்ச்சியின் ஒரு நிறைவினை அரிப்பது வெங்கடமகியின் சதுர்தண்டி பிரகாசினக என்னும் கிரந்தம் தோன்றியது. இந்நூலில் வெங்கடமகியர்கள் 12 ஸ்வரஸ்தானங்களையும் 16 ஸ்வர பெயர்களையும் ஆதாரமாகக் கொண்டு 72 மேளகர்த்தாக்களை வகுக்கும் வழிகளை விபரித்துள்ளார். இது கர்நாடக இசை வளர்ச்சியின் பெரும் சாதனையாகும்.

17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஷேத்தரக்ஞர் நாயக, நாயகி பாவம் கொண்டு தெலுங்கு மொழியில் ஆயிரக்கணக்கான பதங்களை இயற்றியுள்ளார். முத்துத்தாண்டவரின் காலத்தில் தெய்வத்தின் புகழ்பாடு கீர்த்தனைகள் புதிய இசை வடிவத்தில் தமிழில் இயற்றப்பட்டன. இவை பேரின்பப் பதங்கள் எனப் போற்றப்படுகின்றன.

19 ஆம் நூற்றாண்டில் கோவிந்தாச்சாரியரால் இயற்றப்பட்ட சங்கரசூடாமணி எனும் சமஸ்கிருத நூலில் சம்பூர்ண, கிரம சம்பூர்ண ஆரோகண, அவரோகணத்துடன் கடபயாதி ஜங்க்னய அனுசரித்து பெயர்தரப்பட்டது. இவை நாம் தற்போது பாவிக்கும் கனகாங்கி ரதனாங்கி பெயர்த்தொகுதியாகும். இதன்மூலம் இராக அமைப்பையும் அறிந்துகொள்ளக் கூடியதாயிருக்கும். மும்மூர்த்திகள் பல அபூர்வ இராகங்களையும் தாளங்களையும் வழக்கத்திற்கு கொண்டு வந்துள்ளார்கள். இவர்கள் காலத்திலேயே கனம் கிருஷ்ணய்யரும் வைத்தீஸ்வரன் கோயில் சுப்பராம ஐயரும் தமிழில் பதங்களை இயற்றினார்கள்.

சங்கீத மும்மூர்த்திகளில் தியாகராஜர் தெலுங்கிலும், தீஷிதர் வடமொழியிலும், சியாமாசாஸ்திரிகள் தெலுங்கு, வடமொிழ, தமிழ் ஆகிய மொழிகளிலும் உருப்படிகளை இயற்றினார்கள். இராகங்களை எவ்வாறு சிறப்பாகக் கையாள முடியுமோ அந்தளவிற்கு கையாண்டார்கள்.

18 ஆம் நூற்றாண்டு கர்நாடக இசை வளர்ச்சியில் ஒரு திருப்பு முனையாகும். இந்நூற்றாண்டில் அருணாசலக் கவிராயரால் இயற்றப்பட்ட இராம நாடக கீர்த்தனத்தில் விருத்தம், கீர்த்தனைகள், தருக்கள் என்பன காணப்படுகின்றன. இதிலுள்ள கீர்த்தனைகள் பண்டைய தமிழ் பழமொழிகள் பலவற்றைக் கொண்டுள்ளன. ராமநாடகம் தவிர சீர்காழி ஸ்தலபுராணம், ஹனுமார் பிள்ளைத்தமிழ், சீர்காழிக்கோவை, அசோகமுகி நாடகம் முதலிய நாடகங்களையும் எழுதியுள்ளார்.

சிறந்த லஷய - லஷண வித்துவானாய் விளங்கிய பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள் ஆயிரக்கணக்கான கீதங்கள், பிரபந்தங்கள் இயற்றியுள்ளார். இதனால் இவர் வெயிகீத னபடால குருமூர்த்தி சாஸ்திரிகள் என்ற சிறப்புப் பெயரையும் பெற்றார்.

சாத்திரம் மூலம் கற்ற கமகங்களை நுட்பங்களைப் பாடிக்காட்டி சீர்படுத்தியவர் பச்சிரியம் ஆதியப்பர், தானவர்ண மார்க்க தீர்க்கதரிசி எனச் சிறப்பு பெற்ற இவர் இராகம், பல்லவி பாடும் முறையில் ஓர் ஒழுங்கனை உண்டாக்கினார். இக்காலத்தில் தானவர்ணம் என்ற அப்பியாசகான உருப்படி தோன்றியது. தசவிதகமகங்களை வெளிப்படுத்தும் விரிரூபிணி வர்ணத்தை இயற்றியவரும் இவரே. இவரும் 18 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கர்நாடக சங்கீதத்தின் பொற்காலம் போற்றப்படுகிறது. மும்மூர்த்திகள் தோன்றிய காலம் ஆகும். தியாகராஜ ஸ்வாமி, சியாமாசாஸ்திரி, முத்துஸ்வாமி தீஷிதர் ஆகிய மூவரும் தாமியற்றிய ஆயிரக்கணக்கான உருப்படிகள் மூலம் இராகங்கட்கு ஜீவனளித்து அவற்றின் ஸ்வரூபங்கள் அழிந்துபோகா வண்ணம் அவற்றை இசையுலகிற்கு அளித்துள்ளனர்.

குருகுலவாசமுறை இக் காலத்தில் வழக்கத்தில் வந்தது. சமுதாய கீர்த்தனை, கொத்துக் கீர்த்தனைகள் இயற்றப்பட்டன. க்ருதிகள் இயற்றப்பட்டன. சங்கதிகள் அமைக்கும் முறையை தியாகராஜர் தான் முதன் முதலில் நிர்ணயித்தார். இவரது உருப்படி திராட்சை ரசத்திற்கு ஒப்பிடப்படுகின்றன. பஞ்சரத்தினக் கீர்த்தனைகளை இசையுலகிற்கு அளித்தவர் இவரே.

தீஷிதருடைய க்ருதிகள் ராகபாவம் கொண்டவையாகவும், சௌக்ககாலத்தில் அமைந்தவையாகவும் காணப்படுகின்றது. மத்திம கால சாகித்தியங்களைத் தமது க்ருதிகளில் சேர்த்துள்ளார். நாளிகோ ரசத்துக்கு இவரது க்ருதி ஒப்பிடுவர்.

சியாமாசாஸ்திரிகளின் க்ருதிகள் கதலி ரசத்திற்கு ஒப்பானவை. இவரால் இயற்றப்பட்ட நவரத்தின மாலிகைகள் கிருதிகள் பிரசித்தமானவை. ஸரபந்தன தாளத்தில் பல்லவி பாடியவர் இவரே. இவரது படைப்புக்களில் ஸ்வராட்சர அணிகள் புகுத்தப்பட்டுள்ளன. விமோசன தாளத்தில் உருப்படி இயற்றிய பெருமைமிக்கவர்.

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்

## G.C.E. (O/L) Examination model Paper

**கணிதம்** | 32 | T | I | ஆசிரியர் : A. கிரிதரன்


1) 6178 + 19 கூட்டுக.

2) தீர்க்க $K = \frac{4}{3}$

3) எளிய பின்னமாகத் தருக $\frac{12}{18}$

4) தசமமாக தருக $\frac{12}{100}$


5)




ABC முக்கோணியாகும்.
x இன் பெறுமானம் காண்க.

6) 1. 2 m ஐ சென்ரிமீற்றரில் எழுதுக.

7)




ABCD ஒரு இணைகரமாகும்.
ABCD இன் பரப்பளவைக் காண்க.


8) காரணிப்படுத்துக 2a - 8

9) ஒருவருக்கு $\frac{1}{4}$ l படி 10 l ஐ எத்தனை பேருக்கு பகிரலாம்?

10) $A = \{0, 1, 4, 5, 6\}$,

$B = \{1, 2, 3, 6, 7\}$ எனின், $A \cap B$ எழுதுக.

11)




a இன் பெறுமானம் காணக.

12) பெறுமானம் காண்க $0.22 \times 1.5$

13) a ஐ எழுவாயாக மாற்றுக. $S = \frac{n}{2}(a + l)$

14) பெறுமானம் காண்க $\left(\frac{2}{3} - \frac{1}{5} \div 1\frac{2}{5}\right)$


15) சுருக்குக $\frac{3}{3x - 2} - \frac{1}{x}$

16) P , Q புள்ளிகளினது ஆள்கூறுகள் கீழே காட்டப்பட்டுள்ளது. நேர்கோடு PQ இன் படித்திறனைக் காண்க. P (3, 2) , Q (0, -1)

17) ரூ. 7200 நிமல், கமல், அனில் ஆகியோருக்கிடையில் 3 : 5 : 7 விகிதத்தில் பகிரப்படுகிறது. கமலுக்கு கிடைக்கும் பணம் எவ்வளவு?

18) அடைப்பு நீக்குக. $(a + b)^3$

19)




மையம் O ஆகும். $\hat{OAB} = 40^0$
$\hat{ACB}$ இன் பெறுமானம் காண்க.

20) எளிய வடிவில் தருக $\sqrt{50}$

21) $\text{Sin } A = \frac{3}{5}$ எனின், tan A இன் பெறுமானம் காண்க.


22) $x^2 + bx + 25$ என்பது நிறைவர்க்கமாகும். b இன் பெறுமானம் காண்க.

23) ரூ. 750 இன் $12\frac{1}{2}$ % எவ்வளவு?

24) $3^{x-1} = 27$ தீர்க்க

25) ரூ. 10 பங்கை ரூ. 12 படி வாங்குவதற்கு ரூ. 9000 முதலிட்ட ஒருவர்

26)





முக்கோணி ABC பரப்பளவு $6cm^2$ ஆகும்.
முக்கோணி ADC பரப்பளவைக் காண்க.
(BD = 2cm, DC = 4 cm ஆகும்)

27) a = 2, b = -4 எனின், $(5a - 3b^2)$ இன் பெறுமானம் காண்க.

28) -5 , 7 இற்கிடையில் கூட்டலிடை ஒன்றைக் காண்க.

29) $-2 < x \leq 3$ எனும் சமனிலியை எண்கோட்டின் மீது குறிக்க.




30) $101_{இரண்டு}$ எனும் இலக்கத்தின் இரு மடங்கைக் காண்க.

## பகுதி B

01) (a) கீழுள்ள வியாபார விளம்பரத்தினை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.

> **6% வருட வட்டிக்கு சாதாரண வங்கியில் கடன் பெற முடியும்.**

i. ரூ. 100 கடனாகப் பெறும் ஒருவர் வருட இறுதியில் செலுத்த வேண்டிய வட்டி எவ்வளவு?

ii. ரூ. 50 000 கடனாகப் பெறும் ஒருவர் வருட இறுதியில் செலுத்த வேண்டிய வட்டி எவ்வளவு?

iii) ரூ. 50 000 கடனாகப் பெறும் ஒருவர் 2 வருடங்களின் பின் கடனிலிருந்து விடுபட செலுத்த வேண்டிய முழுத்தொகை எவ்வளவு?

b) 5 மனிதர்கள் நாளொன்றிற்கு 6 மணித்தியாலயங்கள் படி குறிப்பிட்ட வேலை ஒன்றை 2 நாட்களில் செய்து முடிக்கின்றனர். அதே வேலையை 4 மனிதர்கள் 3 நாட்களில் செய்து முடிக்கின்றனர் எனின், அவர்கள் ஒரு நாளைக்கு வேலை செய்யும் மணித்தியாலங்களின் எண்ணிக்கையைக் காண்க.


02) a) P , Q தொடை பற்றிய தகவல் கீழே தரப்பட்டுள்ளது.

$Q \subset P$, $n(Q) = 12$, $n(P) = 20$, $n(\varepsilon) = 25$ கீழுள்ளவற்றைக் காண்க.

i) $n(P \cap Q)$ ii) $n(P^1)$

b) பக்கங்களில் 1, 2, 3, 4 என இலக்கம் குறிக்கப்பட்ட தாயக்கட்டை ஒன்று இருமுறை மேலே எறியப்படுகிறது. நிலத்தைத் தொடும் இலக்கத்தினைக் கருத்திற்கொண்டு மாதிரிவெளியை வரைவுபடுத்துக. (இதற்காக கீழுள்ள அச்சுக்களை பயன்படுத்துக)

i) இருமுறையும் நிலத்தை தொடும் இலக்கம் சமமாவதற்கான நிகழ்தகவினைக் காண்க.




03) குறிப்பிட்ட வகுப்பொன்றில் கணித பாட கணிப்பீட்டிற்கு மாணவர்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகள் பின்வருமாறு 22, 11, 19, 6, 17, 12, 21, 12, 14, 13, 9, 4, 7, 8, 14, 3, 6, 18, 16, 12.

i) இப்புள்ளிகளை 0 - 5, 5 - 10, ............. என அட்டவணைப்படுத்துக. கீழுள்ள அட்டவணையைப் பயன்படுத்துக.

| புள்ளி | வரவுக்குறி | மீடிறன் |
|---|---|---|
| | | |

ii) அட்டவணையிலுள்ள தகவல்களை வலையுரு வரையத்தில் காட்டுக. அதன் மூலம் மீடிறன் பல்கோணியை வரைக.



iii) 15 புள்ளிகளுக்கு மேல் உச்ச மட்டத்தை அண்மித்துள்ளார்கள் எனக் கொள்ளப்படும். அச்சதவீதத்தினைக் காண்க.


**04) a)** சுருக்குக. $\frac{1}{3} + \frac{1}{3} \times \frac{1}{3}$

b) வியாபாரி ஒருவருக்கு வருட இலாபத்தின் ஆரம்ப ரூ. 300 000 இற்கு வரி விலக்கப்படுகிறது. அடுத்த ரூ. 200 000 இற்கு 7.5% வருமான வரி செலுத்த வேண்டும். அதற்குப் பின் அதிகரிக்கும் இலாபத்திற்காக 15% வரி செலுத்த வேண்டும். வியாபாரியின் வருடாந்த இலாபம் ரூ. 750 000 ஆகும்.

i) 7.5 % படி செலுத்த வேண்டிய வருமான வரி எவ்வளவு?

ii) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி எவ்வளவு?

iii) வருமானம் செலுத்திய பணத்தை முழு இலாபத்தின் சதவீதமாகத் தருக.




இவ்வுருவில் காட்டப்பட்டிருப்பது சிறிய ஓடுபாதை ஆகும். மீதிப்பகுதியில் புல் வளர்க்கப்பட்டுள்ளது.

i) பெரிய அரைவட்டத்தின் ஆரை யாது?

ii) புல் வளர்க்கப்பட்டுள்ள பகுதியின் சுற்றளவைக் காண்க.

iii) ஓடு பாதையின் பரப்பளவைக் காண்க.

**கணிதம் பாட பயிற்சி வினாக்களுக்குரிய விடைகள் எதிர்வரும் (08.12.2012) சனிக்கிழமை வெளியாகும்.**

# தமிழர்களிடம் ஒற்றுமை இன்மையே ஈழத்தமிழகம் அமையாததற்கு காரணம்

## கூறுகிறார் கருணாநிதி



(சென்னை)

தமிழர்களிடையே ஒற்றுமை இல்லாத தால் ஈழத் தமிழகம் அமையவில்லை என தி.மு.க தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

திராவிடர் கழக தலைவர் கி.வீரமணியின் 80ஆவது பிறந்தநாள் விழாவில் பேசு கையில், இளமைக் காலத்தில் நானும், வீரமணியும் பெரியாரின் கொள்கைகளைப் பரப்ப தமிழகம் முழுவதும் பகல் இரவு பார்க்காமல் நடந்தே சுற்றுப்பயணம் மேற்கொண்டது இப்போது நினைவுக்கு வருகிறது. திராவிடக் கழகத்தில் சின்னஞ் சிறு பிள்ளையாக வீரமணி இணைந்த போது, ஒரு திரு ஞானசம்பந்தர் கிடைத்திருக்கிறார் என்று அண்ணா அறி வித்தார். பெரியாருக்கு பின்னர் அவரது சொத்துகளையும், கொள்கைகளையும் வீரமணி சிறப்பாக பாதுகாத்து வருகி றார். இந்தச் செயலை என்னால் கூட செய்ய முடியாது. அவரது வளர்ச்சியை நான் ஆச்சரியமாக பார்க்கிறேன்.

இலங்கை தமிழர் பிரச்சினைக்கு 1961ஆம் ஆண்டே ஐ.நா. சபைக்கு அண்ணா கடிதம் எழுதினார். இலங்கை யில் உள்ள 25 இலட்சம் தமிழர்களை அழிக்க நினைக்கும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த வேண்டும் என்று அதில் கூறியிருந்தார். இப்போது ஸ்டாலின், டி.ஆர்.பாலு மூலம் ஐ.நா. சபைக்கு கோரிக்கை கடிதம் அனுப்பியதை அமைச்சராக இருந்த ஒருவர் விமர்சனம் செய்துள்ளார். இது தான் விதண்டாவாதம். தமிழன் உருப்படாமல் போனதற்கு இது தான் காரணம்.

பிரபாகரன் ஆயுதம் ஏந்தி போராடிய போதே ஈழத்தமிழ கம் அமைந்திருக்க வேண்டும். ஆனால் தமிழர்களிடையே ஒற்றுமை இல்லாத காரணத்தால் தான் ஈழத்தமிழகம் கிடைக்கவில்லை. எனவே ஈழத்தமிழகம் கிடைக்க வேண்டும் என்பதற்காக நானும், வீரமணி, திருமாவ-ளவன் உள்ளிட்டோர் கொண்ட டெசோ அமைப்பு முயற்சித்து வருகிறது. அந்த முயற்சி வெற்றி பெற தமிழர்கள் அனைவரின் ஒத்துழைப்பும் தேவை என்று கருணாநிதி கூறினார்.

# பிரதமர் வேட்பாளர் தேர்வு நேரம் உள்ளதாக கூறும் பா.ஜ.க



(புதுடில்லி)


வரும் லோக்சபா தேர்தலில் பா.ஜ.வின் பிரதமர் வேட்பாளர் யார் என்பது குறித்து தேர்வு செய்வதற்கு இன்னும்நேரம் உள்ளது என பா.ஜ. கூறியுள்ளது.

அடுத்த லோக்சபா தேர்தலில் பா.ஜ.வின் பிரதமர் வேட்பாளர் யார் என்பது குறித்து, அந்தக் கட்சியின் மேலிடத் தலைவர்களுக்கு இடையிலும் பா.ஜ. கூட்டணி கட்சிகளுக்கு இடையிலும் கருத்து வேறுபாடு நிலவுகிறது.அருண் ஜெட்லி, சுஷ்மா சுவராஜ் போன்ற தலைவர்களுடன், குஜராத் முதல்வர் நரேந்திர மோடியின் பெயரும் பா.ஜ.வின் பிரதமர் வேட்பாளர் பதவிக்கு அடிபடுகி றது

குஜராத் சட்டசபை தேர்தலில் பிரசாரம் செய்த சுஷ்மா சுவராஜ் நாட்டின் அடுத்த பிரதமராவதற்கான அனைத்து தகுதிகளும், நரேந்திர மோடிக்கு உள்ளன என்றார். இந்தச் சர்ச்சைக்கு கடிவாளம் போடும் முயற்சியில் பா.ஜ. இறங்கியுள்ளது.

இதையடுத்து கட்சியின் துணைத் தலைவர் முக்தார் அப்பாஸ் நக்வி கூறியதாவது; கட்சியின் பிரதமர் வேட்பாளர் யார் என்பது பற்றிய சர்ச்சை இப்போதைய நிலையில் அவசியமில்லை. பிர-தமர் பதவிக்கு தகுதியான தலைவர்கள், பா.ஜ.வில் அதிகம் உள்ளனர். அடுத்த தேர்தலுக்கான கட்சியின் பிரதமர் வேட்பாளர் யார் என்பதை நேரம் வரும்போது அறிவிப்போம். இந்த விஷயத்தில் அவசரம் காட்ட மாட்டோம். என அவர் கூறினார்.

# இருதரப்பு பேச்சிற்காக சிவ்சங்கர் மேனன் சீனா பயணம்!



இந்தியாவின் தேசிய பாது காப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் 3 நாள் பயணமாக நேற்று முன்தினம் சீனாவிற்குச் சென்றுள்ளார். அங்கு ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியினரால் கடந்த மாதம் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய தலைவர்களை சந்தித்து பேசுகி றார். தற்போதைய ஜனாதிபதி ஹூ ஜிந்தாவோ தலைமையி லான நிர்வாகத்தை தொடர்ந்து அடுத்து ஆட்சிக்கு வர இருக்கும் புதிய தலைவர்களுடனும் அவர் சந்தித்துப் பேசுகிறார்.

மேலும், வரும் மார்ச்சில் ஓய்வு பெற இருக்கும் சீனாவின் பாதுகாப்பு ஆலோசகரான டாய் பிங்கு வோவையும் அவர் இந்தப் பயணத்தில் சந்திக்கிறார். இந்தச் சந்திப்பின்போது, இரு தரப்பு உறவுகள் குறித்தும், இரு நாடுகளின் எல்லை விவகாரம் குறித்தும் அவர் பேச்சுவார்த்தை நடத்துகிறார்.




# விண்வெளித்துறை ஆராய்ச்சியில் மாணவர்களின் ஈடுபாடு அவசியம்

## சுனிதா வில்லியம்ஸ் தெரிவிப்பு



விண்வெளி ஆராய்ச்சியில் இந்திய மாணவர்கள் ஆர்வம் காட்ட வேண்டுமென இந்திய வம்சாவளிப் பெண்ணான சுனிதா வில்லியம்ஸ் (வயது - 47), கூறியிருக்கிறார்.

சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி மையத்திலிருந்து சமீபத்தில் பூமிக்கு வந்த சுனிதா, இந்தியச் செய்தி நிறுவனமொன்றிற்கு அளித்த பேட்டியின் போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.


சுனிதாவின் தந்தை குஜராத் மாநிலத்தை பிறப்பிடமாகக் கொண்டவர் என்பதால் சர்வ தேச விண்வெளி நிலையத்தில் பணியில் இருந்த சமயம் இந்தியாவை மிக அழகாக புகைப்படமெடுத்துள்ளதாக அவர் கூறினார்.

குஜராத் மாநிலத்தின் சவுராஷ்டிரா கடலோரப்பகுதி, மும்பை, இமயமலை, டில்லி, பஞ்சாப், கொல்கத்தா, பிரம்மபுத்ரா, கங்கை ஆகிய முக்கிய இடங்களை புகைப்படமெடுத்துள்ளார்.

இந்தியா மனித வளம் கொண்ட நாடு என்றும் இந்திய மாணவர்கள் விண்வெளி ஆராய்ச்சியில் ஈடுபட ஆர்வம் காட்டவேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

# காங்கிரஸ் மீண்டும் வென்றால் அடுத்த பிரதமர் ராகுல் தான்

## மத்திய அமைச்சர் சிந்தியா தெரிவிப்பு



2014ஆம் ஆண்டு லோக்சபா தேர்தலில் காங்கிரஸ் மீண்டும் வெற்றி பெற்றால் அடுத்த பிரதமர் ராகுல் தான் என மத்திய அமைச்சர் சிந்தியா கூறினார். குஜராத் சட்டமன்ற தேர்தலையொட்டி நேற்று முன்தினம் சூரத் நகரில் காங்கிரஸ் கட்சி சார்பில் பிரசாரப் பொதுக்கூட்டம் நடந்தது. இதில் மத்திய அமைச்சர் ஜோதிராதித்யா சிந்தியா கலந்து கொண்டு காங்கிரஸ். வேட்பாளரை ஆதரித்து பிரசாரம் செய்தார். பின்னர் நிருபர்களிடம் .சிந்தியா கூறியதாவது;

குஜராத் மாநிலத்தில் முதல்வர் மோடி ஆட்சியின் போது தான் வளர்ச்சி அடைந்ததாக பா.ஜ.வினர் கூறி வருகின்றனர். இது பொய்யானது. கடந்த 100 ஆண்டுகளாக இம்மாநிலம் பெரும் வளர்ச்சியை நோக்கிதான் சென்று கொண்டிருக்கிறது. இடையில் வந்த நரேந்திர மோடி குஜராத் மாநிலத்திற்காக பெரிதாக எதுவும் செய்யவில்லை.

வரப்போகும் 2014ஆம் ஆண்டு லோக்சபா தேர்தலில் காங்கிரஸ். தலைவர் சோனியா தலைமையில் மீண்டும் ஆட்சி அமைந்தால் சந்தேகமில்லாமல் ராகுல் தான் பிரதமராக வருவார். அவரது தலைமையின் கீழ் மத்தியில் மீண்டும் காங்கிரஸ் சிறப்பான ஆட்சி அமைக்கும். அவர் பிரதமர் பதவி யை ஏற்க வேண்டும் என நான் இப்போதே வாழ்த்து தெரிவிக்கிறேன் என்றார்.


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் : ..............................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


# சிவசேனா தலைவர் பதவியை ஏற்க உத்தவ் தாக்கரே அடியோடு மறுப்பு!

சிவசேனா தலைவர் பதவியை ஏற்க அக்கட்சியின் செயல் தலைவர் உத்தவ் தாக்கரே மறுத்துள்ளார். சிவசேனாவுக்கு வேறு யாரும் தலைவராக ஆக முடியாது என்றும் தன் தந்தை பால்தாக்கரே ஒருவர்தான் தலைவராக இருக்க முடியும் என்றும் உத்தவ் கூறியுள்ளார்.

பால்தாக்கரே கடந்த மாதம் 17ஆம் திகதி காலமானார். மறுநாள் நவம்பர் 18ஆம் திகதி தாதர், சிவாஜி பார்க்கில் அவருடைய உடல் முழு அரசு மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது. அவர் மறைவுக்கு பிறகு முதல் முறையாக உத்தவ் தாக்கரே தமது கட்சிப் பத்திரிகையான சாம்னாவுக்கு பேட்டியளித்துள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

சிவசேனாவின் ஒரே தலைவர் பால்தாக்கரே தான். வேறு யாரும் அந்த இடத்துக்கு வர முடியாது. பால்தாக்கரேக்கு நினைவு சின்னம் அமைப்பது குறித்த சர்ச்சை தேவையற்றது இந்த சர்ச்சையில் நான் சம்பந்தப்பட விரும்பவில்லை.

மகாராட்டிராவில் ஆட்சியை பிடித்து இதை ஒரு முன்னேறிய, வலுவான மாநிலமாக மாற்ற வேண்டும் என்ற பால்தாக்கரேயின் கனவை சிவ-சேனா நிச்சயமாக நிறைவேற்றும். இவ்வாறு உத்தவ் கூறியிருக்கிறார்.

# பலஸ்தீனர்களுக்கு தனிநாடு; ஜனாதிபதி அப்பாஸ் மகிழ்ச்சி



எங்களுக்கென்று தற்போது நாடொன்று உள்ளது என பலஸ தீன ஜனாதிபதி முகமது அப் பாஸ் தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடான இஸ் ரேல்- பலஸ்தீன பிரச்சினை கடந்த பல ஆண்டுகளாக இருந்து வரு கிறது. பலஸ்தீனத்தின் தனி நாடு கோரிக்கையும் வலுத்து வருகிறது.

இந்நிலையில் ஐ.நா பொதுச் சபைக்கூட்டத்தில் நடந்த வாக் கெடுப்பில், பலஸ்தீனத்திற்கு உறுப்பினர் அல்லாத கண் காணிப்பாளர் நாடு என்ற அந் தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

அந்தஸ்தைப்பெற்ற பின்னர், பலஸ்தீனம் திரும்பிய ஜனாதி பதிக்கு பெரும் வரவேற்பு அளிக கப்பட்டது.

பின்னர் அவர் பேசுகையில், நாம் வெற்றி பெற்று விட்டோம், இனி பலஸ்தீனம் தனிநாடு தான்.

இது பலஸ்தீனியர்களின் ஒற்றுமைக்கு கிடைத்த வெற்றி. இதனை நாம் தற்போது கொண் டாடும் தருணம் வந்துவிட்டது.

நம்மிடம் இருந்த பிரிவி னைக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டது ஐ.நா. இது வரலாற்று சிறப்புமிக்க வெற்றி என்றார்.

இதற்கு முன்னதாக பலஸ் தீன விடுதலை இயக்கத் தலை வர் யாசர் அராபத் நினைவிடம் சென்று அப்பாஸ் அஞ்சலி செலுத்தினார்.

# பாகிஸ்தான் கராச்சியிலுள்ள இராமர் கோவில் இடிப்பு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் கராச்சி பகுதியில் உள்ள இராமர் கோவில் இடிக் கப்பட்டதைக்கண்டித்து அப்பகுதியில் உள்ள இந்துக்கள் போராட்டம் நடத்தினர்.

இந்தியா- பாகிஸ்தான் பிரிவினைக்கு பின்னர் பாகிஸ்தானில் உள்ள பல கோவில்கள் இடிக்கப்பட்டன.


இந்நிலையில் கராச்சியின் சோல்ஜர் பஜார் பகுதியில் உள்ள இராமபிரான் கோவில் இடிக்கப்பட்டது, மேலும் அக்கோவிலை சுற்றியுள்ள இந்துக்களின் வீடுகளையும் இடித்து தரைமட்டமாக் கினர். அத்துடன் கோவில் சிலைகள் மீது அணிவிக்கப்பட்டிருந்த தங்க கிரீடம் மற்றும் நகைகளை கட்டுமான நிறுவனத்தினர் எடுத்துச் சென்று விட்டதாக கூறப்படுகிறது.

இதனைத் தடுக்க முயன்ற இந்துக்களை சுட்டு விடுவதாக மிரட்டியுள்ளனர்.

இதனால் இந்துக்கள் இணைந்து கராச்சி பிரஸ் கிளப் அருகே நேற்று முன்தினம் போராட்டம் நடத்தினர். இதுகுறித்து அப்பகுதி நிர்வாகம் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை எனவும் குற்றம் சுமத்தி உள்ளனர்.

உலகச் செய்திகள்

# ஹபீஸ் சயீத்திற்கு எதிரான ஆதாரம் கொடுத்தால் நடவடிக்கை



மும்பைத் தாக்குதலை நடத்திய லஷ்கர் இ தொய்பா தீவிரவாத தலைவர் ஹபீஸ் சயீதுக்கு எதி ரான ஆதாரங்களைக் கொடுத்தால் நடவடிக்கை எடுப்போம் என்று பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சர் ஹினா ரபானி கர் கூறி யுள்ளார்.

பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் ஹினா ரபானி கர் இது குறித்து கூறுகையில், மும்பைத்தாக்குதலில் லஷ்கர் இ தொய்பா தீவிரவாதிகளுக்கு தொடர்பு இருப்பதாக இந்தியா குற்றம் சாட்டி வருகிறது. எனவே ஹபீஸ் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால் அவருக்கு எதிராக தகுந்த ஆதாரங்களை இந்தியா கொடுத்தாக வேண்டும்.

இதனை அடுத்து நீதிமன்ற காவலில் சிறையில் இருக்கும் ஹபீஸ் சயீத் மீது பாகிஸ்தான் தகுந்த நடவடிக்கையை எடுக்கும் என அவர் கூறியுள்ளார்.

# கடாபியால் கொல்லப்பட்ட முன்னாள் வெளியுறவு அமைச்சர்

## சடலம் 19 ஆண்டுகளாக பிரேத அறையில்.

(திரிபோலி)

லிபிய முன்னாள் ஜனாதிபதி கடாபியின் அரசில் முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்ச ராக இருந்தவர் மன்சூர் அல்- இகியா. இவர் கடாபிக்கு எதி ராக செயற்படத் தொடங்கிய வுடன் கடந்த 1993ஆம் ஆண்டு முதல் திடீரென மாயமாகி விட் டார்.

அவர் நாட்டை விட்டுத் தப்பி ஓடி யதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவர் கடாபியால் கொலை செய்யப்பட்டு உடல் உளவுத்துறை தலைமை அலுவலகத்தின் பிண வறையில் வைக்கப்பட்டிருந் தது கண்டுபிடிக்கப்பட்டது. அது வும் ஓராண்டு, ஈராண்டு அல்ல, 19 ஆண்டுகள் பிணவறையில் வைக்கப்பட்டிருந்தது.

இந்தத் தகவலை கடாபி அர சில் உளவுத்துறைத்தலைவராக இருந்த அப்சல்லா அல்-செனூசி தெரிவித்தார். இவர் கடாபி கொல் லப்பட்ட பிறகு தற்போதைய அரசால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள் ளார்.

இதற்கிடையே கிகியாவின் உடல் அடக்கம் நேற்று நடை பெற்றது. முன்னதாக அவரது உடல் பிரேத பரிசோதனை செய் யப்பட்டது. அதில் அவரது மார் பில் கத்திக்குத்து காயங்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

# வகுப்பறைக்கு துப்பாக்கிகளுடன் வருகை தந்த ஆசிரியரால் பரபரப்பு



சீனாவில் பல்கலைகழக ஆசிரி யர் ஒருவர், 30 இயந்திரத் துப்பாக் கிகளுடன் வகுப்பறைக்கு வந்த தால் பரபரப்பு ஏற்பட்டது.

சீனாவின் நான்ஜிங் பல்கலைக் கழகத்தின் அறிவியல் தொழில்நுட் பத்துறை பேராசிரியர் வூ.

இவர் கடந்த வாரம் ஏ.கே.47 ரக துப்பாக்கிகளுடன் வகுப்பறைக் குள் நுழைந்தார். 30 துப்பாக்கிக ளுடன் இவர் வகுப்பறைக்கு வந் ததைக் கண்ட மாணவர்கள் ஆச்சரி யம் அடைந்தனர்.

ஆயுதம் குறித்த வகுப்பு என்ப தால், மாணவர்களுக்கு நேரிடை பயிற்சி அளிப்பதற்காக இவர் துப் பாக்கிகளை எடுத்து வந்துள்ளார். இந்த துப்பாக்கிகளை மாணவர்கள் தனித்தனியாக கழற்றி மீண்டும் ஒன்று சேர்த்தனர்.

இது குறித்து பல்கலைக் கழக நிர்வாகிகள் குறிப் பிடுகையில், பொலிஸாரின் அனுமதியுடன்தான், இந்த துப்பாக்கிகள் வகுப்பறைக்கு எடுத்து வரப்பட்டன.

வகுப்பறைக்கு வெளியே இந்த துப்பாக்கிகளை பயன் படுத்த யாருக்கும் அனுமதி யில்லை. தீவிர கண்காணிப்பு டன்தான் இந்த வகுப்பு நடத் தப்பட்டது என்றனர்.

# ரொக்கெட் ஏவும் பணிக்காக வடகொரியாவிற்கு உதவும் ஈரான்



ரொக்கெட்டை ஏவுவதற்கு வடகொரி யாவுக்கு ஈரான் அதிகாரிகள் உதவி புரிவதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

வடகொரியா கடந்த ஏப்ரல் மாதம் ஏவிய ரொக்கெட் தோல்வியில் முடிந்தது.

இதனையடுத்து தனது இரண்டாவது ரொக்கெட்டை ஏவும் பணியில் வடகொ ரியா தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

இந்த் புதிய ரொக்கெட் வரும் 10ஆம் திகதிக்கு மேல் 22ஆம் திகதிக்குள் ஏவப்படும் எனத் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இந்தப் பணிகளில் ஈரான் நாட்டு அதிகாரிகள் தீவிரமாக ஈடு பட்டு வருவதாக ஜப்பான் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அப்பத்திரிக்கையில் வெளியான செய்தியில், ஈரான் நாட்டு இராணுவ அமைச்சகத்தைச் சேர்ந்த 4 நிபுணர்கள் வட கொரியா சென்று ஏவுதளத் தில் முகாமிட்டு பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். மேற் கத்தய நாடுகளின் தூதரகம் மூலம் இத்தகவல் தெரிய வந்தது என்று குறிப்பிட்டுள் ளது.

ஈரானும் வடகொரியாவும் இந்த ஆண்டு தொடக்கத்தில் அறிவியல், தொழில்நுட்ப ஒப்பந் தம் ஒன்றைச் செய்து கொண் டன.

அதன் அடிப்படையில் ஏவு கணை, ரொக்கெட் மற்றும் அணுசக்தி ஒத்துழைப்பை வழங்கி வருவதாகக் கூறப்படு கிறது.



மியான்மர் நாட்டின் சீன ஆதரவுடன் இயங்கி வரும் காப்பர் ஆலையில், சமீபத்தில் நிர்வாகத்திற்கும், தொழிலா ளர்களுக்குமிடையே மோதல் போக்கு உருவானது. எதிர்க் கட்சித் தலைவர் ஆங் சாங் சூகி, இருதரப்பிலும் பேச்சு வார்த்தை நடத்தினார். இதன் மூலம் இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டது. நிர்வாக அதி காரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி முடித்துவிட்டு திரும் பும் ஆங் சாங் சூகிக்கு, அவ ரது ஆதரவாளர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

# மேலதிக ஆசிரியர்கள் யாழில் இல்லை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

(திருநெல்வேலி)

யாழ்.மாவட்டத்தில் மேலதிக ஆசிரியர்கள் இல்லை எனவும், வன்னி மாவட்டத்தில் மட்டுமே ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ளனர் எனவும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் சரா புவனஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை கண்டி வீதியில் உள்ள சங்கத்தின் தலைமைப் பணிமனையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வன்னி மாவட்டத்தில் 139 தொண்டர் ஆசிரியர்கள் பல வருடங்களாக எந்தவித வேதனமுமின்றி பல இன்னல்களின் மத்தியில் பாடசாலைகளில் பணியாற்றி வருகின்றார்கள். கல்வியியற் கல்லூரியிலிருந்து ஆசிரியர் பயிற்சி பெற்றுப் பலர் வெளி யேறியுள்ளார்கள். பட்டதாரிகள் பலர் உள்ளார்கள். இவர்களுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படுவதன் மூலம் ஆசிரியர் பற்றாக்குறை யைத் தீர்த்துக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

வவுனியா தெற்கு வலயத்தில் 112 ஆசிரியர்களும், மன்னாரில் 200 ஆசிரியர்களும், மடு வலயத்தில் 99 ஆசிரியர்களும் மேலதிகமாக உள்ளார்கள் எனக் குறிப்பிட்ட பொதுச் செயலாளர் எந்தவொரு ஆசிரியரதும் சம்மதமின்றி அவரை இடமாற்றம் செய்ய முடியாது எனக் கூறினார். ஆசிரியர் சேவைக்குச் செல்லும் ஒருவர் மனப்பூர்வமாகத் தனது கல்விச் சேவையில் ஈடுபட வேண்டுமானால் அவரைக் கட்டாய சேவை செய்யுமாறு இடமாற்றம் செய்யக்கூடாது என அவர் தெரிவித்தார்.

குழந்தைகளைப் பராமரிக்க வேண்டிய தாய்மார்கள், நீண்ட வாரம் பயணம் செய்ய முடியாதவர்கள், கர்ப்பிணிகள் போன்ற ஆசிரியர்கள் பலர் நீண்ட தூரப் பாடசாலைகளுக்கு அனுப்பப்படுதல் தவிர்க்கப்படல் வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (137)

# பதவியுயர்வு பெற்றுள்ளார்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்தில் மாணவர் கல்விப் பிரிவுக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளராக சேவையாற்றி வந்த எஸ்.கைலாசநாதன் வடமாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

பதவியுயர்வினை வடமாகாணக் கல்வியமைச்சு வழங்கியுள்ளது. இவரது பதவியுயர்வு கடந்த 03.12.2012 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளதாக நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர் ஆசிரியராக, அதிபராக கோட்டக்கல்விப் பணிப்பாளராகி வலயக் கல்விப் பணிப்பாளராகப் பல பதவியுயர்வுகளைப் பெற்று தற்பொழுது வடமாகாண கல்வித் திணைக்களத்திலுள்ள முறை சாரக் கல்விப் பிரிவுக்குரிய உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றுள்ளார் என்பது சிறப்பம்சமாகும்.

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தில் இப்பிரிவுக்கு உதவிக் கல்விப் பணிப்பாளராகச் சேவையாற்றி வந்த சி.கமல்ராஜ் கடந்த மாதம் முதல் முல்லைத்தீவு கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராக மாற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (06)

# கிழக்கிலும் ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

கைது செய்யப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர்களை விடுவிக்கக் கோரியும் பல்கலைக்கழக நடவடிக்கைகளில் இராணுவ தலையீட்டை நிறுத்தக் கோரியும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் வந்தாறுமூலை பல்கலைக்கழக வளாகத்தினுள் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## கிளிநொச்சியில்...

கணிசமான அளவு அதிகரித்துள்ளதாகவும் அவர் தமது உரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, பொருளாதார அபிவிருத்திச் அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பில் கேட்டறிந்து கொண்ட அமைச்சர், கிளிநொச்சி மாவட்டத்தில் கால் நடை வளர்ப்பை ஊக்கப்படுத்தி அதனூடாக துறைசார்ந்தவர்களது வாழ்வாதாரத்தையும், பொருளாதாரத்தையும் மேம்படுத்த முடியும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

பிராந்திய நகர அபிவிருத்தி அதிகார சபையின் செயற்றிட்டங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்), கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், மாவட்ட மேலதிக அரச அதிபர் ஸ்ரீனிவாசன் மற்றும் மாகாண செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட திணைக்களங்களின் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# பத்தாயிரம் பேர் உண்ணாவிரதம்

எதிர்வரும் 31ஆம் திகதி 10 ஆயிரம் பேருடன் நாடாளுமன்ற வீதியில் அமர்ந்து உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அந்த உண்ணாவிரத போராட்டத்தில் தானே முதலாவது ஆளாக அமரவுள்ளதாகவும் கோட்டை மேயர் ஜனக்க ரணவக்க தெரிவித்தார்.

கோட்டை நகரசபை பிரதேசத்தில் தற்போதும் போதைப் பொருள் வியாபாரம் நடைபெறுவதாக ஜனக்க ரணவக்க சுட்டிக் காட்டினார்.

கோட்டை ஹோவாவிதாரன வித்தியாலயத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இப்போதைப் பொருள் விற்பனை நிலையங்கள் குறித்து எந்தவொரு நடவடிக்கையையும் பொலிஸார் எடுக்கவில்லை எனவும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே தாம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் கோட்டை மேயர் மேலும் தெரிவித்தார்.

# அறிவுறுத்தல் கூட்டம்

எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் போது பரீட்சைப் பணிகளில் கடமையாற்றவுள்ள உத்தியோகத்தர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் 05 ஆம், 06 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளன.

இவ் அறிவுறுத்தல் கூட்டத்தில் பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டு பரீட்சை தொடர்பான ஒழுங்கு நடைமுறைகள் பற்றி உத்தியோகஸ்தர்களுக்கு பல்வேறு அறிவுறுத்தல்களை வழங்க இருப்பதனால் இப்பரீட்சையின் போது பரீட்சை நிலைய இணைப்பாளர்கள், உதவி இணைப்பாளர்கள், மேற்பார்வையாளர்கள், உதவி மேற்பார்வையாளர்கள் போன்ற பதவிகளில் கடமையாற்றவுள்ளவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் பரீட்சைக் கடமைகளில் பங்குபற்றவுள்ள உத்தியோகத்தர்களுக்கு இது தொடர்பாக தனித்தனியான கடிதங்களும் அனுப்பி வைக்கப்பட்டடுள்ளன. (03, 06)

# யாழ்.இந்து மகளிர் முன்னாள் அதிபருக்கு பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி வேதநாயகி பேரின்பநாதன் வலிகாமம் கல்வி வலயத்தின் மாணவர் அபிவிருத்திக்குரிய பிரதிக் கல்விப் பணிப்பாளராக வடமாகாணக் கல்வியமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் நேற்று முதல் அவருக்கு வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அவர் தனது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். இவர் அண்மையில் கல்வி நிர்வாக சேவை தரம் மூன்றுக்கான தகுதியினைப் பெற்று வடமாகாணக் கல்வியமைச்சில் இணைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் அதிபராக நீண்ட காலம் சேவையாற்றி மாணவர் கல்வியில் பல சாதனைகளைப் படைத்ததுடன் பாடசாலையில் பல அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (06)

## ஷிராணிக்கு...

றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

நீதித்துறைக்கான சுதந்திரத்தை பாதுகாப்பதற்காக இந்த மனுவை தாக்கல் செய்ததா கவும், நீதித்துறைக்கான சுதந்திரம் பாதிக்கப்படும் போது சட்டத்தரணிகள் தமது கடமையை உரிய வகையில் நிறைவேற்ற முடியாது எனவும் அவர் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

ஆயினும் இந்த மனுவின் வீச்சத்தை நீதிமன்றம் (பீ) மற்றும் (ஜி)ஆகிய இரண்டு பிரிவுகளின் கீழ் மட்டுப்படுத்தியது.

பிரிவு(பீ) நிலையியற் கட்டளை '78 ஏ'யில் கூறப்பட்டுள்ள குற்றப் பிரேரணை செயன்முறை அரசியலமைப்பின் 4 (சீ)க்கு முரணானது என அறிவிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

பிரிவு (ஜி) அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அப்பால் நிலையியற் கட்டளை '78 ஏ' க்கு சென்றுள்ளது என அறிவிக்குமாறு கேட்டுள்ளது. பிரதிவாதிகள் தங்களுடைய ஆட்சேபனைகளை நான்கு வாரங்களுக்குள்ளும், மனுக்கள் மீதான பதில் சத்தியக்கடதாசிகளை மனுதாரர் இரண்டு வாரத்திற்குள்ளும் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் நீதிமன்றம் அறிவித்துள்ளது. இதனையடுத்து மனு மீதான பூர்வாங்க விசாரணை 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானித்த நீதிமன்றம் வழக்கையும் அன்றைய தினத்திற்கே ஒத்திவைத்தது.

# கணிப்பீட்டு அறிக்கை படிவங்கள் தயார்

கல்விப் பொதுத்தராதரப் பரீட்சைக்கு இம்முறை முதல் தடவையாகத் தோற்றுகின்ற பாடசாலைப் பரீட்சார்த்திகளின் பாடசாலை மட்டக் பணிப்பீடுகளின் சராசரிப் புள்ளிகளை பதிவு செய்து கொள்வதற்கான கணிப்பீட்டு அறிக்கைப் படிவங்கள் பரீட்சைத் திணைக்களத்தினால் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடத்திற்குமாக தனித்தனியாக தயாரிக்கப்பட்டு பரீட்சைத் திணைக்களத்தினால் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இப்படிவங்களினை அவற்றுடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய அவற்றைச் சரியாகவும், நேர்த்தியாகவும் பதிவு செய்து உரிய வகையில் பொதி செய்து எதிர்வரும் 06 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ வலயக் கல்வி அலுவலகங்களில் ஒப்படைக்குமாறு அதிபர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## நாவற்குழியில்....

சேர்ந்த ஆர்.எம்.றிஸ்வான் (வயது-30) விசுவமடு மகா வித்தியாலய ஆசிரியரான உரும்பிராயைச் சேர்ந்த திருமதி கவிதா ரஜீவன் (வயது-34) நவாலியைச் சேர்ந்த ஜெ.சுதர்சினி (வயது-27) ஆகியோர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் விபத்துப் பிரிவில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்தை அடுத்து ஸ்தலத்தில் இருந்து தப்பியோடிய தனியார் பஸ் வண்டியின் சாரதி சாவகச்சேரி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இலங்கைப் போக்குவரத்துச்சபை பஸ் வண்டியில் பயணித்தவர்களே காயங்களுக்குள்ளாகியிருப்பதாகவும் தெரியவருகின்றது. (பா, இ, 138)

## பல்கலைக்கழக....

வழியிலான போராட்டத்திற்கு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

இவ்விடயம் குறித்து யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் ஆசிரியர் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் போது, பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதுடன், மகஜர் ஒன்றினையும் துணைவேந்தருக்கு கையளித்துள்ளதாக அவர்கள் கூறினர்.

பல்கலைக்கழக வளாகத்தினை சுற்றியுள்ள இராணுவ மற்றும் பொலிஸ் காவலரண்களை அகற்றுவதற்கும், கைதுசெய்யப்பட்ட மாணவர்களை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், குறித்த மகஜரை, அமைச்சர் மற்றும் உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கவுள்ளதாகவும் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் மேலும் கூறினர்.

## யாழில் புதிய...

நேற்று ஏற்றுக்கொண்டார்.

யாழ்.பொலிஸ் அத்தியட்சகராகக் கடமையாற்றி வந்த சிறிகுகணேசன் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளதையடுத்து அவரின் பதவிக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (02)

## கூட்டமைப்பு...

இவர் நீண்ட நாட்களாக சிறுநீரகக் கோளாறினால் பாதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவருக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் அவர் கூறினார்.

## மாணவியின்...

களின் பின்னர் உறவினர்களிடம் நேற்றுப் பிற்பகல் ஒப்படைக்கப்பட்டதாக யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (பா)

# வாழ்வாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு
# ஊரத்தி மக்கள் பெரும் மகிழ்ச்சி




(அராலி)

அராலிப் பகுதியில் உள்ள ஊரத்தி கிராம மக்களின் வாழ்வாதாரத்திற்கு வழிசமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

நீண்டகாலமாக இழுபட்டு வந்த இம் மக்களின் வாழ்வாதாரத்திற்கு மிகவும் அவசியமாகத் தேவைப்பட்ட கள்ளு விற்பனை நிலையம் இப்போது திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இதனால இம்மக்களின் நாளாந்த வருமானமும் வாழ்வாதாரமும் உறுதி செயயப்பட்டிருக்கிறது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலிலும், நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரின் ஆலோசனையின் பேரிலும், வலி. மேற்குப் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரான பாலகிருஸ்ணன் (ஜீவன்) மேற்கொண்ட முயற்சி காரணமாக புதிய கள்ளு விற்பனை நிலையம் கடந்த வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

# தகுதி இழக்கும் பஸ்வண்டிகள்



இலங்கை போக்குவரத்துச் சபையில் உள்ள 1800 பஸ்கள் போக்குவரத்திற்குத் தகுதி அற்றவை என போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் றோசி சேனாநாயக்க வினவிய கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இந்தத் தகவலை தெரிவித்தார். 2013 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. இதன்போதே அவர் இதனைத் தெரிவித்தார். வரவு - செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் 8 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

## சுழற்சி முறையில் பணிப்புறக்கணிப்பு

(கொழும்பு)

புகையிரத ஊழியர்கள் 24 மணிநேர சுழற்சி முறையிலான பணிப் பகிஷ்கரிப்பை மேற்கொள்ள தீர்மானித்துள்ளனர். இன்று நள்ளிரவில் இருந்து இந்த பணிப் பகிஷ்கரிப்பை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சம்பள உயர்வு கோரியே இவர்கள் பணிபபகிஷகரிப்பை மேற்கொளளவுள்ளனர்.

# நீதவானுக்கு நேர்ந்த கதி

நீதவானின் பணப்பை பிற்பொக்கட் அடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று கொழும்பு கோட்டை ரயில நிலையத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவரை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்துள்ளனர். கொழும்பில் நடைபெறும் கூட்டத்திற்கு நீதிச்சேவை ஆணைக்குழுவின் அழைப்பின் பேரில் வருகை தந்தபோதே நீதவானின் பணப்பை பிற்பொக்கட் அடிக்கப்பட்டுள்ளது. வவுனியாவிலிருந்து ரயிலில் வருகைதந்த வவுனியா நீதவான் எலக்ஸ் ராஜாவின் பணப்பையே இவ்வாறு பிற்பொக்கட் அடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இருவரும் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் என்று தெரிவித்த பொலிஸார் அவ்விருவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# சீரற்ற கடமை; பொதுமக்கள் விசனம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சில கிராம அலுவலர் பிரிவுகளில் பதில் கடமையாற்றும் கிராம அலுவலர்கள் சீரான முறையில் கடமையாற்றுவதில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இப்பிரதேசத்தில் உள்ள சில கிராம அலுவலர் பிரிவுகளில் முன்னர் கடமையாற்றிய கிராம அலுவலர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள நிலையில் பதில் கடமையாக கிராம அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர்.

இந்நிலையில் இக்கிராம அலுவலர்கள் அலுவலகங்களுக்குச் சமூகமளிப்பதில்லை எனவும் அவ்வாறு வருகை தந்தாலும் குறிப்பிட்ட நேரத்திற்குள் வந்துசென்று விடுவதாகவும் இதனால் தாம் உதவித்திட்டங்கள், பதிவுகள் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாது இருப்பதாகவும் தெரிவிக்கும் இக்கிராம மக்கள் பல தடவை தாம் கிராம அலுவலகங்களுக்குச் சென்று கிராம அலுவலர் வராமையால் திரும்பிச் சென்றிருப்பதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

மீள்குடியேறி வசிக்கும் நிலையில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் மற்றும் வீட்டுத்திட்டப் பதிவுகள் உள்ளிட்ட இதர தேவைகளைக் கிராம அலுவலரினூடாக முன்னெடுக்கப்பட வேண்டிய நிலையில் கிராம அலுவலர்களின் பொறுப்பற்ற செயற்பாட்டால் தாம் சிரமங்களுக்குள்ளாவதாகத் தெரிவிக்கின்றனர். எனவே இவ் விடயத்தில் உரியவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என இக்கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (77)

# இடைக்காடு கொலை வழக்கு சூடுபறக்கும் விவாதம்

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜெ.விஸ்வநாதன் முன்னிலையில் ஜூறி சபையின் முன்பாக நடைபெற்றுவரும் இடைக்காடு கொலை வழக்கில் இன்று செவ்வாய்க்கிழமை இரு தரப்பு தொகுப்புரைகள் ஆரம்பமாகவுள்ளன.

ஆறு தினங்களாக நடைபெற்றுவந்த வழக்கு விசாரணை நேற்று ஏழாவது தினமாக மீண்டும் நடைபெற்றது. இவ்வழக்கில் இடைக்காட்டைச் சேர்ந்த தர்மராஜா சிவானந்தன் என்பவரை அச்சுவேலி தம்பாலையைச் சேர்ந்த ஐந்து நபர்கள் கொலை செய்ததாகவும், அதே இடத்தைச் சேர்ந்த நான்கு நபர்களுக்கு சிறு காயம் விளைவித்ததாகவும் சட்டமா அதிபரினால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. மொத்தம் 11 குற்றச்சாட்டுக்கள் எதிரிகளுக்கு எதிராகத் தொடுக்கப்பட்டிருந்தது.

எதிரி தரப்பில் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் எதிரிகள் சாட்சியமளித்தனர். அச்சுவேலி மாவட்ட வைத்திய அதிகாரி, யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மற்றும் தம்பாலை கிராமத்தைச் சேர்ந்த ஆறு நபர்கள், அச்சுவேலியைச் சேர்ந்த ஒருவர் என எதிரி தரப்பில் சாட்சியமளித்தனர். இறந்தவரின் தந்தை, உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொண்ட இரண்டு வைத்தியக் கலாநிதிகள், மூன்று பொலிஸார் என்போரும் சாட்சியமளித்தனர்.

1 ஆம், 2 ஆம், 4 ஆம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா சட்டத்தரணிகள் எஸ். சிவனேசன், ஷர்மினி விக்னேஸ்வரன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். 3 ஆம், 5 ஆம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி நிஷாந்தினி ரட்ணத்தின் அனுசரணையுடன் ஆஜரானார்.

ஜூறி சபை முன்பாக விசாரணை செய்யப்படுவதை எதிரிகள் விரும்பிய காரணத்தினாலேயே இவ்வழக்கு ஜூறி சபையினரின் முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. நான்கு ஆண்களும், மூன்று பெண்களும் ஜூறி சபையில் இடம்பெற்றுள்ளனர். (137)

# கணிப்பீட்டுப் படிவங்கள் ஒப்படைக்க அறிவுறுத்தல்

தரம் - 9 மாணவர்களின் பாடசாலை மட்டக் கணிப்பீட்டுப் படிவங்களை இவ்வார இறுதிக்குள் பூர்த்தி செய்து வலயக்கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.


தரம் - 9 மாணவர்களுக்கான மாகாண மட்டப் பொதுப் பரீட்சைகள் யாவும் நிறைவடைந்துள்ள நிலையில் கணிப்பீட்டுப் புள்ளிகளை பாடரீதியாக தொகுத்து பதிவுசெய்து கொள்வதற்காக அனுப்பி ஏற்கனவே பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள படிவங்களை உரிய முறையில் பதிவுசெய்து கொள்வதுடன் அவற்றுடன் இறுதிப் புள்ளிகளையும் சரியான முறையில் பதிவுசெய்து அனுப்பி வைக்குமாறும் மேலும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (03)

# புதிய நிர்வாகங்களை தெரிவுசெய்யுமாறு அறிவுறுதத்ல்

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சகல சனசமூக நிலையங்களும் இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் சனசமூக நிலையங்களில் புதிய நிர்வாகத் தெரிவை நடத்தவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் விபரங்களைப் பிரதேச சபைக்கும் சனசமூக நிலையங்களின் சமாசத்திற்கும் அனுப்பிவைக்க வேண்டும். சமாசத்தில் அங்கத்துவம் பெறாத சனசமூக நிலையங்கள் மேற்படி திகதிக்குள் தங்கள் அங்கத்துவத்தை உறுதிப்படுத்த வேண்டும். 2013 ஆம் ஆண்டு ஜனவரியில் சனசமூக நிலையங்களின் சமாசப் பொதுக்கூட்டம் இடம்பெறும் என ச.ச.நிலையங்களின் சமாசத் தலைவர், செயலாளர் அறிவித்துள்ளனர். (18)

# பூமியை நெருங்குகின்றன ஐந்து கிரகங்கள்




இலங்கையில் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை ஐந்து கோள்களைக் காணும் வாய்ப்புக் கிட்டியுள்ளதாக கொழும்பு பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்துள்ளார். சூரிய மண்டலத்தின் புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன் மற்றும் சனி ஆகிய கோள்களை மக்கள் காணமுடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நேற்றைய தினம் வியாழன் கோள் பூமிக்கு மிகவும் நெருக்கமாக இருந்ததாகவும் பேராசிரியர் கூறியுள்ளார்.

## மாடு வெட்டியவருக்குத் தண்டம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பகுதியில் சட்டவிரோதமாக மாடு வெட்டிய இருவருக்குத் தலா ஐயாயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வழக்கு விசாரணை நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றில் இடம்பெற்றபோது நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை விதித்துள்ளது. (116)



யாழ்ப்பாணம் கலைத்தூது கலையகத்தில் நேற்று நடைபெற்ற காலதூரிகை நடன நிகழ்வில் இந்திய துணைத் தூதுவர் வே.மகாலிங்கம் மங்கள விளக்கேற்றுவதைக் காணலாம். (27)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 டிசம்பர் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.